
# நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி

## தெணியான்



குமரன் புத்தக இல்லம்

# நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில்
# பேராசிரியர் கா.சிவத்தம்பி

**தெணியான்**

குமரன் புத்தக இல்லம்
கொழும்பு - சென்னை
2012

நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி.
தெணியான் எழுதியது

பதிப்புரிமை © 2012, தெணியான்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550, மி. அஞ்சல்: kumbhlk @gmail.com
3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6

Nensil Patintulla Ninaivukalil Perasiriyar K. Sivathamby
by Theniyaan

Published by Kumaran Book House
39, 36th Lane, Colombo -6, Tel. - 0112 364550, E.mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

Printed by Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -6

வெளியீட்டு எண்: 530

ISBN 978-955-659-344-0

# என்னுரை

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பற்றிப் பேசும் மிக வித்தியாச மான ஒரு நூலாக 'நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில், பேராசிரியர் கா.சிவத்தம்பி'என்னும் இந்நூல் அமைந்திருக்கின்றது என்பது எனது நம்பிக்கை. பேராசிரியர் அவர்களுடன் நீண்டகாலமாக நெருக்கமான பழக்கமும் நட்பும் எனக்கிருந்து வந்திருக்கின்றது. பேராசிரியர் அவர்கள் திருமணமாகி வல்வெட்டித்துறைக்கு வந்த பின்னர் உண்டான உறவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக வந்து சேர்ந்த பின்னர் மேலும் அதிகமாயிற்று. அக்காலகட்டத்தில் வாரத்தில் ஒரு தடவையாவது பேராசிரியரும் நானும் சந்தித்து ஆற அமர இருந்து பேசிக் கொண்டோம். அந்தச் சமயத்திற் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் நிறைய உண்டு. அவை யாவும் மறந்து போவதற்கு இயலாதவைகளாக நெஞ்சில் பதிந்துள்ளன.

பேராசிரியர் அவர்கள் எங்கள் மத்தியில் இன்று இல்லாத வேளையில், அவருடன் பழகி வந்த அந்த அனுபவங்களை நினைத்துப் பாரக்கையில், அந்த அனுபவங்களின் பெறுமானங்களை முன்னரிலும் ஆழமாக உணருகின்றேன். நான் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் எனக்கு மாத்திரம் உரியவை. இன்னொருவருக்குக் கிடைக்க இயலாதவை. பேராசிரியர் அவர்களின் அன்பு, நட்பு, மனிதநேயம், சமூக அக்கறை, புலமை, ஆளுமை என இன்னும் பல சிறப்புக்களை அவருடனான ஊடாட்டத்தின் மூலம் நான் விளங்கிக் கொண்டேன். பேராசிரியரிடத்தில் மிக மென்மை யான ஓர் இதயம் இருந்தது. பிறரை மதித்து நடக்கும் ஒரு பண்பாளராக அவர் வாழ்ந்தார். ஊர் நடுவே பெருகிக் கொண்டிருந்த வற்றாத நன்னீர் ஊற்றாக வளங்குன்றாது வழங்கிக் கொண்டிருந்தார்.

பேராசிரியர் பற்றி இவ்வாறான ஒரு நூல் ஒன்றினை எழுத வேண்டு மென்னும் எண்ணம் எனது மனதில் இருந்து வரவில்லை. பேராசிரியர் காலமானபோது மற்றவர்கள் போல அவர் பற்றி எழுதுவதற்கு என்னால் இயலவில்லை. பேராசிரியர் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் அவர் பற்றி நான் எழுதிய ஒரு கட்டுரையை, சர்வதேச எழுத்தாளர் மகா நாட்டின்போது இருவரும் அருகருகே அமர்ந்திருந்து பேசிக் கொண்டிருந்த வேளையில் எடுத்த புகைப்படத்துடன் பத்திரிகையில் மறுபிரசுரம் செய் தார்கள்.

பேராசிரியரை இழந்து சில மாத காலம் கழிந்த பின்னர், பிறர் அறியாத எனது அனுபவங்களை வெளியே எடுத்துச் சொல்லலாமென்று தீர்மானித்தேன். இவ்வாறு சொல்வதன் மூலம் மற்றையவர்கள் கண்டு கொள்ளாத பேராசிரியரின் மறுபக்கங்களை அறிந்து கொள்வதற்கு இது வாய்ப்பளிக்குமென நம்புகின்றேன்.

பேராசிரியருடன் பழகி வந்த காலத்து நிகழ்வுகளில் எனது நினைவில் அழியாதவைகளை நினைவு கூர்ந்து இங்கு எழுத்தில் பதிவு செய்திருக் கின்றேன். எனது நினைவில் பதிந்துள்ளவைகள் யாவையும் தவறாது இங்கு பதிவு செய்துள்ளேன் என்று கூறுவதற்கில்லை. சிலவற்றைத் தவிர்த்துவிட்டிருக்கிறேன். நெஞ்சுக்கு நெருக்கமான உறவு காரணமாக எனக்கு எடுத்துக் கூறியவைகள் எல்லாவற்றையும் நான் வெளியில் எடுத்துச் சொல்லிவிட முடியாது. சொல்லவும் கூடாது.

பேராசிரியரிடத்தில் மிக மென்மையான ஓர் இதயம் இருந்ததனைப் பலர் கண்டுகொள்ளத் தவறியமை எமது துரதிஷ்டம்.

இன்று நூலாக வெளிவரும் இந்தக் கட்டுரைகள், முன்னர் 'தினக்குரல் வாரமலரில்' தொடராக வெளிவந்திருக்கின்றன. இக்கட்டுரைகளை விருப் புடன் பிரசுரித்து வந்தவர் வாரமலர் ஆசிரியர் இ. பாரதி அவர்கள். நூலாக்கத்துக்குத் தகுந்த வண்ணம் கணினியில் பதிவு செய்து உதவியர் 'ஜீவநதி' பிரதம ஆசிரியர் எனது அன்புக்குரிய க. பரணீதரன் அவர்கள். நூலின் பின்னட்டைக் குறிப்பினை அளித்துள்ளார் எனது மதிப்புக்கும் நேசத்துக்குமுரிய பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள். குமரன் புத்தக இல்லத்தினர் இந்நூலை வெளியிடுகின்றனர். இவர்கள் அனை வருக்கும் எனது நன்றிகள்.

பேராசிரியருடனான ஊடாட்டத்தினால் எனது நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகள் பலவற்றை இன்று எழுத்துருவில் நான் பதிவு செய்துள் ளேன். இவைகள் உங்கள் நெஞ்சிலும் பதிவாக வேண்டுமென்பது எனது விருப்பம். பதிவாகும் என்று நம்புகின்றேன்.

'கலையருவி'
கரணவாய் வடக்கு
வல்வெட்டித்துறை

தெணியான்
30.04.2012

# பொருளடக்கம்

என்னுரை iii

1. சிறுகதைப் போட்டிகளுக்கு இனிமேல் எழுத வேண்டாம் 1
2. இசையைக் கேட்டுக் கொண்டே எழுதும் பழக்கமுள்ள பேராசிரியர் 7
3. 'சிவத்தம்பி' என்ற பெயரைச் சூட்டிய யோகர் சுவாமி 13
4. மரபுப் பண்டிதர்களுக்குப் பதிலடி கொடுத்த பேராசிரியர் 16
5. "காற்றோடை சண்டை போட வேண்டாம்" 20
6. பொது நிகழ்வுகளில் உரையாற்றுவது தொடர்பில் பேராசிரியர் கருத்து 23
7. நாவலர் 28
8. பேராசிரியர் கண்கலங்கிய சந்தர்ப்பம் 30
9. தேடல் மிகுந்த மாணவன் 34
10. பேராசிரியர் வித்தி தீர்மானித்த சிவத்தம்பியின் திருமணம் 36
11. துணைவேந்தருடன் விருந்து 41
12. பதுங்கு குழியில் பேராசிரியருடன் நடத்திய உரையாடல் 45
13. அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூலமாக செய்த சேவைகள் 48
14. பரீட்சையில் புள்ளியிடுவது தொடர்பில் பேராசிரியரின் கருத்து 54
15. தேவரையாளிச் சமூகம் 56
16. மணிவிழா முயற்சி 60
17. விரும்பாத இடப்பெயர்வு 65
18. பேராசிரியரின் திருநெல்வேலி வாழ்க்கை 67
19. அறிவோர் கூடலில் பேராசிரியர் 73
20. பல்கலைகழகத்துள் காணப்பட்ட எதிர்ப்புகள் 79
21. மணி விழா 83
22. மாற்றுக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பேராசிரியர் 87
23. சர்வதேச எழுத்தாளர் மாநாடு 89
24. பேராசிரியரின் இறுதிப் பதிவு 93
25. இனி யாரிடம் கேட்பேன் 100

பிள்ளை கடையில் இடையிடையே பாடிக் கொண்டிருக்கும். மாலை வேளைகளில் இசைத்தட்டுகளில் இருந்து அக்காலச் சினிமாப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருப்பது வழக்கம்.

சிவத்தம்பியும் அவருடைய நண்பர்கள் சிலரும் சேர்ந்து மாலைநேரம் அக்கடையில் தேநீர் பருகிவிட்டு சிரித்துப் பேசிய வண்ணம் வெளியே வருவதை இரண்டொரு தருணம் கண்டிருக்கின்றேன். சிலசமயம், ஆசைப் பிள்ளை கடையைத் தாண்டி, சந்திக்கு அப்பால் குத்தெதிர் மூலையிலுள்ள இலக்குமி ஸ்ரோஸ் பத்திரிகைக் கடையில் நிற்பதைப் பார்த்திருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் வரன் முறையான கல்வியைக் கற்றுத் தேறிய உயர் கல்விமான்களாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதியைப் பெற்று, பயிற்சி பெற்று வெளியேறிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் முக்கியத்துவம் குறையாத காலம். அக்காலத்தில் பல்கலைக்கழகங்களைச் சர்வகலாசாலை என்றே அழைத்தார்கள். பட்டதாரி மாணவர்களாகச் சர்வ கலாசாலை அனுமதி பெற்று பட்டதாரிகளாகக் கல்வி கற்று வெளியேறிய பட்டதாரிகளின் தொகை மிகக் குறைவு. பேராதனைச் சர்வகலாசாலையில் படித்துச் சிலர் பட்டதாரிகளாக வெளியேறினார்கள். வேறு சிலர் தமிழ்நாடு சென்று சர்வகலாசாலைகளிலும் சர்வகலாசாலைக் கல்லூரிகளிலும் கற்றுப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

சர்வகலாசாலை மாணவர்களாக இருந்தவர்கள், அவர்கள் தோற்றத்தைக் கண்டு இனங்காணத் தகுந்தவர்களாக விளங்கினார்கள். எப்பொழுதும் சுத்தமான ஆடைகள் அணிந்து, அழகாக, நாகரிகமாகத் தோன்றினார்கள். முகத்தில் ஒருவிதமான பெருமையும் தன்னம்பிக்கையும் மிதப்பும் வெளிப்பட மகிழ்ச்சியுடன் நடமாடினார்கள். நான் அப்பொழுது நெல்லியடியில் கண்டு கொண்ட சிவத்தம்பியிடத்திலும் அவர் நண்பர்களிடத்திலும் இத்தகைய நடத்தைக் கோலங்களை அவதானித்துக் கொள்ள முடிந்தது.

அந்த நண்பர்கள் மத்தியில் சிவத்தம்பி அவர்கள் சற்று வித்தியாசமான ஒருவராகத் தோன்றினார். அவர்கள் அத்தனை பேர்களுக்கு மத்தியிலும் தோற்றத்தில் உயர்ந்தவராகவும் உடல் சற்றுப் பருத்தவராகவும் சிவத்தம்பி காணப்பட்டார். அந்தத் தோற்றப் பொலிவொன்றே சிவத்தம்பியை இன்றும் நினைவில் வைத்துக் கொள்ளும் வண்ணம் மனதில் வந்து பதிந்துள்ளது.



அப்பொழுது சர்வகலாசாலைக் கல்வி என்பது என்ன என்பதனை நான் அறிய மாட்டேன். பள்ளிக் கூடத்தில் அந்தக் காலத்தில் எனக்கு கல்வி போதித்த ஆசிரியர்கள் பெரும்பாலும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாகவும் பயிற்சி பெறாதவர்களாகவும் இருந்து வந்தார்கள். சிவத்தம்பி பேராதனைச் சர்வகலாசாலையில் பட்டதாரியாகக் கல்வி பெறும் மாணவன் என்பது எனது அறிவுக்கு அப்பொழுது எட்டாத விடயம். நான் கண்டுகொண்ட இவர் தான் சிவத்தம்பி என்பது உண்மையில் அன்று எனக்குத் தெரியவராது. நான் வளர்ந்த பின்னரே அன்று பார்த்தது, சர்வகலாசாலை மாணவன் சிவத்தம்பி என்பதனை விளங்கிக் கொண்டேன்.

இந்தக் 'கண்டு கொள்ளல்' சிவத்தம்பிக்கும் எனக்குமான முதற் சந்திப்பு என்று சொல்லலாமா? நிச்சயமாக அவ்வாறு சொல்லிக் கொள்வதற்கில்லை.

அப்படியானால் எப்பொழுது முதன்முதல் சிவத்தம்பியை நான் சந்தித்தேன்?

சிவத்தம்பி நான் நேரிற் சந்திப்பதற்கு முன்னரே அவர் எழுத்துக்களை எல்லாம் தவறாது படித்து வந்திருக்கின்றேன். பள்ளி மாணவனாக இருந்த சிறுபராயம் முதல் நூல்களை வாசிக்கின்ற பழக்கம் என்னிடத்தில் இருந்து வருகின்றது. மரபுப் போராட்டம் பற்றி சிவத்தம்பி எழுதிய கட்டுரைகளை எல்லாம் ஆர்வத்துடன் படித்து வந்தேன். நான் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்று வெளியேறிய பின்னர் 1964 முதல் எழுதுவதற்கு ஆரம்பித்தேன். வட பிரதேசத்தில் இருந்து 'மல்லிகை' சஞ்சிகையை வெளிவரத் தொடங்கிய காலம் முதல் அச்சஞ்சிகையில் நான் எழுதிக் கொண்டிருந்தேன். கா.சி. அவர்களின் கட்டுரைகளும் மல்லி கையில் சிறப்பாக வெளிவந்து கொண்டிருந்தன.

பிரதேசச் சிறப்பிதழில் செப்டெம்பர் 1971 இல் வெளிவந்தது. 'யார் இந்த யாழ்ப்பாணத்தான்?' என்னும் தலைப்புடன் வெளிவந்த அந்தக் கட்டுரை எனக்குள் பெரும் அதிர்வினை உண்டாக்கியது. யாழ்ப்பாணத்து சாதிய சமூகம் பற்றி ஒளிவுமறைவின்றி வெகுதெளிவாக அந்தக் கட்டுரை பேசியது. யாழ்ப்பாணச் சமூகம் பற்றி மிக ஆழமாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்து எழுதப்பெற்ற கடடுரையாக அது விளங்கியது. சொல்லப்பட்ட கருத்து சமூக நோக்கு என்பவற்றுக்கு மேலாக அதனை எழுதிய கா.சி.யின் நேர்மையும் துணிச்சலும் வெகுவாக என்னைக் கவர்ந்தன. கா.சி.யுடன் நேரடியான அதிக பழக்கம் அக்காலத்தில் எனக்கு இல்லாத போதும்

நெஞ்சுக்கு நெருக்கமாக அப்பொழுதே நான் வந்துவிட்டேன் என்று சொல்ல வேண்டும்.

கா.சி. தமது கலாநிதிப் பட்டப் படிப்பினை நிறைவு செய்து கொண்டு நாடு திரும்பி 1971 இல் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அக்கால கட்டத்தில் இலங்கை அரசு சார்பான 'இலங்கை கலாசாரப் பேரவை' யாழ்ப்பாணத்தில் இலக்கிய விழா ஒன்றினைச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. விழாவை நடத்துவதற்கென ஒரு செயற்குழு நியமிக்கப் பெற்றது. அந்தச் செயற்குழுவின் தலைவராக கா.சி.யும் செயலாளராக டொமினிக் ஜீவாவும் செயற்பட்டார்கள். செயற் குழுவில் ஒருவனாக நானும் இருந்தேன்.

அந்தச் செயற்குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில், பெரும்பாலும் மாலை வேளையில் நடைபெறுவது வழக்கம். கூட்டம் முடிந்த பின்னர் கா.சி. தமது காரில் வல்வெட்டித்துறை நோக்கிப் புறப் படுவார். வல்வெட்டித்துறை தாண்டி சிறிது தூரம் சென்றால் நான் பிறந்த கிராமம் பொலிகண்டி. கா.சி. கூட்டம் முடிந்து புறப்படும் பொழுது தவறாது என்னை தனது காரில் ஏற்றிக் கொள்வார். அங்கிருந்து புறப்படும் போது பெரும்பாலும் இருட்டி விடும். சாரதி ஆசனத்துக்கு அருகில் நான் அமர்ந்திருப்பேன். கா.சி. என்னோடு பேசிப் பேசி மிக மெதுவாக காரை ஓட்டிக் கொண்டு வருவார்.

பேச்சுக்கிடையே "தெணி இது அக்காவின்ரை கார்" எனச் சொல்லி மெல்லச் சிரிப்பார். அக்கா (கா.சி.யின் மனைவி) வல்வெட்டித்துறையில் புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்தவர். அக்காவின் தந்தையார் எஸ்.வி.நடராஜா துணிச்சலும் தன்னம்பிக்கையும் மிக்க நல்ல மனம் கொண்ட தனவந்தர். அவரது மூத்த மகள் ரூபவதி கா.சி.இன் மனைவி. வல்வெட்டித்துறையின் மேற்கு எல்லையில், சிதம்பராக் கல்லூரிக்குக் கிழக்கே பிரதான வீதியோர மாக பெரிய வளவுக்குள் வரிசையாக மூன்று பெரிய வீடுகளை ஒரே அமைப்பில் பிள்ளைகளுக்குக் கட்டிக் கொடுத்தவர் கா.சி.யின் மாமனார். அந்த வீடுகளுள் மேற்குத் தொங்கலில் உள்ள வீடு கா.சி.க்கும், அவர் மனைவி ரூபவதிக்கும் சொந்தமானது.

அக்கா மிகுந்த தன்னம்பிக்கையும் துணிச்சலும் உள்ள ஒருவர் என்பதனைப் பல சந்தர்ப்பங்களில் நான் அவதானித்திருக்கிறேன். எனது கணிப்பினை உறுதிப்படுத்துவது போல கா.சி. சில சமயங்களில் என்னிடம் சொல்லி இருக்கிறார்."அக்கா குடும்பத்தில் மூத்த பிள்ளை. மற்றப் பிள்ளைகளை விடவும் தகப்பனோடுள்ள ஊடாட்டம் அதிகம். அதனால்



தகப்பனின் இயல்புகள் பல அக்காவிடம் இருக்கு" என அக்காவை மிகச் சரியாக எடுத்துக் கூறினார் கா.சி. தனக்கு அக்கா வழியாகக் கிடைத்த அந்தக் காரினை "அக்காவின் கார்" எனச் சொன்ன கா.சி.யின் தன்னடக் கத்தை நான் வெகுவாக இரசித்தேன்.

அந்தக் காரைப் புதிதாக வாங்கி வந்த வேளையில் நடந்த சம்பவம் ஒன்றையும் கா.சி. சொல்லிச் சிந்திக்க வைத்தார்."கார் ஒரு இயந்திரம் விஞ்ஞானம், தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பேறாக உருவாக்கப் பட்டது. இதனை வாங்கி வந்து என்ன செய்தோம் தெரியுமா! முதலில் சந்நிதி முருகன் கோயிலுக்குக் குடும்பத்துடன் வெள்ளோட்டம் போனோம். எங்களுக்கு மாத்திரமல்ல, காருக்கும் திருநீறு, சந்தனம் எல்லாம் பூசிக் கொண்டு தான் வீடு திரும்பினோம்" என்றார்.

இந்தக் கருத்து இடதுசாரிச் சிந்தனையாளர் ஒருவரின் வாயில் இருந்து வரத்தகுந்ததா? என நான் சிந்திக்கவில்லை. ஒரு மனிதன் பிறந்த குடும்பம், சமூகச் சூழல், வளர்ப்பு என்பன அந்த மனிதனை எவ்வாறு உருவாக்கம் செய்கின்றன, பாதிக்கின்றன என்பதனை நான் விளங்கிக் கொண்டேன். கா.சி. போலி அற்ற உண்மை மனிதன் என்பதனை உணர்ந்து கொண்டேன். கா.சி.யின் காரில் அவரோடு பயணம் செய்த ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சொன்ன ஆலோசனை கேட்டு எனது இலக்கிய நடவடிக்கை ஒன்றினைக் கைவிட்டேன்.

வழமைபோல அன்றும் (06.12.1971) யாழ்ப்பாணத்தில் இருந்து தனது காரில் கா.சி. என்னையும் ஏற்றிக் கொண்டு வடமராட்சி நோக்கி வந்து கொண்டிருந்தார். இருவரும் உரையாடிக் கொண்டே பிரயாணஞ் செய்து கொண்டிருந்தோம். அப்பொழுது முதல் மாத மல்லிகையில் (நவம்பர்) வெளிவந்திருக்கும் எனது சிறுகதை பற்றி எடுத்துச் சொல்லிப் பாராட்டினார். அந்தச் சிறுகதையின் தலைப்பு 'மாத்து வேட்டி' என இருக்க வேண்டுமென்று எடுத்துரைத்தார். எல்லாவற்றையும் பொறுமை யாகக் கேட்டுக் கொண்டு வந்த நான் இறுதியில் ஓர் உண்மையை எடுத்துச் சொன்னேன்.

"இந்தச் சிறுகதையை ஒரு போட்டிக்கு அனுப்பி வைத்தேன். போட் டியில் எந்த ஒரு பரிசும் இந்தக் கதை பெறவில்லை. அப்பொழுது கையில் இருந்த இன்னொரு பிரதியை வார வெளியீடொன்றுக்கு அனுப்பினேன். ஆண்டுகள் கடந்தும் கதை பிரசுரமாகவில்லை. இறுதியில் நண்பர் முருக பூபதியின் கண்களில் பிரதி தட்டுப்பட்டிருக்கிறது. அவர் எடுத்து மீளவும் எனக்கு அனுப்பி வைத்தார். இதேபோல இன்னொரு சிறுகதை வேறு

பத்திரிகையின் வாரப் பதிப்புக்கு அனுப்பி வைத்தேன். வாரப்பதிப்புக்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர் ஆரம்ப காலம் முதல் எனது வளர்ச்சியில் அக்கறையாக இருந்த ஒருவர். 'இந்தத் தேசத்துக்காக...' என்ற அந்தச் சிறுகதை அரசியல் கலப்புள்ளது என்ற குறிப்புடன் பிரதியைத் திருப்பி அனுப்பினார். அதனைத் 'தாமரை'க்கு, தமிழ் நாட்டுக்கு அனுப்பி வைத்தேன். 'தாமரை'யில் அது வெளிவந்தது''எனத் தெளிவாக எடுத்துக் கூறினேன்.

கா.சி. மெல்லிய புன்னகையுடன் கார் வெளிச்சத்தில் வீதியை நோக்கிய வண்ணம் சற்று நேரம் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தார். பின்னர் அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு ''தெணி உங்களுடைய பார்வையும் கருத்துகளும் பலருக்கு உவப்பாக இருக்க முடியாது. போட்டியின் நடுவர்கள் யார் யாரென்று அறிந்து வைத்துக் கொண்டு தான் போட்டிகளுக்குக் கதை எழுத வேண்டும் போல இருக்கின்றது. தயவு செய்து இனிமேல் போட்டிகளுக்கு எழுத வேண்டாம்''என உரிமையோடு எடுத்துரைத்தார். அதுவரை சிறுகதைப் போட்டியில் பங்குபற்றி ஒரே ஒரு தடவை பரிசினைப் பெற்றிருந்தேன். நான் எழுதுவதற்கு ஆரம்பித்து மூன்றாவது ஆண்டில் யாழ். இலக்கிய நண்பர் கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் 'பெண் பார்வை' என்னும் சிறுகதையை எழுதி முதற் பரிசு பெற்றேன். ஆனால், கா.சி. பலவற்றையும் விளங்கிக் கொண்டு எடுத்துச் சொன்ன ஆலோசனையை ஏற்றுக் கொண்டு சிறுகதைப் போட்டிகளுக்கு எழுது வதை நிறுத்திக் கொண்டேன்.

## 2

# இசையைக் கேட்டுக் கொண்டே எழுதும் பழக்கமுள்ள பேராசிரியர்

பேராசிரியர் கா.சிவத்தம்பியுடனான நேரடியான பழக்கம் 1971 முதலே உண்டானது. ஆனால், கா.சி விரிவுரையாளராக 1978இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வந்ததன் பிற்பாடே, அவர் குடும்பத்தில் ஒருவனாக நான் பழகி வந்தேன். ஏறத்தாழ நாற்பதாண்டு காலம் கா.சி. உடனுடன், அவர் குடும்பத்தவர்களுடனும் அந்தப் பழக்கம் இருந்து வருகின்ற போதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் பணி யாற்றிய பதினெட்டாண்டுகாலம் (1978 - 1996) மிகமுக்கியமானது. இக்கால கட்டத்தில் கா.சி. உடன் நான் பழகிவந்த அனுபவங்கள் நிறைய உண்டு. இத்தகைய அனுபவங்கள் வேறு யாருக்கும் கிட்டாத ஒன்று என்றே நான் கருதுகிறேன். அதனைக் கா.சி. பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

> 'நண்பன் தெணியானை நான் 'கண்டு' கொண்டதும் 'அறிந்து' கொண்டதும் 1978 இல் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் போன பின்னர்தான். முதலாவது தொடர்பு வீரகேசரி வெளியிட்ட அவரது 'விடிவை நோக்கி' (1973) நாவலோடு தொடங்குகிறது. தெணியானின் வீடு பொலிகண்டியில் எனது உறவினர் சிலருடைய வீட்டுக்கு அருகாமையில். மாலை வேளைகளில் வல்வெட்டித்துறை ஊரிக் காட்டிலுள்ள எங்கள் வீட்டுக்கு சைக்கிளில் வரும் அவருக்கு, வருவது மிகச் சுலபம். குறைந்தது வாரத்திற்கு ஒரு தடவையாவது மாலை வேளைகளில் வருவார். சில வேளைகளில் காலைவேளையிலும் வருவார். தேநீரின் பின்னர் பொக்கெற்றில் வைத்திருக்கும் ஒற்றைச் சிகரெட்டுக்கு நெருப்புப் பெட்டி கேட்பதில் உள்ள பவ்வியம் வெகுவிரைவில் அவரை எங்கள் குடும்பத்தின் அத்தியந்த நண்பர்களில் ஒருவராக்கியது. எனது மனைவியார் அக்காவானார். பிள்ளைகளுக்கு தெணியான் மாமாவில் ரொம்பப் பிடித்தம். அவர்களுடைய படிப்புத் தேவைக்கு வேண்டியன சிலவற்றை தெணியான்

மாமாதான் உதவி செய்வார். சுருக்கமாகச் சொன்னால் என்னுடனிருந்த உறவை மீறிய ஊடாட்டம் என் குடும்பத்தோடு. இதனால், அவருடன் ஆற அமர இருந்து பேசுவதற்கான ஓய்வும் இருந்தது. வாய்ப்பும் இருந்தது''

கா.சி. படிக்கும், எழுதும், தனி அறை வீட்டு முன் விறாந்தையுடன் இணைந்து முன்பக்கத்தில் இருக்கிறது. நான் கா.சி.யைத் தேடிக் கொண்டு அவர் இல்லத்துக்குச் செல்கின்ற சமயம், சிலவேளையில் அந்த அறையில் இருந்து மெல்லிய நாதஸ்வர இசை ஒலித்துக் கொண்டிருக்கும். எழுதும் போது அவ்வாறு இசையைக் கேட்டுக் கொண்டு எழுதுவது அவர் வழக்கம். அந்த நேரங்களில் நான் அங்கு போய்ச் சேர்ந்துவிட்டால், எனக்கு மனச் சங்கடமாக இருக்கும். அவருடைய எழுத்து வேலைக்கு இடையூறாக வந்துவிட்டனே என்று தயங்குவேன். எனது வீட்டுக்குத் திரும்பிச் சென்று பின்னர் வருவோமா என ஆரம்ப காலத்தில் நினைத்ததுண்டு. ஆனால், நான் அங்கு வந்திருக்கின்றேன் என்பதனை அறிந்ததும் அறையில் ஒலித்துக் கொண்டிருந்த நாதஸ்வர ஓசை தடைப்படும். கா.சி. அறையை விட்டு எழுந்து சிரித்த வண்ணம் வெளியே வருவார். சிலவேளைகளில் ''தெணி, நீங்கள் வருவியள் எண்டு எதிர் பார்த்தனான்'' எனக் கூறுவார்.

இருவரும் அமர்ந்து பேசுவதற்கு ஆரம்பித்து விட்டால் நேரம் கடந்து போவதை மறந்து போவோம். இலக்கியம், சமூகம், அரசியல் என பல்வேறு விடயங்கள் எங்கள் உரையாடலில் அடிபடும். பெரும்பாலும் கா.சி. சொல்ல நான் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருப்பேன். நான் எழுப்பும் ஐயங்கள் சிலவற்றுக்கு கா.சி. விளக்கம் சொல்லுவார். மாற்றுக் கருத்துகளை செவிமடுத்துக் கேட்கும் மனப்பக்குவம் கா.சி. அவர்களிடத்தில் இருந்து வந்தது. சில சந்தர்ப்பங்களில் குறித்த ஒரு பொருள் பற்றி விளக்குமாறு அவரிடம் சென்று நான் கேட்டிருக்கின்றேன். ஒரு நாளேனும் அவர் எனக்கு பெரிதாக விளக்கிச் சொன்னதில்லை. அந்த விடயத்தை இவ்வாறு இவ்வாறு பகுத்து நோக்க வேண்டுமென என்னை வழிநடத்துவார். எனக்குக் கிளிப் பிள்ளைப் பாடம் நடத்துவதற்கு என்றைக்கும் அவர் விரும்புவதில்லை. நான் தேடல் செய்வதற்கான வழிகாட்டலாக அமையும் அந்த வழிநடத்தல் எனது பார்வையை விசாலிக்கச் செய்தது. என்னிடம் கல்வி கற்ற கல்லூரி மாணவர்களுக்கும் அந்த 'விசாலிப்பு'ப் பின்னர் பயன்பட்டிருக்கின்றது. கட்டுரைகள் எழுதும் சமயங்களில் சிறப்பாக மாணவர்களுக்கு அது பயன்பட்டிருக்கிறது.



நாங்கள் இருவரும் அமர்ந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்போம். இடையில் அக்கா (கா.சி. மனைவியார்) தேநீருடன் வருவார். ஓய்வாக இருந்தால் அருகிலுள்ள கதிரையில் அமர்ந்து உரையாடலில் கலந்து கொள்வார். எனக்குக் கா.சி.யிடம் இல்லாத ஒரு பயம் அக்காவிடம் இருந்தது. அக்காலத்தில் நான் அடிக்கடி சிகரெட் புகைத்துக் கொண்டிருப்பேன் (இப்போது அந்தப் பழக்கமில்லை). கா.சி. வயதில் மூத்தவர். ஒரு பேராசிரியர். அவருக்கு முன் அமர்ந்திருந்து சிகரெட் புகைப்பதில் எனக்கு மனக்கஷ்டம் இருக்கவே செய்தது. ஆனால் கா.சி. என்னோடு காட்டிய அந்த நெருக்கம் மனதில் இருந்த குழப்பத்தை இல்லாது போக்கியது.

அக்கா வித்தியாசமானவர். நேருக்கு நேரே எதனையும் எடுத்துச் சொல்லக் கூடியவர். தம்பி என்ற உரிமையுடன் அக்கா என்னை எப்பொழுது கண்டிக்கப் போகின்றார் என்ற தயக்கம் மனதில் இருந்து கொண்டே வந்தது. தேநீர் பருகியவுடன் சிகரெட் பற்ற வேண்டும் என்னும் அந்தரமும் தவிப்பும் பழக்கதோஷத்தினால் உண்டாகிவிடும். அக்காவின் கண்டிப்பில் இருந்து தப்பிக்கொள்வதற்காக ஒரேயொரு சிகரெட் மாத்திரம் எனது பொக்கட்டுள் இருக்கும். அதனைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு அக்காவிடம் நெருப்புப் பெட்டி கேட்பேன். அக்கா முகம் கோணாமல் எடுத்து வந்து தருவார். ''ஒன்றே ஒன்று தானே பத்தட்டும்'' என அக்கா தனக்குள் சமாதானம் தேடிக் கொண்டிருக்க வேண்டுமென நான் என்னைச் சமாதானப்படுத்திக் கொள்வேன்.

ஒருநாள் கா.சி. உடன் நான் பேசிக் கொண்டிருந்த சமயம் அவர் சொன்னார் ''தெணி நீங்கள் எனக்குக் கிடைத்திருப்பது நான் செய்த பாக்கியம்'' என்று. இதனைக் கேட்ட போது எனக்கு ஆச்சரியமக இருந்தது. நான் சொல்ல வேண்டியதை அவர் சொல்லுகின்றாரே என்ற வியப்புடன் ''ஏன் அப்படிச் சொல்லுகிறியள்?'' எனக் கேட்டேன். ''நான் சொல்வதை எல்லாம் கேட்பதற்கும் ஒராள் வேணும். இங்கு அப்படி ஒராளும் எனக்கில்லை. நீங்கள் தான் வந்து கிடைத்திருக்கின்றீர்கள்'' எனத் தெளிவுபடுத்தினார் கா.சி. அதன் பின்னர் நீண்ட நேரம் அங்கிருந்து மனம் விட்டுப் பேசுவதற்குத் தடையாக எதுவும் இருக்கவில்லை.

இந்த இடத்தில் இரசிகமணி கனக செந்திநாதனுடன் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிடுவது பொருத்தமென்று கருதுகிறேன். ஒரு தினம் இரசிகமணியோடு 'மல்லிகை'க் காரியாலயத்தில் பேசிக் கொண்டிருந்தேன். பேச்சுகளிடையே இரசிகமணி கூறினார். ''இப்பதான் நான்

ஒரு ஆம்பிளை எண்டது எனக்குத் தெரியும்'' என. சுவாரசியமான ஏதோவோரு செய்தியைச் சொல்வதற்கான பீடிகை இதுவென்பதை விளங்கிக் கொண்டு ''என்ன விடயம்'' எனக் கேட்டேன். அப்பொழுது இரசிகமணி, ''மனிசி சொல்லுறா, இவ்வளவு காலமும் வீட்டுக் காரியங்கள் எல்லாம் நான் பார்த்தன். பிள்ளைக்கு மாப்பிள்ளை கேட்டும் நான் போகலாமோ! மாப்பிள்ளை வீட்டார் எங்கே தகப்பன்? எண்டு கேட்க மாட்டினமோ! எண்டு'' எனச் சொல்லிப் பலமாகச் சிரித்தார். நானும் அவரோடு சேர்ந்து என்னையும் நினைத்துச் சிரித்துக் கொண்டேன்.

எழுத்தாளர்கள், புத்திஜீவிகள் பலருடைய இயல்பு இப்படித்தான். கா.சி. இந்தப் பொது இயல்புக்கு விதிவிலக்கானவரல்ல. குடும்பக் காரியங்களைக் கவனித்து குடும்பத்தைக் கொண்டு நடத்தத் தகுந்த ஆளுமை, ஆற்றல் அக்காவுக்கு உண்டு. குடும்பத் தலைவி எப்படித் தான் செயற்பட்டாலும் குடும்பத்தலைவன் சில காரியங்களைச் செய்து முடிக்க வேண்டியதாகவுள்ளது. இந்தச் சமூக அமைப்பு இன்னும் மாற வில்லை. அதனால் சில காரியங்களைக் கா.சி. செய்தாக வேண்டியதாக இருந்தது.

ஒரு நாள் கா.சி.உடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது உள்ளே இருந்து அக்கா எங்களை நோக்கி வந்தார். அக்காவின் முகம் இயல்பாக இருக்கவில்லை. மனதில் ஏதோ ஒரு அதிருப்தி இருப்பதனை முகம் லேசாகக் காட்டியது. கணவனுடன் பேசுவதைத் தவிர்த்து விட்டு என்னைப் பார்த்து ''தம்பி மங்கைக்கும் கோதைக்கும் ரியூஸனுக்கும் ஒழுங்கு செய்ய வேணும்'' என்றார். அப்பொழுது வட பிரதேசத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றாக முளைத்து விட்டன. அங்கெல்லாம் பிள்ளைகளை அனுப்பி வைப்பதற்கு அக்கா விரும்பவில்லை என்பதனை விளங்கிக் கொண்டேன். ஆசிரியர்களின் வீடுகளுக்கு அனுப்பி படிக்க வைப்பதிலும் உடன்பாடில்லை என்பது எனக்குத் தெரியும். வீட்டுக்கு வந்து பாடஞ் சொல்லிக் கொடுக்கத் தகுந்த ஆசிரியர்களே தேவைப்பட்டார்கள் என்பதனை விளங்கிக் கொண்டு ''என்ன பாடம் படிப்பிக்க வேண்டும்'' எனக் கேட்டேன். ''விஞ்ஞானமும் கணிதமும்'' என்றார் அக்கா. சொல்லிக் கொண்டு அக்கா எழுந்து போய் விட்டார். ''தெணி நான் இந்த ஒழுங்கைச் செய்யவில்லை எண்டு அக்காவுக்கு கோபம்'' என்றார் கா.சி. ''எனக்கு விளங்குது'' என்று சொன்னேன். இருவரும் சேர்ந்து சிரித்தோம். க.பொ.த. (உயர்தரம்) சித்தியடைந்து இருந்த எனது உறவினர்கள் சி.மகேந்திரன், கா.செல்வச்சோதி



இருவரும் கா.சி. இல்லம் சென்று விஞ்ஞானம், கணிதம் இருபாடங் களையும் சொல்லிக் கொடுத்தார்கள்.

கா.சி. யின் இரண்டாவது மகள் தாரணி (கோதை) க.பொ.த. (உயர் தரம்) படிப்பதற்கு ஆரம்பித்த காலம். ஒரு தினம் மாலைவேளை கா.சி. யும் நானும் பேசிக் கொண்டிருந்தோம். நான் அங்கு வந்திருப்பது அறிந்து ''மாமா'' என அழைத்துக் கொண்டு எங்களை நோக்கி வந்தார். கா.சி.யின் இயல்புகள் பல கோதையிடம் உண்டு. உள்ளன்புடன் உண்மையாகப் பழகுவதும், குழந்தை போல் நெருக்கமாகப் பழகுவதும் கோதைக்குத் தந்தை வழி வந்த நல்ல குணாம்சங்கள். கோதை எங்களிடம் வந்து நிற்பது கண்டு கா.சி. என்னிடம், ''தெணி கோதைக்கு ஏதோ புத்தகம் தேவையாம். நான் மாமாவிட்டைக் கேட்கச் சொல்லிப் போட்டேன்''என் றார். ''ஓம் மாமா... இலங்கையின் புராதன வரலாறு புத்தகம் எனக்குத் தேவை. அது இப்ப புத்தகக் கடைகளிலே வாங்கேலாது'' என தனக்குத் தேவையான புத்தக விபரத்தை கோதை எடுத்துக் கூறினார். அடுத்த வாரம் நான் அங்கு செல்லும் போது என்னிடம் இருந்த ஒரு புத்தகத்தையும் எனது நண்பர் ஒருவரிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்ட புத்தகத்தையும் கொண்டு சென்று கோதையிடம் கொடுத்தேன்.

எனது பிள்ளையின் கல்விக்கு கா.சி. எனக்கு உதவி செய்தார். எனது மூத்த மகள் உமா நான் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த தேவரையாளி இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். பெண்கள் கல்லூரி ஒன்றில் அவளைச் சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும் என்பது எனது மனதிலிருந்த விருப்பம். பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாட சாலைக்கு அவளை அனுப்பிப் படிக்க வைக்க வேண்டும் என்பது எனது எண்ணம். அந்தப் பெண்கள் பாடசாலைக்கு ஆறாவது வகுப்பில் மகளைக் கொண்டு சென்று சேர்த்திருக்க வேண்டும்.

எனது வீட்டில் இருந்து மூன்று மைல் தூரத்துக்கு அப்பால் அந்தப் பாடசாலை இருந்தது. நான் சைக்கிள் வண்டியில் மகளை ஏற்றிச் சென்று பாடசாலைச் சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்வண்டியில் ஏற்றிவிட வேண்டும். சிறுபிள்ளையாக இருந்த அவளை அவ்வாறு சிரமங்களுக்கு உள்ளாக்குவது எனது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. அதனால் அந்த ஆண்டு நடவடிக்கையில் இறங்காது மௌனமாக இருந்து விட்டேன். இப்படியே எனது மௌனத்தைத் தொடர்ந் தால் பெண்கள் கல்லூரியில் படிக்க வைக்க வேண்டுமென்னும் எனது எண்ணம் நிறைவேறுமா!

அடுத்த ஆண்டு ஏழாவது வகுப்பில் மகளை அங்கு சேர்த்து விடுவதற்குத் தீர்மானித்தேன். அந்த வகுப்பில் சேர்க்க வேண்டுமானால் அனுமதிப் பரீட்சை எதுவும் நடத்தப்படுவதில்லை. பெண்கள் உயர்தர பாடசாலை அதிபரின் தீர்மானத்தில் தான் அந்த அனுமதி கிடைக்க வேண்டும். அதிபருக்கு என்னைத் தெரியும். ஆனால், நெருக்கமான பழக்கம் இல்லை. அவரிடம் நான் போய்ப் பிள்ளைக்கு அனுமதிகேட்டு, அவர் அனுமதி தருவதற்கு மறுத்துவிட்டால் அது ஒரு தடைக்கல்லாக வந்து விழுந்து விடும் என்று கருதினேன். முதலில் நேரிற் சென்று கேட்பதைத் தவிர்த்துக் கொண்டேன்.

அந்தச் சமயத்தில் ஒரு நாள் மாலை வேளை கா.சி.யும் நானும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அந்த சமயம் ஓய்வாக இருந்த அக்காவும் வந்து எங்களோடு அமர்ந்து கொண்டார். அப்பொழுது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் எனது மகளை ஏழாம் வகுப்பில் சேர்க்க வேண்டிய தேவை இருக்கின்றது என்பதனைக் கா.சி.யிடம் எடுத்துச் சொன்னேன். கா.சி. அக்காவைப் பார்த்து, “நாளைக்குப் பருத்தித்துறைக்குப் போக இருக்கிறியள்தானே! பிறின்ஸ் பலைக் கண்டு ஒருக்கால் சொல்லிவிடுங்கோ!” என்றார். “நீங்கள் கம்ப சுக்கு என்னத்தில போகப் போகிறியள்” என அக்கா கா.சி.யிடம் கேட்டார். “தெணியின்ரை பிள்ளைக்கு இது முக்கியமான விடயம். நான் பஸ்ஸிலே போறன். நீங்கள் காரைக் கொண்டு போங்கோ!” என்று கூறினார்.

அடுத்தவாரம் முதல் நாள் திங்கட்கிழமை மகளை அழைத்துக் கொண்டு அந்தப் பெண்கள் உயர்தர பாடசாலைக்குச் சென்றேன். அதிபர் முன்னர் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியில் பணிபுரிந்தவர். சிறந்த அதிபரெனப் பெயர் பெற்றவர். இறுக்கமானவர். சென்ற ஆண்டு மகளைக் கொண்டு வந்து ஏன் சேர்க்கவில்லை என வினவக்கூடும் என்ற எதிர் பார்ப்புடன் சென்றேன். என்ன அதிசயம்! முகம் மலர்ந்து எங்களை வரவேற்றார். கா.சி.யின் மனைவி (அக்கா) தன்னிடத்தில் வந்து தகவல் சொல்லிச் சென்றது பற்றி ஒன்றுமே பேசாது மிக நாகரிகமாக நடந்து மகளைக் கல்லூரியில் அனுமதித்து என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தார். கா.சியின் செல்வாக்கு ஒரு மந்திரம் போல் அன்று பயன்பட்டது.

## 3

# ‘சிவத்தம்பி’ என்ற பெயரைச் சூட்டிய யோகர் சுவாமி

பேராசிரியர் பெயரை யார் அவருக்குச் சூட்டினார் என்பதைச் சிலர் அறிந்து வைத்திருக்கின்றார்கள். ஆனால், பெயர் சூட்டுதல் நிகழ்வு எவ்வாறு நடந்தேறியது என்பதைத் தெளிவின்றிக் குழப்பமாகச் சொல்லிக் கொள்ளுகின்றார்கள். அந்தச் சம்பவத்தைப் பேராசிரியர் ஒரு தினம் விபரமாக என்னிடம் எடுத்துக் கூறினார். பேராசிரியர் தந்தையார் பண்டிதர், சைப்புலவர் பொ.கார்த்திகேசு கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர் சுவாமி மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் பூண்டவர். சுவாமியின் ஆச்சிரமம் சென்று அவரைத் தரிசனம் செய்து அவரோடு உரையாடி, அவர் கூறும் நற்சிந்தனைகளைக் கேட்டறிந்து ஆசீர்வாதம் பெற்று மனநிறைவுடன் வீடு திரும்புவது வழக்கம். பேராசிரியர் குடும்பத்தில் மூத்த ஆண்பிள்ளை. பேராசிரியர் வைத்தியசாலையில் பிறந்திருக்கும் செய்தி அறிந்து தந்தையார் அங்கு சென்று குழந்தையைப் பார்த்து மனம் மகிழ்ந்தார். அந்த மனநிறைவுடன் கொழும்புத்துறை நோக்கி யோகர் சுவாமியின் ஆசிரமத்துக்குச் செல்லுகின்றார். ஆச்சிரம வாசலை அவர் அடைந்த சமயம் “எடே நில் அங்கே” என்ற குரல் எழுகின்றது. அது வேறு யாருடைய குரலுமல்ல சுவாமியின் குரல்தான். தொடர்ந்து சுவாமியின் குரல் ஒலிக்கின்றது “உனக்கொரு மகன் பிறந்திருக்கின்றான். அவனுக்குச் சிவத்தம்பி என்று பெயர் சூட்டு அவன் சிவத்தம்பியாக இருப்பான் போ” எனக் கூறி, திருப்பி அனுப்பிவிடுகின்றார். இவ்வாறு தான் பேராசிரியரின் பெயர் சூட்டப் பெற்றது. முன் ஒட்டோடு எதுவோ ஒரு தம்பியெனப் பெயர் சூட்டுக்கொள்ளும் வழக்கம் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வருகின்றது. ஆனால், சிவத்தம்பி என்னும் பெயர்

நான் அறிந்தவரையில் இன்னொவருக்கு இல்லை. யோகர் பெயர்சூட்டிய சிவத்தம்பி ஒரேயொருவர்தான். அவர் பேரறிஞர் சிவத்தம்பி மாத்திரந்தான்.

ஒரு தினம் பேராசிரியரைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு நான் சென் றேன். அதுகாலை நேரம். பேராசிரியர் சிறந்த பண்புகள் பலவற்றை நடைமுறையில் பின்பற்றி ஒழுகும் இயல்புள்ளவர். பேச்சிலும் எழுத் திலும் ஒன்றைச் சொல்லி நடைமுறை வாழ்க்கையில் வேறு வகையாக வாழும் பொய்மை அவரிடத்தில் இல்லை. அவரது ஒவ்வொரு செயலிலும் சக மனிதனை மதித்து கௌரவித்து நடந்து கொள்ளும் உயர் பண்பினைக் கண்டு கொள்ளலாம். யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம், அந்தச் சமூகத்துக் குள்ளேயே இன்னொரு மனிதனை உயர்வு தாழ்வு கற்பித்து கீழ்மைப் படுத்துவதனை தார்மீகச் சினத்துடன் நிராகரிக்கின்றவர். அந்தச் சின்னக் குணத்துக்கு எதிராகப் பேசியும் எழுதியும் வந்தவர். அந்தப் பண்பின் நடைமுறை வெளிப்பாட்டினை அன்றைய தினம் கண்டு உள்ளூர வியப்புற்றேன்.

பேராசிரியர் இல்லத்தில் இருந்து சில யார் தூரத்து அப்பால், வீதி யோரம் வெளிக் 'கேற்' இருக்கின்றது. நான் அங்கு சென்ற சமயம் பேராசிரியர் கதிரையில் அமர்ந்திருந்தார். அவருக்கு எதிரே இருவர் கதிரைகளில் உட்கார்ந்து அவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு இருந்தவர்களுள் ஒருவரை எனக்கு முன்னரே தெரியும். அவர் கள் வந்திருந்து முக்கியமான எதுவோ ஒரு விடயத்தைப் பேசிக் கொண்டி ருக்கின்றார்கள். இந்தச் சமயம் நான் வந்திருக்கின்றேனே என மனதில் எண்ணிக் குழம்பினேன். மூன்று கிலோமீற்றர் தூரம்வரை சயிக்கில் ஓட்டி வந்த நான் திரும்பிச் செல்லவும் விரும்பவில்லை. அதேவேளை நான் கேற்றுக்கு வந்து சேர்ந்ததும் பேராசிரியர் என்னைக் கண்டு கொண்டு விட்டார் என்பதையும் அவதானித்தேன்.

பேராசிரியரின் சிறந்த பண்புகளில் ஒன்று வீடு தேடி ஒரு சிறு பிள்ளை வந்தாலும் எழுந்து நின்றே வரவேற்பார். பின்னர் திரும்பிச் செல்லும் போது எழுந்து நின்று வழி அனுப்புவார். அல்லது வீட்டுக்கு வெளியே அழைத்தச் சென்று வழி அனுப்பி வைப்பார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டு ஒருவரை வர வேற்பதும் வழி அனுப்புவதும் அவர் பண்பாடல்ல.

அன்று கேற்றைத் திறந்து சயிக்கிள் வண்டியை உள்ளே உருட்டிக் கொண்டு செல்வதற்கு முன்னரே பேசிக் கொண்டிருந்த இருவரும் அமர்ந்திருக்க, பேராசிரியர் எழுந்து நிற்கின்றார். வழமையாக நான் வீட்டருகே வந்த பின்னர்தான் "தெணி வாருங்கோ" என எழுந்து நிற் பார். நடை முறையில் இருக்கும் அவரது செயற்பாட்டில் இன்றுள்ள மெல்லிய வேறுபாட்டை அவதானித்துக் கொண்டு, சயிக்கிளை நிறுத்தி விட்டு திரும்பும் போது குரல் கொடுக்கின்றார். "தெணி வாருங்கோ.. வாருங்கோ.." என. அவரோடு பேசிக் கொண்டிருந்த இருவரும் அதிச யமாக என்னைப் பார்க்கின்றார்கள். நான் மனச்சங்கடத்துடன் சென்று வீட்டு விறாந்தையில் ஏறுகின்றேன். அவர்களுக்குச் சற்றுத் தூரத்திலுள்ள ஆசனத்தில் அமருகின்றேன்.



நான் ஆசனத்தில் அமரும்வரை நின்று கொண்டிருந்த பேராசிரியர் பின்னர் தனது கதிரையில் மெல்ல உட்காருகின்றார். "தெணி இவர்கள் வந்த விடயம் முடிஞ்சுது. கொஞ்சம் பொறுங்கோ வாறன்" சொல்லிக் கொண்டு பேசுகின்றார்.

அவர்கள் இருவரையும் அவதானிக்கின்றேன். இருவரும் கல்லாகச் சமைந்து போய் இருக்கின்றார்கள். இருவர் முகங்களிலும் அசடு வழி கிறது. அவர்கள் இருவரும் என்னிலும் வயது மூத்தவர்கள். யாழ்ப்பாணச் சமுதயாத்தின் உயர்சாதிக்காரர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள். இருவரும் 'நான் யார்' என்பதனை நன்றாக அறிந்தவர்கள்.

பேசிமுடித்து விட்டு சிறிது நேரத்தில் அவர்கள் இருவரும் அங்கி ருந்து புறப்பட்டு விட்டார்கள். போகும் பொழுது எனக்கு முன்னரே அறிமுகமானவர்கூட ஒரு வார்த்தை சொல்லாமல் மௌனமாக நடந் தார்.

பேராசிரியர் அவர்களுடன் பேசிப்பேசி வீட்டுவெளிக் கேற்வரை அழைத்துச் சென்று அனுப்பி வைத்துவிட்டுத் திரும்பி வந்தார். "எப்பிடித் தெணி?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார்.

"பிரமாதமான வரவேற்பு" என்றேன் நான். "அவர்கள் சில விடயங் களை விளங்கிக் கொள்ள வேண்டும் என்தற்காகத்தான் இது" என்று சொல்லிக் கொண்டு அமர்ந்து என்னோடு உரையாடத் தொடங்கினார்.

# 4

# மரபுப் பண்டிதர்களுக்குப் பதிலடி கொடுத்த பேராசிரியர்

பத்திரிகைகளில் இலக்கியக்காரர்களின் செவ்விகள் இன்று வெளிவரும் போது 'இன்றைய எழுத்தாளர்கள் மத்தியில் ஒற்றுமையின்மை இருப் பதற்குக் காரணம் என்ன?' என்ற வினா பலரிடமும் கேட்கப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இது நியாயமில்லாத ஒருவினா என இலகு வாகத் தட்டிக்கழித்துவிட இயலாது. இவ்வாறான ஒரு வினா எழுதுவதற் கான காரண காரியங்களை ஆராய்வது எனது நோக்கமல்ல. 'இன்றைய தலைமுறையினர்' என்று குறிப்பிடப்படும் புதிய தலை முறையைச் சேர்ந்தவர்களல்ல நாங்கள். இவர்களுக்கு மூத்த தலைமுறைப் படைப் பாளிகள் நாங்கள். எங்கள் மத்தியில் இன்றுள்ள புதிய தலை முறையைப் போன்று மிகவும் சீர்குலைந்த நிலைமை இருந்து வரவில்லை. அதேசமயம் எங்களுக்கு மூத்த தலைமுறைப்படைப்பாளிகள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதனை எனது நேரடி அனுபவத்தின் வழியாக உணர்த்த விரும்பு கின்றேன்.

ஆயுதம் தாங்கிய குழுக்களின் மோதல்களும் நெருக்கடிகளும் அதிகரிக்கப்படுதற்கு முன்னர் நான் வாழும் வடமராட்சிப் பகுதியில் இருந்து இருபது மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கும் யாழ்ப்பாணம் நகரத்துக்கு வாரத்தில் மூன்று தினங்கள் தவறாமல் ஒழுங்காகச் செல்வேன். வேலை நாளில் ஒருநாள் பிற்பகல், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை யில் போவேன். மாணவர்களுக்குத் தமிழ் கற்பிப்பதில் சிறந்த ஆசிரியர் என நான் பேரெடுத்தவன். எனது கல்லூரி ஓய்வு நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று மாணவர்களுக்குக் கற்பிப்பேன். யாழ். நகரில் இருந்த ஒரு தனியார் கல்வி நிலையத்திலும் கற்பித்து வந் தேன்.



அங்கு கற்பிக்கப் போவதில் மிகுந்த விருப்பம் எனக்கு மனதில் இருந்து வந்தது. நான் மிக விருப்பத்துடன் பழகும் கே.டானியல், டொமி னிக் ஜீவா இருவரையும் சந்தித்துப் பேசிக் கொண்டு வீடு திரும்புவேன். இந்த சந்தர்ப்பங்களில் என்றாவது ஒரு நாள் பேராசிரியர் கா.சிவத்தம்பி அங்கு வருவார். மல்லிகைக்கு வரும்பொழுது "என்னடா அப்பா.." என்று மிகுந்த நட்புரிமையுடன் அழைத்துக் கொண்டு, படிகளில் ஏறி உள்ளே நுழைந்து அங்கு போடப்பட்டிருக்கும் வாங்குமீது அமர்ந்து ஜீவாவுடன் பேசுவார். சில சமயம் கையோடு கொண்டு வந்திருக்கும் கட்டுரையை மல்லிகையில் பிரசுரிப்பதற்கு ஜீவாவிடம் கொடுப்பார். சற்றுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு திடீரென ஜீவா "வாங்க ஒரு தேத்தண்ணி குடிப்போம்" என எழும்புவார். வேறு அவசர வேலை எதுவும் பேராசிரியருக்கு இல்லையாயின் மூவரும் ஒன்றாகச் சென்று தேநீர் அருந்துவோம். பேராசிரியர் காரில் வந்திருந்தால், உடனே வீட்டுக் குத் திரும்புவதாக இருந்தால் என்னையும் தனது காரில் ஏற்றிக் கொண்டு புறப்படுவார்.

பேராசிரியர் கே.டானியலை அவரது கறாச்சில் சந்தித்துப் பேசும் வழக்கம் இருந்து வந்திருக்கின்றது.

ஒருநாள் டானியலுடன் அவருக்கருகேயுள்ள வாங்கின் மீது உட் கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றேன். பேராசிரியரின் கார் கறாச்சிக்கு வெளியே வீதியோரத்தில் வந்து தரித்து நிற்கிறது. பேராசிரியர் காரில் இருந்து இறங்கி கேற்றைத் தாண்டி உள்ளே வருகின்றார். அவர் நெருங்கி அருகே வந்ததும் "வா... பரியாரி...வா..." என வழமையான மெல்லிய சிரிப்புடன் பேராசிரியரை டானியல் வரவேற்கின்றார். "டேய்...பகிடி விடாதே" என்று டானியலுக்குச் சொல்லிக் கொண்டு பேராசிரியர் சிரித்த வண்ணம் வாங்கின் மீது எனக்கருகே அமருகின்றார். பேராசிரியர் கலா நிதிப் பட்டம்பெற்றவர். டொக்ரரை தமிழில் கலாநிதி என அழைக் கின்றோம். பேராசிரியர் டொக்டர் (Doctor) அல்லவா! வைத்தியர்களே நடைமுறையில் டொக்டர் என அழைக்கப்படுகின்றார்கள்.வைத்தியர்கள் கிராமங்களில் பரியாரி (பரிகாரி) என்றே அழைக்கப்படுவது வழக்கம். அதனை வைத்துக் கொண்டே டானியல் இந்தப் பகிடி சொன்னார்.

டானியல் தனது கறாச்சில் வேலை செய்யும் ஒருவரை அழைத்து ஒரு போத்தல் கையில் கொடுத்து தேநீரும் வடையும் வாங்கி வரும் வண்ணம் அனுப்பி வைக்கின்றார். டானியலைச் சந்திப்பதற்கு யாராவது வந்தார்களேயானால் இவ்வாறு உபசரிப்பது டானியலின் வழக்கம்.

பேராசிரியர் டானியலுடன் உரையாடிக் கொண்டு வடையைத் தின்று தேநீர் பருகினார். பேராசிரியர் பழகுவதற்கு எளிமையானவர் என்பது ஒரு புறம், அக்காலத்தில் படைப்பாளிகளுக்கிடையே இருந்து வந்திருக்கும் நெருக்கமான உறவே இவ்வாறு பழக வைத்தது. கல்வி, பதவி, உயர்வு தாழ்வு எந்த வகையான வேறுபாடுகளும் அவர்களது ஊடாட்டத்துக்கு இடையூறாக இருக்கவில்லை. எல்லோரும் தாங்கள் எழுத்தாளர்கள் என்னும் தனிக் குடும்பமாக ஒற்றுமையாகச் செயற்பட்டார்கள். எழுத்தாளர் குடும்பங்களில் நடைபெற்ற நன்மை, தீமைச் சடங்குகளில் உரிமையுடன் சென்று கலந்து கொண்டார்கள். இவ்வளவுக்கும் எல்லோருக்கும் மத்தியில் கருத்தொற்றுமை இருந்து வந்ததாகச் சொல்லிக் கொள்ள இயலாது. இலக்கிய ரீதியான கருத்து முரண்பாடுகள் அவர்களைப் பிரித்து வைக்க வில்லை. கருத்து முரண்பாட்டை விஞ்சிய சகோதர ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதன் பொருத்தப்பாடு கருதி இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாமெனக் கருதுகின்றேன்.

ஈழத்து இலக்கிய உலகில் மிக முக்கியமான காலம். மரபுப் போராட்டம் அப்பொழுது நடந்து கொண்டிருந்தது. அக்கால கட்டத்தில் சிறுகதைகளைச் 'சிறுகத்தைகள்' என்றும் சிறுகதைகள் எழுதப்பெற்ற பேச்சுவழக்கு மொழி நடையை இழிசனர் வழக்கு (இழிசினர் வழக்கு) எனவும் பண்டிதர்கள் மூர்க்கத்தனமாக எதிர்த்தார்கள். இலக்கியம் என்பது கற்றுத்தேறிய பண்டிதர் களால் மாத்திரமே படைக்கப்பட வேண்டும் என்பது அவர்கள் கொள்கை. இலக்கியம் என்பது 'உயர்ந்தோர் மாற்றே' என்பதுதான் அவர்களின் முடிந்த முடிபாக இருந்து வந்தது. தக்க கல்வி இல்லாதவர்கள் பேச்சு வழக்கினை எழுத்து வழக்கில் எழுதுகின்றவர்கள், படைக்கும் இலக்கி யங்கள் இலக்கிய உலகில் இருந்து ஓரங்கட்டப்பட வேண்டியவைகள் என்றார்கள்.

பண்டிதர்களின் உக்கிரமான தாக்குதல் டானியல், ஜீவா இருவரையும் இலக்காகக் கொண்டே அப்பொழுது நடந்து கொண்டிருந்தது. ஜீவாவின் 'தண்ணீரும் கண்ணீரும்'சிறுகதைத் தொகுதி அரச சாகித்திய விருதினை ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன்முதலாகப் பெற்றுக் கொண் டமை பண்டிதர்களின் வெப்பிசாரத்தினையும் சீற்றத்தினையும் மேலும் பெரிதாகக் கிளறி விட்டது. இழிசனர் வழக்குப் பற்றிப் பலகட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதியதோடு ஆறாது, 'செந்தமிழ் வழக்கு' என சிறிய



புத்தகம் ஒன்றினையும் தலைமைப் பண்டிதர் சோ.இளமுருகன் எழுதி வெளியிட்டார்.

இந்தப் பண்டிதர்களின் குற்றச்சாட்டுகள், தாக்குதல்கள் என்பன வற்றுக்கு ஈடுகொடுத்து பதில் கட்டுரைகளைப் பேராசிரியர்கள் கா.சிவத் தம்பி, க.கைலாசபதி ஆகிய முற்போக்காளர்களும், முற்போக்கணியினைச் சேர்ந்த ஏனைய சிலரும் எழுதினர். அக்காலத்தில் கைலாசபதி 'தினகரன்' பத்திரிகையின் ஆசிரியராகச் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். மரபு ஒன்றினையே அழுங்குப் பிடியாகப் பற்றிப்பிடித்துக் கொண்டி ருந்த பண்டிதர்களுக்குப் பதிலிறுக்கும் வகையில் 'மரபு என்பது தேங்கி நிற்கும் குட்டை நீரல்ல' என்னும் பொருள்படத் தலையங்கமிட்டு சிவத் தம்பி தாக்கமான ஒரு கட்டுரையைத் 'தினகரன்' வார இதழில் எழுதினார். அக்கட்டுரை மிகக் காத்திரமானதும் மரபுப் பண்டிதர்களுக்குத் தக்க பதில் அளிப்பதாகவும் அமைந்தது.

இவ்விடத்தில் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான ஒன்றுண்டு. பேராசிரியர் பண்டிதர் ஒருவருடைய மகன். பேராசிரியரின் தந்தையார் தலைமையாசிரியராக இருந்த பொ. கார்த்திகேசு ஒரு பண்டிதர், சைவப்புலவர். அது மாத்திரமல்லாது நவீன இலக்கியத்துக்கு எதிராக மரபுப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருந்த இளமுருகனாரின் நண்பர். மரபுப் போராட்டம் நடந்து கொண்டிருந்த சமயத்தில் பேராசிரியரின் தந்தையார் இளமுருகனாரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் ஒன்று ஏற்பட்டிருக்கின்றது. அப்பொழுது தினகரன் பத்திரி கையில் பேராசிரியர் எழுதிய கட்டுரை பற்றி பேராசிரியரின் தந்தையா ருக்கு இளமுருகனார் சற்றுச் சூடாக எடுத்துச் சொல்லி இருக்கின்றார். அவர் எடுத்துச் சொல்லி முடிக்கும் வரை பேராசிரியர் தந்தையார் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்திருக்கின்றார். இறுதியில் ''சிவத்தம்பி என்ற யாரோ எழுதி இருக்கிறார். யாரென்று தெரியவில்லை'' என்றாராம் இளமுருகனார். அப்பொழுது பேராசிரியரின் தந்தையார் மிக அமைதியாக ''அது என்ரை மகன்''எனச் சுருக்கமாகச் சொல்லி இருக்கின்றார். இள முருகனார் அதைக் கேட்டு அதிர்ந்து போனாராம். அதன் பிறகு அவர் அது பற்றி எதுவுமே பேசிக்கொள்ளவில்லை. இந்தச் சம்பவம் பேராசிரியர் சொல்லக் கேட்டு நான் அறிந்து கொண்டேன்.

# 5

# "காற்றோடை சண்டை போடவேண்டாம்"

பேராசிரியருக்கு என்னைப் பற்றி ஒரு மனக்குறை இருந்து வந்திருக்கின்றது. எனது தமிழ் கற்பித்தல் பற்றி பின்வருமாறு பேராசிரியர் பதிவு செய்திருக்கின்றார்: 'தெணியான் ஒரு நல்ல தமிழாசிரியர். தமிழை நடுத்தர வகுப்புகளில் பயிற்றுவிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.(மல்லிகை அட்டைப்பட அறிமுகம் மார்ச் 1989.)

பேராசிரியர் குறிப்பிடும் நல்ல பெயரும் ஆற்றலும் எனக்கு வேறு வழியில் பயன்படலாயிற்று. எனக்கு நான்கு குழந்தைகள். நால்வரும் படித்துக் கொண்டிருந்தார்கள். அரசினர் கல்லூரி ஒன்றில் கல்வி கற்பித்துக் கொண்டு தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று கல்வி கற்பிப்பதனை வெறுக்கின்றவன் நான். சில தனியார் கல்வி நிலையங்கள் என்னை இணைத்துக் கொள்ள விரும்பிய போதும், அதனை நிராகரித்து வந்திருக்கின்றேன். என்னதான் கொள்கைப்பிடிப்பு இருந்தாலும் குடும்பப் பாரம் நிர்ப்பந்தித்து எங்களை மாற்றி அமைத்து விடுகின்றது என்பது சமூக யதார்த்தம். எனது குடும்பத் தேவைகளை ஈடுசெய்ய வேண்டிய நெருக்கடி இருந்ததினால் ஓய்வு நேரங்களில் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லத் தொடங்கினேன்.

தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிப்பவர்களுக்கு இன்னொரு தேவை இருந்தது. பட்டிமன்ற மேடைகளில் பேசுவது. பட்டிமன்ற மேடைகளில் ஒரு கவர்ச்சி இருந்தது. தனியார் கல்வி நிலைய ஆசிரியர் களைப் பட்டிமன்றங்கள் பிரபலப்படுத்தின.

கல்லூரி வகுப்புகள் முடிந்த பிறகு மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறுகளிலும் தனியார் கல்வி நிலையங்கள் சிலவற்றில் ஓடியோடிப் படிப்பித்துக் கொண்டிருந்தேன்.



அதே சமயம் இரவு வேளைகளில் பட்டி மன்றங்களில் பேசுவதற்குச் செல்ல வேண்டி இருந்தது. ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலைகள் போன்ற பொது நிறுவனங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அக்காலத்தில் தவறாது ஒரு பட்டிமன்றம் இடம்பெற்று வந்தது. அவ்வாறு இடம்பெற்றமைக்கு, எவ்விதச் செலவுமில்லாது ஒரு நிகழ்ச்சியை நடத்தி முடிக்கலாம் என்பதும் பிரதானமான ஒரு காரணமாக இருந்திருக்கின்றது. தூர இடமாக இருந்தால் போக்குவரத்துக்கான கார்ச் செலவை மாத்திரம் ஏற்பாட்டாளரின் கையில் தந்து அனுப்புவார்கள். பட்டிமன்றங்களில் பேசுவதற்கென்று எங்களுக்குள்ளே ஒரு குழு இருந்து வந்தது. அந்தக் குழுவைச் சேர்ந்த அனைவரும் அரசினர் பாடசாலைகளில் ஆசிரியர்களாக இருந்து வந்த அதேசமயத்தில், தனியார் கல்வி நிலையங்களிலும் கல்வி பயிற்றுவித்துக் கொண்டிருந்தார்கள். எங்கள் பட்டிமன்றக் குழுவுக்கு எங்களுடைய வட்டாரக் கல்வி அதிகாரி ஈசுரபாதம் தலைமை தாங்கினார். அவரே எல்லாப் பட்டிமன்றங்களுக்கும் தலைமை. என்னுடைய ஆசிரியர் ஒருவரும் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தார். கன்னைக்கு மூவராகப் பிரிந்து இரண்டு கன்னைகளில் நின்று வாதாடுவோம். சில சமயங்களில் மூன்று கன்னைகளாகப் பிரிந்து நிற்பதும் உண்டு. இந்தப் பகுப்புகள் நிரந்தரமானவை அல்ல. இடத்துக்கிடம் மாற்றம் பெறும். ஒரே தினத்தில் இரண்டு மூன்று இடங்களில் எங்கள் பட்டிமன்றங்கள் நடைபெறுவதும் உண்டு. நவராத்திரி காலத்தில் விஜயதசமிப்பூசை நடைபெறும் தினங்களில் கார்களில் ஓடி ஓடிச் சென்று மூன்று நான்கு பட்டிமன்றங்களில் பேசுவோம். ஒவ்வொரு பட்டிமன்றத்திலும் வெவ்வேறு தலைப்பு. ஒவ்வொரு பட்டிமன்றத்திலும் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்போம். சில பட்டிமன்ற அரங்குகளுக்கு நாங்கள் போய்ச் சேர இரவுநேரம், காலம் கடந்து போய்விடும். ஆனால் பட்டிமன்றத்தை கண்டுகளிப்பதற்காக மக்கள் கூட்டம் கலைந்து போய்விடாது காத்தி ருக்கும். சிறுபராயத்தில் நான் கண்விழித்திருந்து சின்ன மேளக்காரியின் ஆட்டத்தைப் பார்த்து இரசித்தது போல் எங்கடைய ஆட்டத்தைக்கான மக்கள் கூடியிருந்தார்கள். பல நாட்களில் நடுஇரவு தாண்டிய பிறகே நான் வீடு வந்து சேருவதுண்டு. இவைகள் யாவுமே பேராசிரியருக்கு மிகத் தெளிவாகவே தெரியும். சில சமயங்களில் நான் நடந்தவற்றை எடுத்துச் சொல்வதுண்டு. பேராசிரியர் அப்பொழுது வாய்திறக்காது மௌனமாக இருந்து விடுவார். அவருக்குப் பட்டிமன்ற நிகழ்வுகளில் ஈடுபாடில்லை. அதனைப் பெறுமதியான

இலக்கிய நிகழ்வாக அவர் அங்கீகரிக்கவில்லை என்பதும் நான் அறிவேன்.

என்னுடைய இந்த விடயத்தில் மௌனம் காத்துவந்த பேராசிரியர் ஒருதினம் வாய் திறந்து சொன்னார் ''தெணி இனிப் பட்டிமன்றங்களுக்குப் போய் பேசுகிற வேலையை விட்டுவிடுங்கோ! நீர் எழுத்தாளன், மேடை ஏறிக் காற்றோடை சண்டை போட வேண்டாம். பேனாவை எடுத்து எழுதுங்கோ''.

இந்தக் கருத்தினை கே.டானியலும் இடையிடையே என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

இதனைப் பேராசிரியர் இவ்வாறு பதிவு செய்துள்ளார்: ''சமூக நிறுவன நிலையில் அவர் தமிழ் அறிந்த ஒருவராக ஏற்கப்பட்டிருந்தது வேறு. அதற்கான உறுதிப்பாடு அவர் அக்காலத்து பட்டிமன்றங்களில் பேச அழைக்கப்பட்டிருந்தமையாகும்.'' (இந்த இலக்கியப் பிணியிலிருந்து தெணியானை விடுவிப்பதற்கு எனக்குப் போதும் போதுமென்றாகி விட்டது).

பட்டிமன்றங்களில் இருந்து பேராசிரியர் என்னைத் தடுத்தாட் கொண்டார்.

எண்பத்திரண்டாம் ஆண்டுக்குப் பின்னர், நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள் உருவாகியதுடன் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதில் இருந்தும் மெல்ல நான் விலகிக் கொண்டேன்.

## 6

## பொது நிகழ்வுகளில் உரையாற்றுவது தொடர்பில் பேராசிரியரின் கருத்து

''தெணி முதற் கல்லு ஒரு நாளும் போடக் கூடாது. இரண்டாவது கல்லுப் போட ஒரு போதும் பின் நிற்கக்கூடாது''பேசிக் கொண்டிருக்கும்போது பேராசிரியர் ஒரு நாள் இப்படிச் சொன்னார்.

நான் கல்லுப்போட்ட ஒரு சம்பவம். நான் போட்ட அந்தக்கல்லு பெருந்தாக்கமாகவே மோதி விழுந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் பேராசிரியரும் அங்கு கவனித்துக் கொண்டிருந்தார்.

அந்த நிகழ்ச்சி சிறுகதைத் தொகுதி ஒன்றின் வெளியீட்டு விழா. எழுத்தாளர்கள் பலருடைய ஒவ்வொரு சிறுகதையை உள்ளடக்கி வெளிவந்த நூல். அந்த நூலுக்கான மிக நீண்ட அறிமுகவுரை ஒன்றினைப் பேராசிரியர் எழுதி இருந்தார். வடமராட்சிப் பகுதியிலுள்ள பொது நிறுவனம் ஒன்று அந்த நூலினை வெளியீடு செய்தது.

நூல் வெளியீட்டு விழாவில் இலக்கியவாதிகள் பலர் கலந்து கொண்டனர். பிரதான பேச்சாளராக பேராசிரியர் விழாவுக்கு வருகை தந்திருந்தார். நூல் வெளியீடு செய்யும் நிறுவனத்தின் தலைவர் விழாவுக்குத் தலைமைதாங்கிக் கொண்டிருந்தார்.

விழாவுக்கு அழைக்கப் பெற்ற பேச்சாளர்களின் பேச்சுக்கள் யாவும் முடிவடைந்த பின்னர் இறுதியில் பேராசிரியரின் உரை இடம்பெற்றது. சிறுகதை இலக்கியம் பற்றி ஆழமான நீண்ட உரை ஒன்றினை அவர் ஆற்றினார். நூல் வெளியீட்டு விழாவில் கடைசியாக நூலாசிரியரின் உரை இடம்பெறுவது வழக்கம்.

அந்த நூல் வெளியீட்டுக்கென எழுத்தாளர் சிலரை உள்ளடக்கிய குழுவொன்று தெரிவு செய்யப் பெற்று செயற்பட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் குழுவில் அங்கம் வகித்தவர்களுள் நானும் ஒருவன். நூலாசிரியர் சார்பில் ஏற்புரை செய்வதற்கு நானும் இன்னொரு எழுத்தாளரும் நியமிக் கப்பட்டிருந்தோம். எங்கள் இருவரையும் தேர்ந்தெடுத்துக் கொண்டவர் களின் தேர்வுநோக்கில் மிக நுட்பமான கருத்து நிலை ஒன்று இருந்தது. நான் முற்போக் கெழுத்தாளர் அணியைச் சேர்ந்தவன். அவர் முற்போக் குக்கு எதிரான அணியில் இருந்து வந்தவர். கருத்து நிலையில் வேறு பட்டிருந்த இருபகுதியாருக்கும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்னும் எண்ணம் மனதில் இருந்திருக்க வேண்டும். இந்த எண்ணமே இறுதியில் வினையாக வந்து விழுந்தது. பொதுவாகச் சொல்வதானால் விழாவினர் தலையில் ஒரு கல்லாக வந்து விழுந்தது.

அந்தத் தொகுதிக்கு அறிமுகவுரை எழுதிய பேராசிரியர் எனது சிறுகதையும் இன்னொரு சிறுகதையுமே தொகுதியில் சிறந்த படைப்புகள் எனக் குறிப்பிட்டிருந்தார். எனது சிறுகதையை முதன்மைப்படுத்திப் பேசும் போது கூறினார். அவ்வாறு அவர் கூறிவைத்ததற்கும் பின்ன ணியில் அவர் வெளியில் சொல்லாத ஒரு நியாயம் இருந்தது.

பேராசிரியரின் உரையின் பின்னர் நூலாசிரியர்கள் சார்பில் அந்த எழுத்தாள நண்பருக்குச் சொற்பொழிவாற்றும் சந்தர்ப்பம் வழங்கப் பெற்றது. அந்த எழுத்தாள நண்பர் அந்தத் தொகுதியுடன் சம்பந்தப்பட்ட பொதுவான விடயங்கள் பற்றிப் பேசுவைதத் தவிர்த்து விட்டு, எனது சிறுகதையை மிகத் தரக் குறைவாகச் சொல்வதையே இலக்காகக் கொண்டு பேசி முடித்தார்.

இத்தகைய சூழ்நிலைகளில் தலைமை தாங்குகின்றவர்களுக்கு ஒரு பொறுப்பிருக்கிறதல்லவா! தவறாகவோ அல்லது ஒழுங்கு முறைகளை மீறியோ மேடையில் பேசுகின்றவரின் கருத்துப் பற்றிக் குறைந்ததொரு சமாதானமான கருத்தினை எடுத்துச் சொல்லி நெறிப்படுத்த வேண்டியது அவருக்குரிய பிரதான கடமை. அந்த விழாவின் தலைவர் அப்படிச் செய்யவில்லை. எப்பொழுதும் குறிப்பிட்ட அந்த எழுத்தாளரைப் பாது காப்பதும், அவர் சார்பாக நடந்து கொள்வதும் தலைவரின் கடந்த கால நிகழ்வாக இருந்து.வந்திருப்பதனை முன்னரே அவதானித்து வைத் திருந்தேன். அவர்களுக்கிடையே இருந்து வந்த அந்த உறவுக்கான பின்னணியும் எனக்குத் தெளிவாகத் தெரியும். தலைவர் அந்த நண்பரின் பேச்சுக்குப் பின்னே எந்த விதமான குறிப்பும் சொல்லாது பேசுவதற்கு என்னை அழைத்தார்.



நான் என்னை விளங்கி வைத்துக் கொண்டு இருப்பவன். எனது பலம், பலவீனம் எல்லாம் அறிந்தவன். என்னைத் தவிர என்னை முழுமை யாக உணர்ந்து வைத்திருக்கின்றவர்கள் யார் இருக்கின்றார்கள்! நான் முற்கோபக்காரன். தவறு என்று கண்டால் அதனைக் கண்டிப்பதற்குத் தயங்கும் குணம் என்னிடம் இல்லை. பேசுவதற்கு எழுகின்ற போது சினத்துடனேயே எழுந்தேன். எனது அடங்காச்சினம் அந்த எழுத்தாளர் மேல் இருந்ததிலும் பார்க்க, தலைமை தாங்கிக் கொண்டிருந்த இந்த அந்தத் தலைவர் மீதே அதிகம். ஆனால், தலைவரை அப்பொழுது கண்டித்துப் பேசுவதற்குரிய வாய்ப்பு இல்லை. வெளிப்படையான ஒரு நியாயமும் சொல்வதற்கில்லை. இவைகள் யாவும் ஒன்று சேர, அந்த எழுத்தாளர் மீது எனது மனக் குமுறலைக் கொட்டித் தீர்த்தேன். நான் பொதுவாகவே உரத்த தொனியில் மேடையில் பேசும் இயல்புடையவன். அப்படிப்பட்ட எனக்கு சினமும் சேர்ந்து கொண்டால் சொல்லவா வேண்டும்? அடிபட்ட சிங்கமாக மேடையில் சிலிர்த்துக் கொண்டு நின்றேன்.

கூட்டம் முடிவடைந்தது. மாலைப் பொழுது மறைந்து விளக்குகள் எரிய ஆரம்பித்து விட்டன. பேராசிரியர் வீடு போய்ச் சேர வேண்டும். கார் ஒன்றில் வல்வெட்டித்துறை சென்று அவர் வீட்டில் இருந்து அழைத்து வந்தவன் நான். மீண்டும் பேராசிரியருடன் அதே காரில் ஏறிப் புறப் பட்டேன். அந்த விழாவுக்கு வருகை தந்திருந்த வேறு சில நண்பர்களும் காரில் ஏறிக் கொண்டார்கள். கார் ஓடிக் கொண்டிருந்தது. பேராசிரியர் மௌனமாக காருக்குள் அமர்ந்திருந்தார். சிறிது நேரத்தின் பின்னர் அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு “தெணி..” என மெல்ல அழைத்தார். தொடர்ந்து “நீங்கள் அப்படி ஆக்ரோஷமாகப் பேசி இருக்கக்கூடாது” என்றார். அப்பொழுது தான் எனக்கு மனதில் சற்று உறைத்தது. அதன் பின்னர் எதிர்க் கருத்தினைச் சாடுவதற்கு ‘கொதித்துப் பேசும்’எனது இயல்பினை மட்டுப்படுத்திக் கொண்டேன். “இரண்டாவது கல்லைப் போடுவதற்குப் பின் நிற்கக்கூடாது” எனச் சொன்ன பேராசிரியரா இப்படிச் சொல்லுகின்றார் என நான் எண்ணவில்லை. பேராசிரியரின் உயர்ந்த பண்பினையே நான் கண்டு பெருமைப்பட்டுக் கொண்டேன்.

அன்று எனக்கெடுத்துக் கூறியதுடன் பேராசிரியர் விட்டுவிட வில்லை. தவறாக மற்றவர்கள் என்னைக் கருதி விடக்கூடாதென்ற அக்க றையும் அவர் மனதில் இருந்திருக்க வேண்டும். அதனால் அதனைப் பின்வருமாறு எழுத்தில் பதிவு செய்துள்ளார்:

"இந்த ஆசிரியஆளுமை காரணமாகத் தெணியானிடத்து சமூகச் செம்மை பொலியும் ஒரு நடத்தை முறையும் உண்டு. சில வேளைகளிற் கூட்டங்களில் பேசும் பொழுது இந்த விதியை அவர் மீறியுள்ளாரெனினும் அது பேச்சு மட்டத்திலே தான். நடைமுறை உறவில் 'நயத்தக்க நாகரிகம்' பலவுடையவர்''.

பிரச்சினைக்குக் காரணமான அந்தச் சிறுகதை 'உவப்பு' பேராசிரியருக்கு மிகவும் பிடித்த ஒரு சிறுகதை. 'மஜிக்கல் றியலிஸத்துக்கான நல்ல உதாரணமாகும்'எனவும் பேராசிரியர் பதிவு செய்துள்ளார். அந்தப் படைப்பு சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப் பெற்று, சிறுகதைத் தொகுதி ஒன்றில் இடம்பெற்றுள்ளது.

நான் மேடை ஏறிக் கூட்டங்களில் பேசுகின்ற வேளைகளில் குறிப் பெழுதிய காகிதம் ஒன்று எனது கையில் நிச்சயம் இருக்கும். இந்தக் கூட்டத்தில் என்னென்ன விடயங்களை எடுத்துச் சொல்லப் போகின் றேன் என்பதனை முன்கூட்டிச் சிந்தித்து, ஒழுங்கு படுத்திக் குறித்துக் கொள்வேன். குறித்துக் கொண்ட துண்டுக் காகிதம் கையில் இல்லாது விட்டால் நிச்சயம் பொக்கட்டில் இருக்கும். சென்ற இடத்தில் திடீரென வந்து பேசுமாறு கேட்டால் ஒரு போதும் உடன்பட்டு நான் மேடை ஏறுவதில்ல. மரணச் சடங்குகளில் அஞ்சலி உரை ஆற்றுவதற்கு இவ்வாறு விதிமுறைகளைப் பின்பற்ற இயலாது. அது விதி விலக்கானது. இந்த விதி முறைகளை நான் பின்பற்றுவதற்கு வழிநடத்தியவர் பேராசிரியர். "ஐந்து நிமிட நேரம் பேசுவதாக இருந்தால் குறைந்தது அரைமணி நேரமாவது அதுபற்றிச் சிந்தித்துக் குறித்துக் கொண்டு தான் பேசவேண்டும்'' என்பார். எதனைப் பேசப்போகின்றேன் என்பதைத் தீர்மானிக்காது, மேடையில் ஏறிநின்று மனதில் எழுந்தவைகளை எல்லாம் வாயினால் கொட்டித் தீர்க்கக்கூடாதெனவும் கூறுவார்.

பொதுக்கூட்டங்கள் பற்றி அவருக்குக்கென்றே சில தீர்மானங்கள் அவர் மனதில் இருந்து வந்தன. பெருந்தொகையான சனக் கூட்டம் வந்துகூடி இருக்கும் சபைகளில் சொற்பொழிவாற்றுவதனையே மேடைப் பேச்சாளர்கள் மிகவும் விரும்புவார்கள். அப்படியான சபையில் பேசுவது தமக்குப் பெருமை என்றும் கருதுவார்கள். வாக்குச்சீட்டுகளை எதிர் பார்க்கும் அரசியல்வாதிகள் அத்தகைய பெருஞ்சனத் திரளை எதிர் பார்ப்பதும் விரும்புவதும் நியாயம். இலக்கியவாதியான பேராசிரியர் போன்ற அறிஞருக்குத் தாம் சொல்பவற்றைக் கேட்டு விளங்கிக் கொள்ளு கின்ற சிறிய கூட்டம் போதும். அவர்கள் தான் முக்கியம். அவர்களையே



எதிர்பார்ப்பார்கள். இது பற்றிக் குறிப்பிடுகையில் தெளிவாக எடுத்துக் கூறினார்.

"பெருந்திரளான மக்கள் மத்தியில் பொதுக் கூட்டங்கள், பொது விழாக்களில் பேச வேண்டி வந்தால் அதனைத் தவிர்க்க இயலாது. சராசரி சாதாரண சனங்களை விட்டு இந்த சமூகத்தில் எவரும் விலகி இருக்க இயலாது. விலகி இருக்கக் கூடாது. அந்தப் பெருங்கூட்டத்துக்குள்ளே யாராவது ஒருவன் இருப்பான். வேலி ஓரப் பூவரச மரத்தில் மெல்லச் சாய்ந்த வண்ணம், ஒரு காலை மெல்ல மடக்கி வைத்துக் கொண்டு கூர்ந்து கேட்டுக் கொண்டு நிற்பானே.. அவனுக்காகத்தான் பேச வேண்டும். அவன் ஒருவன் மாத்திரம் எனக்குப் போதும்''.

ஓர் இலக்கியக் கூட்டமாக இருந்தால் கூட, கேட்டு விளங்கிக் கொள்ளத் தகுந்த ஒரு பத்துப் பேர் இருந்தால் போதும். பெருங்கூட்டம் வேண்டியதில்லை என்று கூறுவார். விழலுக்கு இறைத்த நீராகப் போய் விடாது. பயன்பெறத் தகுந்தவர்கள் மத்தியில் பேச வேண்டும் என்றே பேராசிரியர் விரும்பினார். அவர் உள்ளத்தில் இருந்து வந்த எண்ணம் இவ்வாறாக இருந்த போதிலும் நடைமுறையில் நிலைமை வேறாகவே இருந்து வந்திருக்கின்றது. பேராசிரியர் பேசுகின்றார் என்றால் கற்றவர்கள், புத்திஜீவிகளின் பெருங் கூட்டம் வந்து கூடியது என்பது யாவரும் அறிந்த உண்மை. தங்கள் விழாக்களில் பேராசிரியர் வருகை தந்து உரையாற்றுவது பெரும் பேறாக, ஒரு முத்திரையாக கருதினார்கள்.

# 7

# நாவலர்

இந்த நாட்டின் பெரும்பான்மை இனமக்கள் அநகாரிய தர்ம பாலவைத் தேசிய வீரராகக் கொண்டாடுவது போல் தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்து வந்த தேசியவீரர் யார்? என்னும் கேள்வி மேற்கிளம்பியது. தேசிய வாதம், தேசிய உணர்வு பற்றிய சிந்தனை முற்போக்குச் சக்திகளுக் கிடையே எழுந்த காலத்தில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இது பற்றி அக்கறை காட்டியது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த கல்விமான்கள் ஆய்வாளர்கள் இது பற்றி ஆராயத் தொடங் கினார்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலக்கிய ரீதியில் தேசியம் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தது. அதனால் தமிழர்களிடையே தேசிய வீரனைக் கண்டு கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அவர்களின் ஆய்வுகளின் பேறாகவே நல்லூர் ஆறுமுக நாவலர் இலங்கையின் தேசிய வீரராக வெளிக் கொண்டுவரப் பெற்றார்.

ஆறுமுக நாவலருக்குப் பெரும் விழா எடுத்தார்கள். ஆய்வுக் கட்டு ரைகள் பலவற்றை எழுதித் தொகுத்து பாரிய மலர் ஒன்றினை வெளி யிட்டார்கள். பின்னர் இலங்கை அரசு நாவலரைத் தேசிய வீரராக அங்கீ கரித்து முத்திரை வெளியிட்டு வைத்தது.

இத்தகைய செயற்பாடுகள் அனைத்தினையும் முன்னெடுத்துச் சென்ற பெருமை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சார்ந்தது என்பது வரலாற்று உண்மை. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தினர் எடுத்த நடவடிக் கைகளில் பிரதான பங்கெடுத்தவர்களுள் ஒருவர் பேராசிரியர். நாவலர் பற்றிய வேறுபட்ட கருத்துகள், விமரிசனங்கள் சில பேராசிரியரிடத் தில் இருந்து வந்திருக்கின்றது என்பதனை நான் அறிவேன். தமது கருத் துக்களை வெளியிடுவதில் பேராசிரியர் ஒளிவு மறைவு இல்லாதவர் என்பதனால், நாவலரின் மறுபக்கம் பற்றிய அவரது எண்ணங்களை



வேறு பலரும் அறிவார்கள். நாவலர் வளர்த்து விட்டு அல்லது ஊக்கப் படுத்திவிட்டுச் சென்றுள்ள சமூகக் கருத்துகளால் பேராசிரியரும் பாதிக் கப்பட்டார் என்பதனை உணர்ந்து வைத்துக் கொண்டே தேசிய வீரராக நிறுவதில் பங்களிப்புச் செய்து வந்திருக்கின்றார்.

இவைகள் யாவும் நடந்து முடிந்து சில ஆண்டுகளின் பின்னர் எங்கள் உரையாடலின் போது நாவலர் பற்றிய கதை வந்து சேர்ந்தது. அப்பொழுது பேராசிரியர் “நாவலரைத் தேசிய வீரராக வெளியே கொண்டு வந்தவர்கள் நாங்கள். இப்ப யார் யாரோ எல்லாம் நாவலருக்குக் குடையும் குஞ்சமும் பிடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இப்ப நாங்கள் குடைக்கு வெளியிலே...” என்று சொல்லிப் பலமாகச் சிரித்தார். யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகத்தின் தந்திரமான செயற்பாடும், அவருக்கு இழைத்த அநீதிகளும் இவ்வாறு சொன்னதுக்குக் காரணமாக இருக்கலாம் என நான் நினைத்துக் கொண்டேன்.

8

# பேராசிரியர் கண்கலங்கிய சந்தர்ப்பம்

வெயில் கடுமையாக எறித்துக் கொண்டிருந்தது. ஒரு இலைகூட அசையவில்லை. காற்றில்லை. அப்படியொரு பயங்கர வெப்பம், புழுக்கம். உடல் மெல்லக் கசிகிறது. "தெணி நிழலுக்குப் போவோம்" சொல்லிக் கொண்டு பேராசிரியர் கதிரையைத் தூக்கிக் கொண்டு நடக்கின்றார். நானும் கதிரையைத் தூக்கிக் கொள்கின்றேன். வீட்டுக்கு வெளியே வடமேற்கு மூலையில் வீதி ஓரமாகத் தண்ணீர்த் தாங்கி. அந்தத் தண்ணீர்த் தாங்கிக்கு அருகே ஒரு பலாமரம். ஓங்கி உயர்ந்து வளராது, சடைத்துப் படர்ந்து நிற்கும் இளம்கன்று. அந்த மரத்துக்குக் கீழ் ஒளிக்கதிர் ஊடுருவாத கனத்த நிழல். கதிரைகளைத் தூக்கிச் சென்று அந்தப் பலாமரத்துக்குக் கீழே போட்டு விட்டு இருவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றோம்.

வெயிலில் இருந்தவனுக்குத்தான் நிழலின் சுகம் தெரியும் என்பார்கள். அவ்வளவு நேரமும் புழுங்கி அவிந்து கொண்டிருந்த எங்களுக்கு வெகுசுகமாகவே இருந்தது. அதை வெளியே சொல்லிக் கொள்ளாமல் அந்தச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தோம். இடையில் பேராசிரியர் தலையைத் தூக்கி மேலே நோக்கினார். பின்னர் சொல்லுகின்றார், "தெணி இந்த மரத்தையல்லோ தறிக்கவேணும் எண்டு சொல்லினம்" என்று. "என்னத்துக்காம்?" நான் கேட்கின்றேன். "இந்த மரம் ஒழுங்காக் காய்க்கிறதில்லை. காய்த்தாலும் கூழன் பழம்... அதுதான்... ஆனால், இந்த மரந்தருகிற நிழல்.. இந்த நிழலில் கிடைக்கும் சுகம்... பழத்தைவிட எவ்வளவு மேலானது. பலாப்பழம் தேவையானால் காசு கொடுத்து வாங்கலாம். நிழலைக் காசு கொடுத்து வாங்க முடியுமா?" என மென்மையான உணர்வோடு அனுபவித்துக் கொண்டு கூறினார். இன்று பேராசிரியர் வீட்டு வீதியில் என்றாவது இடையிடையே செல்ல நேரும்போது அந்தப் பலாமரத்தை பார்க்கின்றேன். அந்தப் பலாமரம் முன்னரிலும் பார்க்க கிளையோச்சிப் பரந்து செழித்து வளர்ந்து நிற்கின்றது. ஆனால், அந்த மரத்தின் குளிர்தரும் நிழல் இன்று என் நெஞ்சைச் சுடுகின்றது.

பேராசிரியர் எப்பொழுதும் ஒரு சமூக மனிதனாகவே வாழ்ந்த ஒருவர். சமூக சிந்தனையுடன் வாழ்ந்தார். சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் உள்ள சராசரி சாதாரண மக்களோடு நெருக்கமான உறவுகளைப் பேணிவந்தார். பல்கலைக்கழக மாணவனாகப் பேராதனையில் படித்துக் கொண்டிருந்த கால கட்டத்திலேயே இடதுசாரி அரசியலில் ஈடுபாடு கொண்டார். அதன் தொடர்ச்சியாகச் சமூகத்தின் மீது கொண்ட அக்கறை காரணமாகச் சில நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்துள்ளார்.

அப்பொழுது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் அவருக்கு நெருக்கமான தொடர்பு இருந்து வந்தது. இந்த நாட்டில் உருவாகி வந்த பயங்கரமான இனமுரண்பாடுகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்னும் எண்ணத்தை அவர் உள்ளத்தில் கொண்டிருந்தார். இடதுசாரிகளுக்கு ஊடாக அரசாங்கத்தை அணுகவேண்டுமெனக் கருதினார். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக்கிளை மூலம், கட்சியின் மத்திய அரசியற் குழுவுடன் தொடர்பு கொண்டு, அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து மேலும் காரியமாற்ற வேண்டும் என்பது அவர் திட்டமாக இருந்தது. அதன் முதற்கட்ட நடவடிக்கையாக வடமராட்சியில் வாழ்ந்த முக்கியமான கம்யூனிஸ்ட் பிரமுகர் பொன்.குமாரசாமியைச் சந்தித்துப் பேசுவதற்கு விரும்பினார்.

பகிரங்கமாக ஒளிவுமறைவின்றி அரசியல் பேசுகின்ற சூழ்நிலை கொஞ்சம் கொஞ்சமாக அருகிக் கொண்டு போகத் தொடங்கிய காலமது. நான் அப்பொழுது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தேன். கட்சியின் வடமராட்சிக் கிளைக் கூட்டம் பொன். குமாரசாமி இல்லத்தில் அக்காலத்தில் நடைபெறுவது வழக்கம். கிளைக்கூட்டத்துக்குப் போய்வரும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பொன்.குமாரசாமியை நான் சந்திப்பேன். கூட்டம் இல்லாத சமயங்களிலும் அவர் இல்லம் சென்று அவரைச் சந்தித்துவந்தேன். நான் தனிமையில் சந்தித்து உரையாடுவதை அவரும் விரும்பி இருந்தார் என்பதனை உணர்ந்து அவரோடு பேசுவேன். அவருடைய இல்லம் நெல்லியடியில், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்திருந்தது.

பேராசிரியரின் வீடு பருத்தித்துறை, காங்கேசன்துறை பிரதான வீதியில் இருந்தது. அன்றிருந்த அரசியல் நிலைமை காரணமாக இருவரது

சந்திப்பும் அந்தரங்கமாக இடம்பெற வேண்டுமெனப் பேராசிரியர் விரும்பினார். அந்தச் சந்திப்புக்கு ஏற்ற பொருத்தமான இடம் ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென ஆலோசித்தோம். இறுதியில் அந்தச் சந்திப்பை எங்கள் வீட்டில் வைத்துக் கொள்வோம் என்று முடிவெடுத்துக் கொண்டோம். சந்திப்புக்குரிய திகதி, நேரம் என்பவற்றைத் தீர்மானித்துக் கொண்டு பொன்.குமாரசாமி இல்லம் சென்று தகவல் சொன்னேன்

குறித்த திகதியில் பேராசிரியர் வல்வெட்டித்துறையில் இருந்து பஸ் வண்டியில் பிரயாணஞ் செய்து பொலிகண்டியில் வந்து இறங்கி, சிறிது தூரம் கிராமத்துக்குள்ளே நடந்து, எனது தாய்வீடு 'தெணியகம்' வந்து சேர்ந்தார். பொன்.குமாரசாமி சையிக்கிள் வண்டியில் நெல்லியடியில் இருந்து புறப்பட்டு, அங்கு வந்து சேர்ந்தார். அவர்கள் இருவரினதும் ஆலோசனையின்போது நான் உடன் இருந்தேன். நீண்டநேரம் பல விடயங்கள் பற்றி இருவரும் பல்வேறு கோணங்களில் கருத்துப் பரிமாறிக் கொண்டார்கள். இறுதியில் சில தீர்மானங்களுக்கு வந்தார்கள். பொன்.குமாரசாமி, இருவரும் சேர்ந்து அன்று எடுத்த அந்தத் தீர்மானங்களை யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட் கட்சிக்கிளையின் ஆலோசனைக்கு முன்வைப்பதாகவும் பின்னர் மத்திய குழுவுக்குக் கொண்டு செல்வதாகவும் கூறினார்.

அன்றைய இரகசியச் சந்திப்பினை முடித்துக் கொண்டு இருவரும் புறப்பட்டுச் சென்றார்கள், அவ்வளவுதான். அதற்குமேல் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

நான் வீட்டில் இருந்து புறப்பட்டுச் செல்லும்பொழுது எதிர்பார்த்துக் கொண்டுதான் சென்றேன். நான் எதிர்பார்த்து வந்ததுபோல பேராசிரியர் முகம் என்றுமில்லாதவாறு களை இழந்துகிடந்தது. ஆனால், நான் வந்திருப்பது கண்டு வழமைபோல என்னை வரவேற்றார்.

பேராசிரியரின் சகோதரி காலமாகி ஒருவார காலத்தின் பின்னர்தான் அவரைச் சந்திக்கின்றேன். உற்சாகமாகவும் கலகலப்பாகவும் பல்வேறு விடயங்களை எடுத்துச் சொல்லும் அந்தப் பேச்சு அவருக்கே உரிய தொனி எல்லாம் அடங்கிப்போன நிலையில் இருந்தார்.

குடும்பத்தில் மூத்தபிள்ளை பேராசிரியர். அவருக்குக் கீழே ஐந்து தங்கைகள்; ஒரு தம்பி. பேராசிரியருக்கு நேரே இளைய சகோதரியின் கணவர் ஓர் ஆசிரியர். அவரை எனக்கு நன்றாகவே தெரியும். எனது வீட்டுக்கு அண்மையிலேயே அவர் பிறந்தவீடு இருந்தது. எப்பொழுதாவது சந்திக்கும் சமயங்களில் இருவரும் பேசிக் கொள்வோம். பேராசிரியருக்கும் எனக்கும் இருந்து வந்த நெருக்கமான நட்பு அவர் அறிந்து



வைத்திருந்தார். இதனால் அவரது குடும்பம் பற்றி ஓரளவு நான் உணர்ந்து வைத்திருந்தேன்.

பேராசிரியருக்குத் தனது மூத்த சகோதரி மீது மிகுந்த வாஞ்சை உள்ளத்தில் இருந்து வந்திருக்கின்றது. அந்தச் சகோதரியின் இழப்பு அவரைப் பெரிதும் பாதித்தது. மனதில் இருந்த பாரத்தைக் குறைக்கும் நோக்கத்துடன் மனந்திறந்து சிலவற்றை அன்று எடுத்துச் சொன்னார்.

''வசதியான குடும்பங்களில் பிறந்து வளரும் பிள்ளைகளுக்கு ஒவ்வொருவருக்கும் தனிஅறை, தனிப்படுக்கை, தனிக் கோப்பை என்று எல்லாம் தனித்தனியே இருக்கும். அப்படி வளர்ந்த உடன் பிறந்தவர்கள் மத்தியில் நெருக்கமான சகோதர உறவு வளர்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஆனால், வறுமையோடு வளர்ந்தவர்கள் ஒரு கோப்பையில் உண்டிருப்பார்கள். ஒரே படுக்கையில் படுத்து, ஒரே போர்வையில் போர்த்திருப்பார்கள். அதனால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பு, இணங்கிப் போதல், தியாகம் என்பன இயல்பாக வரும். எனது குடும்பம் பெரியது. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த குடும்பம். எனது மூத்த தங்கை எனது தாயாரின் இடத்தில் இருந்து எத்தனை நாள் எனக்கு உணவு தந்திருப்பாள். நண்பர்களுடன் சேர்ந்து செக்கன்ஸோ சினிமாப்படம் பார்ப்பதற்குப் போய்விடுவேன். திரும்பி வீடு வந்து சேருவதற்கு எப்படியும் இரவு ஒருமணி தாண்டி விடும். குடும்பத்தில் மூத்த பெண் பிள்ளை அவள். எனது வருகையை எதிர்பார்த்து உணவை வைத்துக் காத்துக் கொண்டு கண்விழித்திருப்பாள். இரவு நேரங்களில் எல்லோருக்கும் உணவைப் பகிர்ந்து கொடுக்கும் போது சில சமயங்களில் அந்த உணவு போதாமலும் வருவதுண்டு. அந்தப் போதாமை, உணவு பங்கிட்டுக் கொடுக்கும் தாயை அல்லது மூத்தபெண் பிள்ளையைத்தானே பாதிக்கும்! அவர்கள் மற்றையவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு தாங்கள் இரகசியமாகப் பட்டினி கிடந்து விடுவார்களல்லவா! என்னுடைய இந்தத் தங்கை எத்தனை நாட்கள் எனக்கு உணவைத் தந்துவிட்டு தான் பட்டினி கிடந்திருப்பாளோ!''

பேராசிரியர் சொல்லிக்கொண்டு இலேசாகக் கண் கலங்கினார். மிக மென்மையான, பாச உணர்வுமிக்க ஓர் அண்ணனைக் கண்டு, மூன்று சகோதரிகளுக்கு மூத்தவனாகிய நானும் உள்ளம் கலங்கினேன். சகோதரியின் இழப்பினால் மனம் வருந்திக் கொண்டிருந்த சமயத்திலும் அந்த இழப்பின் வழியாக எழுந்த உணர்வுகளை வாழ்க்கையின் பெரும் உண்மைகளாக எடுத்துச் சொன்ன போதில் அவை எனது மனதில் ஆழமாகப் பதிந்தன.

## 9

# தேடல் மிகுந்த மாணவன்

பேராசிரியர் எப்பொழுதும் தான் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு மாணவன் என்று கூறுவார். சிலர் இவ்வாறு எடுத்துக்கூறி தாங்கள் எல்லாம் கற்றுத்தேர்ந்துவிட்டதாக எதிர்மறைக்கூற்றாகப் பதிவு செய்து கொள்வது போல பேராசிரியர் கூறுவதில்லை. இறுதிக்காலம் வரை தொடர்ந்து கற்றுக் கொண்டிருந்தவர் அவர்.

உலகில் சிறந்த நூலொன்று வெளிவந்திருக்கின்றது என்றால் அந்த நூலைப் படிக்கும் முதல் ஆளாகத்தான் இருக்க வேண்டும் என்று விரும்பும் மாணவர் அவர்.

அத்தகைய தேடல் மிகுந்த மாணவனாக எக்காலத்திலும் தன்னைக் கருதி வாழ்ந்து வந்த பேராசிரியர், சாமானியமான மற்றவர்கள் தெரிவிக்கும் கருத்துகளை ஒருபோதும் நிராகரிப்பதில்லை. அந்தக் கருத்துகள் பற்றியும் சிந்திப்பார். யாராவது ஐயம் எழுப்பினால், எழுந்தமானத்துக்கு அதனை நிராகரித்துவிடமாட்டார். தனக்குப் போதுமான தெளிவு இல்லாத விடத்து துறைசார்ந்தவர்களிடம் கேட்டறிந்து தெளிந்த பின்னரே, தமது கருத்தினை எடுத்துச் சொல்வார். இப்பண்புகளினால் பேராசிரியர் தமது அறிவுப்புலத்தினை மேலும் மேலும் செழுமைப்படுத்திக் கொண்டு வந்தார்.

எனக்குப் பேராசிரியரிடத்தில் இதுசார்ந்த அனுபவங்கள் பல இருப்பினும் இரண்டு அனுபவங்களை எடுத்துக் கூறலாம். எனது 'மரக்கொக்கு' நாவல் நான் எழுதிமுடித்த சமயம். அந்த நாவல் பிரதியைக் கொண்டு சென்று, அதற்கோர் அணிந்துரை எழுதித் தருமாறு கேட்டு பேராசிரியரிடம் கொடுத்தேன். அடுத்த வாரம் சென்றவேளையில் பேராசிரியர் நாவல் பற்றி என்னுடன் எதுவும் பேசவில்லை. அவர் இன்னும் அந்தப் பிரதியை வாசிக்கவில்லை என்பதனை விளங்கிக் கொண்டு, அதுபற்றி எதுவுமே பேசாமல் அவரோடு உரையாடிக் கொண்டு வீடுதிரும்பி விட்டேன். வழமை போல அடுத்த வாரம் சென்றேன். பேராசிரியர் என்னைக் கண்டு வரவேற்றுக் கொண்டு "இருங்கோ வாறன்" எனச் சொல்லிக் கொண்டு உள்ளே சென்றார். திரும்பி வரும்போது 'மரக்கொக்கு' நாவல் பிரதி அவர் கையில் இருந்தது. "இதில் இரண்டு சொற்கள் தவறானவை கள் போல இருக்கு. இதை ஒருக்கால் பாருங்கோ தெணி..." எனச் சொல்லிக் கொண்டு பிரதியை எனது கையில் தந்தார். ஒரு சொல் லுப் பிழையாக இருப்பதனை நான் உணர்ந்து ஏற்றுக் கொண்டேன். அடுத்த சொல் பிழையானதுதானா? என்னும் சந்தேகம் எனக்கு மனதில் எழுந்தது. அந்தப் பெரிய கல்விமானுக்கு நான் அடித்துச் சொல்வதற்கும் விரும்பவில்லை. எனது தயக்கத்தை பேராசிரியரிடம் சட்டென விளங்கிக் கொண்டார். "இருங்கோ வாறன்..." சொல்லிக் கொண்டு உள்ளே சென்று அந்தப் பெரிய பாரிய லெக்ஸிகன் அகராதியைக் கையில் தூக்கிக் கொண்டு வந்திருந்து தட்டிப் பார்க்கின்றார். பின்னர் எங்களுடைய சந்தேகம் தெளிவானது. நான் வியந்து போனேன். இவ்வளவு பெரிய அறிவாற்றலுள்ள பேராசிரியர் அகராதி பார்க்காமலே எனக்குச் சொல்லி இருக்கலாம். நான் ஏற்றுக்கொண்டிருக்கக் கூடும். அந்த நாவலுக்குப் பெயர் வேறொன்றே நான் இட்டிருந்தேன். பின்னர் 'மரக் கொக்கு' என அதற்குப் பெயர் சூட்டியவர் பேராசிரியர்தான்.

பேராசிரியருடன் பேசிக் கொண்டிருக்கையில் எனக்கு மனதில் எழுந்த சந்தேகம் ஒன்றினைத் தெளிவுபடுத்தும் வண்ணம் அவரிடம் ஒரு சமயம் நான் கேட்டேன். (அந்தச் சந்தேகம் என்ன என்பது இப்பொழுது எனது நினைவில் இல்லை.) பேராசிரியர் சற்று நேரம் சிந்தித்தார். பின்னர் சர்வ சாதாரணமாகச் சொன்னார். "தெணி இது பொருளியல் சம்பந்தமான ஒரு கேள்வி. இதற்கான விளக்கம் நான் மேலெழுந்த வாரியாகச் சொல்வது பொருத்தமில்லை. பேராசிரியர் பாலகிருஷ்ணனிடம் கேட்டுக் கொண்டு வருகின்றேன். வாரவாரம் தெளிவாகச் சொல்லுகிறேன்".

நான் உண்மையில் வியந்து போனேன். பேராசிரியர் பாலகிருஷ்ண னிடம் கேட்டறிந்து வந்து சொல்லாமல், தாமே சொல்லி இருந்தாலும் நான் அதனை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும். அவ்வாறு செய்யாது என்னை மாத்திரமல்லாது, தன்னையும் ஏமாற்றாத ஓர் உண்மை மனிதனைக் கண்டு உள்ளம் பூரித்தேன். பேராசிரியர் சொன்னது போன்று அடுத்த வாரம் நான் சென்று அவரைச் சந்தித்த வேளையில் பேராசிரியர் பாலகிருஷ்ணனிடம் கேட்டறிந்து வந்து விளக்கத்துடன் கதையை ஆரம்பித்தார் என்பதனை இங்கு நான் சொல்லவும் வேண்டுமா?

# 10

# பேராசிரியர் வித்தி தீர்மானித்த சிவத்தம்பியின் திருமணம்

திருமணம் ஒருவருடைய வாழ்க்கையில் மிக முக்கியமான மைற்கல். வாழ்க்கைப் பாதையைச் செம்மையாக அமைப்பது அல்லது திசை திருப்பிவிடுவது திருமணந்தான்.

இந்தத் திருமணத்தை தீர்மானிக்கும் போதில் மிக நிதானமாகச் சிந்தித்துத் தீர்க்கமாக முடிவெடுக்க வேண்டும். இளமைப் பருவம் இனிமையானது. அந்த இனிமையான பருவத்தில் இனிய கனவுகள் பல தோன்றுவதுண்டு. திருமணமாகப் போகும் ஓர் இளைஞனின் மனதில் தனது எதிர்கால மனைவி பற்றிக் கற்பனைகள் பல இருக்கும். மனதில் இருந்து வரும் அந்த எண்ணங்களுக்குத் தகுந்த வண்ணமே தனக்கு வரப்போகும் மனைவியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

பேராசிரியர் தனது திருமணத்துக்கான தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பெற்றது என்பதனை சிரித்துக்கொண்டு ஒரு தினம் மெல்லச் சொன்னார்.பேராசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி. பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் அங்கு பலரைக் கண்டு பேசிப் பழகி இருப்பார். அவ்வாறு பழகியவர்களுள் யாரையாவது ஒருவரைத் தேர்ந்தெடுத்துத் திருமணஞ் செய்வதற்கு தீர்மானித்திருக்கலாம் அல்லது அவர்களைப் போன்ற ஒரு பெண்ணை மனதில் வரிந்து வைத்துக் கொண்டு முடிவுக்கு வந்திருக்கலாம் என்றெல் லாம் நான் நினைத்துக்கொண்டேன்.

ஆனால் பேராசிரியர் எவ்வாறு தீர்மானம் எடுத்தார் தெரியுமா? ‘‘எனக் குத் திருமணம் பேசிவந்து என்னிடம் முடிவுகேட்டார்கள். நான் வித்தி பார்த்துச் சரியென்றால் செய்கிறேன் என்றேன். அவர் தீர்மானப்படிதான் நான் திருமணஞ் செய்து கொண்டேன்’’என்றார்.



பேராசிரியர் சொன்ன தகவல் கேட்டு உண்மையில் நான் ஆச்சரியப் பட்டேன். தனது ஆசிரியர்-குரு-பேராசிரியர் சு.வித்தியானந்தன் மீது வைத்திருந்த மதிப்பு, நம்பிக்கை என்பவற்றுக் கூடாக இளமைக் காலத்தில் தனது திருமணத்தை தீர்மானித்துக் கொண்ட மனதையும் குடும்பப் பொறுப்பையும் விளங்கிக் கொண்டேன்.

இவைகள் யாவற்றுக்கும் மேலாக ஐந்து தங்கைகளுக்கு மூத்தவராக இருந்த குடும்பப் பொறுப்புள்ள ஒரு தமையன் என்னும் கடமை உணர் வுடன் அக்காலத்தில் பேராசிரியர் செயற்பட்டிருக்கின்றார் என்பதனை உணரும் போது அவர் மேலுள்ள மதிப்பு மேலும் உயர்ந்தே போனது.

ஒன்றாகச் சேர்ந்து பழகுகின்றவர்கள் இடையே எவ்வளவு நெருக்க மானவர்களாக இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் சிறிய சிறிய முரண் பாடுகள் வருவது இயல்பு. நல்ல நண்பர்கள் இடையே முரண்பாடுகள் வரலாம். ஒன்றாகச் சேர்ந்து பணிபுரியும் இடங்களில் முரண்பாடுகள் வரலாம். குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையிலும் முரண்பாடுகள் வரலாம். புரிந்துணர்வில்லாத கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், பூதாகரமாகப் பெருத்து வெடித்து சிலசமயம் அடிதடியில் போய் முடிவதும் உண்டு. சிலசமயம் குடும்பங்கள் பிரிந்துவாழ நேரும் அல்லது விவாகரத்துப் பெற்று நிரந்தரமாகப் பிரிந்து போக வேண்டி நேரும்.

ஆனால், புரிந்துணர்வுடன் ஒருவருக் கொருவர் விட்டுக் கொடுத்து இணங்கிப்போகும் இயல்பு உள்ள குடும்பங்களுக்கிடையே முரண்பா டுகள் வருவது மிக அபூர்வம். பேராசிரியர் வெளியாருடன் மிக அன்பாக, ஆதரவாக, எல்லோருக்கும் மதிப்பளித்துப் பழகுகின்ற ஒருவர். அத்தகைய பேராசிரியர் குடும்பத்தில் முரண்பாடுகள் வருவதற்கு மார்க்கமில்லை. ஆயினும் ஒரு சமயம் சின்ன முரண்பாடு ஒன்று வந்துவிட்டது. எல்லா வற்றையும் சிரித்து சமாளித்து இயல்பில் நடக்கும் பேராசிரியருக்கு, ஏனோ தெரியாது மெல்லிய கோபம் வந்துவிட்டது. அந்தக் கோபத்தில் அக்காவைப் பார்த்து இரண்டே இரண்டு வார்த்தைகள்...... இரண்டு வார்த் தைகள் மாத்திரந்தான் சொல்லிவிட்டார். சினந்து சொல்லும் பொழுது தமிழில் சொல்வதற்கும் முடியவில்லை. ஆங்கிலத்தில் கூறிவிட்டார். இவ்வாறு குடும்பங்களில் நடப்பது ஒரு புதுமை இல்லை. பேராசிரியர் குடும்பத்தில் இது நடந்து முடிந்தது. அவை அப்படி ஒரு மோசமான வார்த்தைகளில்லை. மோசமான வார்த்தைகளில் பேசக்கூடிய வரல்ல பேராசிரியர்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்த பின்னர் நான்காவது நாள் நான் பேராசிரியரைச் சந்திக்கின்றேன். இருவரும் அமர்ந்திருந்து பேசிக் கொண்டிருக்கின்றோம். அக்கா தேநீர் கொண்டு வந்து தந்துவிட்டுத் திரும்பிச் செல்கின்றார். அக்காவைக் கண்ட பிறகு பேராசிரியருக்கு அந்தச் சம்பவம் நினைவுக்கு வருகிறது. அப்பொழுது தாழ்ந்த குரலில் நடந்த சம்பவத்தை மெல்ல எடுத்துச் சொன்னார். இறுதியாக "மங்கை என்னிடம் கேட்டாள், டடி, அம்மாவை நீங்கள் ஏசினது சரியா? என்று. நான் சொன்னது அம்மாவுக்கு விளங்கவில்லை என்றேன். அம்மாவுக்கு விளங்கவில்லை என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டு, விளங்காத அம்மாவை ஏசலாமா?'' என்றாள் தெணி. நான் திகைத்துப் போனேன். நான் விளங்காததை மங்கை விளங்க வைத்தாள்'' என்றார்.

''தந்தைக்கு உபதேசம் செய்த குருநாதனாகக் மங்கையைக் கொள்ளலாம்'' என்றேன் நான். இருவரும் சேர்ந்து அப்போது சிரித்துக் கொண்டோம். அப்பொழுது ஒன்று எனக்குத் தெளிவாகப் புரிந்தது. தங்களுக்குள் நிகழ்ந்த சிறிய முரண்பாட்டினை எனக்கெடுத்துச் சொல்வது பேராசிரியரின் நோக்கமாக இருக்கவில்லை. மூத்தமகள் மங்கையின் கேள்வியினால் தான் எவ்வாறு தன்னைத் தெளிவுபடுத்திக் கொண்டார் என்னும் உண்மையை எடுத்துக்கூறுவதே அவர் நோக்கமாக இருந்தது.

நான் ஒரு சிறுகதை எழுதினேன். 'பாசத்தின் பரிணாமங்கள்' என்பது அந்தக் கதை. அந்தக் கதையின் கையெழுத்துப் பிரதியைக் கொண்டு சென்று பேராசிரியரிடம் கொடுத்தேன். பேராசிரியர் படித்துப் பார்த்து விட்டு சிரித்த வண்ணம் அச்சுக்குக் கொடுக்குமாறு கூறினார். நான் எழுதும் சிறுகதைகள் எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு சென்று பேராசிரியரிடம் கொடுக்கும் வழக்கம் என்னிடம் இருக்கவில்லை. அவ்வாறு செய்வதன் மூலம் நாங்கள் பேசிக்கொள்ளும் பொது விடயங்களுக்கு அது இடையூறாக இருக்கும். இன்னொன்று எனது எழுத்துகளைக் கொடுத்து திருத்தி எடுப்பதை உள்நோக்கமாகக் கொண்டு செயற்படுவதாக அங்கு நான் செல்வதன் நோக்கம் குந்தகப்பட்டுவிடும். பேராசிரியருடன் இலக்கியம் பற்றி எல்லாம் பேசிக் கொள்வேன். ஆனால், நான் எழுதுபவைகளை எல்லாம் அங்கு தூக்கிக் கொண்டு போவதில்லை.

'பாசத்தின் பரிமாணங்கள்' என்னும் அந்தச் சிறுகதையைக் கொண்டு சென்று பேராசிரியரின் பார்வைக்குக் கொடுத்ததில் அந்தரங்கத்தில் எனக்கொரு நோக்கம் இருந்தது.



பேராசிரியரின் இளையமகள் வர்த்தனிக்கு அப்பொழுது பத்துவயதிருக்கும். ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த மாணவி. வர்த்தனி சின்னப்பிள்ளை என்பதால் மாலை வேளையில் தனியார் கல்வி நிலையத்துக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்தார்கள். வல்வெட்டித்துறையின் மேற்கு எல்லையிலுள்ள ஊரிக்காட்டில் இருக்கும் பேராசிரியரின் இல்லத்தில் இருந்து கிழக்கே வல்வெட்டித்துறைச் சந்திக்கு அண்மையில் நடைபெற்றுக் கொண்டிருந்த தனியார் கல்வி நிலையத்துக்கு வர்த்தனி போய் வரவேண்டும்.

சில நாட்களில் அந்தத் தனியார் கல்வி நிலையத்துக்குப் போய் வருவதற்கு வர்த்தனி விரும்புவதில்லை. தான் போகவில்லை யென அடம் பிடித்துப் பிசுபண்ணிக் கொண்டு நிற்பார். அக்கா மிகவும் கண்டிப்பான பேர்வழி. எப்படி மறுத்தாலும் படிப்பதற்காக மகளைப் பிடித்து அனுப்பி வைப்பதில் வெகு கண்டிப்பாக இருப்பார். சில சமயங்களில் ''டடி'' என்று அழைத்துக் கொண்டு தந்தையார் பேராசிரியரிடம் வந்து வர்த்தனி ஒட்டிக் கொள்வார். பேராசிரியர் எப்பொழுதும் மகள் வர்த்தனியின் பக்கந்தான். அக்காவுக்கு அது பிடிப்பதில்லை. பிள்ளையின் படிப்புக் குழப்புகின்றது என்ற கவலை. இந்தக் கயிறிழுப்பு அடிக்கடி அங்கு நிகழும்.

ஒரு தினம் மாலை நேரம் பேராசிரியருடன் பேசிக்கொண்டு நான் அங்கிருக்கின்றேன். வர்த்தனி ஓடிவந்து பேராசிரியருடன் ஒட்டிக் கொள்ளுகிறார். வர்த்தனியைத் தொடர்ந்து அக்கா வேகமாக அங்கே வருகின்றார். ''பாருங்கோ... தெணியான் வர்த்தனி குழப்பிக் கொண்டிருக்கிறா. அடிக்கடி இப்படித்தான்'' என்கிறார் சற்றுச் சூடாக, ''டடி.. இண்டைக்கு நான் போகயில்லை...நாளைக்குப் போகிறேன்'' இது வர்த்தனியின் வேண்டுகோள். ''நாளைக்கும் இப்பிடித்தான் சொல்லுவாய்... கதையைவிட்டுவிட்டு வெளிக்கிட்டுப் போ'' அக்கா திரும்பவும் வற்புறுத்துகின்றார். அதுவரை மௌனமாக இருந்த பேராசிரியர் ''சரி.. சரி... பிள்ளை இண்டைக்கு நிற்கட்டும். நாளைக்குப் போகும்'' என்கிறார். ''நீங்கள் பிள்ளைக்குச் செல்லங் கொடுத்து படிப்பைக் குழப்பிறியள்'' எனக் குற்றஞ்சாட்டிக் கொண்டு அக்கா திரும்பிப் போகின்றார்.

அக்கா போனபின்னர் பேராசிரியர் சொல்கின்றார். ''பிள்ளை போகும் பாதையிலே எத்தனை பேர் துவக்கோடை நிற்கிறாங்கள். வீதி ஓரத்தில் என்னென்ன புதைச்சு வைத்திருக்கின்றான்களோ.. ஒரு துவக்கு வெடித்தால்... ஒரு லான்ட்மயின்ட் வெடித்தால்... பிள்ளையின் உள்ளுணர்வு என்னவோ எங்களுக்குத் தெரியாது. போவதற்கு எதற்காக மறுக்கிறது

என்பதைத் திட்டவட்டமாக உணரமுடியாது. அதனாலே பிள்ளை விரும்பவில்லை என்றால் வற்புறுத்தக்கூடாது'' என.

நடந்தவைகள் யாவையும் அவதானித்துக் கொண்டிருந்த எனக்கு இரண்டு விடயங்கள் தெளிவாயின. மகள் மீதுள்ள பாசத்தின் காரணமாக மகள் ஒழுங்காகக் கல்வி கற்று உயர்ந்த நிலைக்கு வரவேண்டுமென அக்கா விரும்புகின்றார்.

மகள் மீதுள்ள பாசத்தின் காரணமாக உயிராபத்துள்ள சூழ்நிலையில் விரும்பாத பிள்ளையை வற்புறுத்தி அனுப்பி வைக்கக்கூடாது எனப் பேராசிரியர் எண்ணுகின்றார். தங்கள் பிள்ளையிடத்தில் இருக்கும் பாசம் காரணமாக இருவரும் வெவ்வேறு கோணங்களில் சிந்திப்பதை உணர்ந்தேன். அதனையே ஒரு சிறுகதையாக எழுதினேன்.

நான் அடிக்கடி சென்று பழகிவரும் ஒரு குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தைச் சிறுகதையாக எழுதி அவர்கள் அறியாத வண்ணம் பிரசுரத்துக்குக் கொடுப்பது பண்பானதுமல்ல, ஒரு நாகரிகமான செயலுமல்ல. அதனால்தான் பேராசிரியரின் பார்வைக்கு அச்சிறுகதையைக் கொடுத்து பின்னர் 'மல்லிகை'க்கு அனுப்பி வைத்தேன்.

## 11

## துணைவேந்தருடன் விருந்து

'மல்லிகை' மாசிகையின் வரலாற்றில் இதுவரை இரண்டே இரண்டு இலக்கியச் சர்ச்சைகள் இடம்பெற்றிருக்கின்றன. அந்தச் சர்ச்சைகளை ஆரம்பித்து வைத்து இறுதியில் அவைகளை நிறைவு செய்து வைத்தவன் நான்.

அந்தச் சர்ச்சைகளில் ஒன்று ஈழத்து இலக்கிய விமர்சனம் பற்றியதாக இருந்தது. குறிப்பிட்ட சர்ச்சையைத் தொடங்குவதற்கு முன்னர், எனக்குள் ஒரு தயக்கம் சிறிது காலம் இருந்து வந்தது. ஈழத்து இலக்கிய விமர்சனம் பற்றி நான் அவதானித்த குறைபாடுகளை எழுதுவதனால், அந்த விமர்சனங்களைச் செய்து கொண்டிருந்த விமர்சகர்கள் மேல் குற்றஞ் சுமத்துவதாக அது அமையுமல்லவா! அந்த விமர்சகர்களுள் ஒருவர் பேராசிரியர் சிவத்தம்பி. அவருடன் மிக நெருக்கமான நட்புடன் பழகிக் கொண்டு, நேரடியாக இல்லாவிடத்தும் மறைமுகமாகவேனும் எவ்வாறு குற்றம் சுமத்தலாம்? சிலகாலம் வெளியில் சொல்லிக் கொள்ளாது மனதில் இது பற்றிச் சிந்தித்துக் கொண்டு திரிந்தேன். காலம் கழிந்து கொண்டிருந்தது. மனதில் ஒரே குழப்பம். ஒரு முடிவுக்கு வருவதற்கு முடியவில்லை. இறுதியாகப் பேராசிரியரிடமே இது பற்றிப் பேசுவோம் எனத் தீர்மானித்தேன்.

பேராசிரியருடன் உரையாடிக் கொண்டிருக்கும் சமயம் இதுபற்றி ஒருநாள் சொன்னேன். நான் எழுதுவதற்கு எண்ணியுள்ள விடயங்கள் பற்றி விபரமாக எடுத்துக் கூறவில்லை. ஆனால், நான் எழுதுவதற்கு எண்ணும் சர்ச்சை இது பற்றியது தான் என மாத்திரம் குறிப்பிட்டுச் சொன்னேன். அப்பொழுது எந்த விதமான தயக்கமும் காட்டாது எனது விருப்பம் போல் எழுதுமாறு கூறினார். எனக்கு மனம் திருப்தியுறாத நிலையில் ''உங்களுடைய எழுத்தையும் குறை கூறுவதாக இருக்குமல்லவா'' எனத் திரும்ப வினவினேன். பேராசிரியர் வழமையான

சிரிப்புடன், "அது பரவாயில்லை உங்களுடைய கருத்தை நீங்கள் சுதந்திரமாக எழுதுங்கோ" என்றார். எனக்கு மனதில் நம்பிக்கை பிறந்தது. ஆனால் எழுதவிருக்கும் விடயங்கள் பற்றி அவரோடு மேற்கொண்டு நான் பேச விரும்பவில்லை. அப்படிப் பேசுவதனால் அவருடைய கருத்துகளின் பாதிப்பு எனக்கேற்படலாம். அதனால் எனது கருத்துகள் திசை திரும்பிப் போகக் கூடும். அத்தோடு பேராசிரியர் பின்புலமாக இருக்கின்றார் என யாராவது இனங்கண்டு கொண்டு குற்றஞ்சாட்டவும் கூடும். இவைகள் யாவற்றையும் நான் கருத்தில் கொண்டு சுதந்திரமாக எனது சர்ச்சையை ஆரம்பித்தேன்.

எனது ஆரம்பக் கட்டுரையைத் தொடர்ந்து மாதாமாதம் எனது கருத்துகளை ஆதரித்தும் நிராகரித்தும் பலர் கட்டுரைகள் எழுதினார்கள். ஓராண்டு காலத்துக்கு மேலாக அந்தச் சர்ச்சை தொடர்ந்து கொண்டிருந்தது. பேராசிரியர் அக்காலத்தில் மல்லிகை வாசகர். அந்தக் கட்டுரைகளை எல்லாம் தொடர்ந்து படித்துக் கொண்டு வந்தார். ஆனால், அந்தச் சர்ச்சைகள் பற்றி நாங்கள் இருவரும் பேசிக்கொள்ளாது ஒரு நாகரிகத்தைக் கடைப்பிடித்து வந்தோம்.

அந்தச் சர்ச்சையில் எழுத்தாளர்கள், பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள், வாசகர்கள் என பலதுறைகளில் இருந்தும் ஈடுபாடு காட்டி எழுதி வந்தார்கள். இறுதியில் அந்த விவாதம் நிறைவு செய்து வைக்க வேண்டிய ஒரு நிலை வந்தது. விவாதத்தைத் தொடக்கி வைத்த எனக்கே, அதனை முடித்து வைக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. நிறைவுக் கட்டுரையைத் தொகுப்பாக மூன்று இதழ்களில் எழுதினேன். நான் முன்வைத்த கருத்துகளை நிராகரித்தவர்களுக்குத் தக்க பதில் இறுத்துக் கொண்டு வந்தேன்.

அந்தச் சமயத்தில் ஒரு நாள் பேராசிரியர் ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு, "வித்தி சொன்னார், தேவை இல்லாமல் தெணியானுக்குப் பதில் சொல்லப் போய், தெணியானிடம் வாங்கிக் கட்டி இருக்கிறார் என்று" எனச் சொல்லிச் சிரித்தார். அப்பொழுது துணைவேந்தராக இருந்த பேராசிரியர் சு.வித்தியானந்தனையும் அந்த இலக்கியச் சர்ச்சை தொட்டிருக்கின்றது என்பதனை நான் அறிந்து கொண்டேன். அத்தோடு "உங்களுடைய கருத்துகளில் சில நியாயங்கள் இல்லாமல் இல்லை" எனப் பெருந்தன்மையுடன் பேராசிரியர் எனக்குச் சொன்னார்.

தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் வி.எஸ்.சுப்பிரமணியம் அவர்கள் நினைவுப் பேருரை ஒன்றினை ஆற்றுவதற்காக யாழ்ப்பாணப்



பல்கலைக்கழகம் வந்திருந்தார். அவரைத் தனது இல்லத்துக்கு அழைத்து விருந்தொன்றினை வழங்குவதற்குப் பேராசிரியர் விரும்பினார். யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்த துணைவேந்தருக்கு மதிய உணவுக்கோ அல்லது இரவு நேர உணவுக்கோ வல்வெட்டித்துறையில் இருக்கும் பேராசிரியர் இல்லத்துக்கு வந்து போவதற்கு நேர ஒழுங்குகள் வாய்ப்பாக அமையவில்லை. அதனால் ஒரு தினம் காலை நேர உணவுக்கு அழைத்தார் பேராசிரியர்.

முதல் நாள் நான் பேராசிரியருடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுது "துணைவேந்தர் நாளை காலையிலே இங்கே வாறார். எட்டு மணிக்கு முதல் நீங்களும் ஒருக்கால் வாருங்கோ" என்று கூறினார்.

பேராசிரியர் கூறியது போல மறுநாள் காலைநேரம் நான் அங்கு போய்ச் சேர்ந்தேன். அப்பொழுது யாழ்பாணப் பல்கலைக்கழகத்து இன்னொரு பேராசிரியரும் அங்கே இருந்தார். சற்று நேரத்தில் துணைவேந்தர் காரில் வந்து சேர்ந்தார். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு பேராசிரியர் சிவத்தம்பி உட்பட நால்வரும் உணவு மேசைக்குச் சென்றோம். அக்கா உணவு பரிமாறினார்.

உணவு உண்டு முடிந்த பின்னர் எல்லோரும் அமர்ந்திருந்து பேசினோம். துணைவேந்தர் என்னை அழைத்து தனக்கருகே வைத்துக் கொண்டு நீண்ட நேரம் உரையாடினார். ஆயுதக் குழுக்கள் செயற்படத் தொடங்கிவிட்ட காலம் அது. அதனால் இலங்கையின் அரசியல் நிலைமைகள் பற்றியும், தமிழ் மக்களின் போராட்டம் பற்றியும், ஈழத்து இலக்கியம் பற்றியுமெல்லாம் என்னோடு உரையாடினார். ஓர் எழுத்தாளனிடமே இவைகள் பற்றிக் கேட்டறிய விரும்புவதாகவும் கூறினார். புறப்பட்டுச் செல்லும் போது தமிழ்நாட்டுக்கு வந்தால் தவறாது தன்னை வந்து சந்திக்குமாறு கூறிச்சென்றார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அளித்த விருந்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து இன்னொரு விரிவுரையாளரை அல்லது ஒரு பேராசிரியரை அழைத்திருக்கலாம். அவ்வாறு செய்யாது என்மீது கொண்டிருந்த அன்பும் நட்பும் காரணமாகவே பேராசிரியர் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார்.

அந்த விருந்தில் பரிமாறப் பெற்ற உணவு, காலை நேர உணவாக இருந்தபோதிலும் சுவையாகவே இருந்தது. அந்தப் பகுதி மக்கள் சுவையாக உணவு வகைகளைத் தயாரிப்பதில் வல்லவர்கள். அந்தச் சிறப்பு அன்றைய உணவில், அக்காவின் கைவண்ணத்தில் சுவைத்தது.

பேராசிரியர் உணவுகளைச் சுவைத்து உண்ணுகின்றவர் என்பது எனக்குத் தெரியும். தன்னால் சுவைபட உணவுகளைச் சமைக்க முடியும் என்றும் ஒரு நாள் கூறினார். உணவு வகைகளைச் சுவைபடச் சேர்த்து உண்பது பற்றியும் சொன்னார். மீன் கறியுடன் தயிரைச் சேர்ந்து உண்டால் வெகு சுவையாக இருக்குமென்றார். தயிர் என்றால் சைவ உணவு. சைவ உணவுடன் சேர்த்து நோக்கும் ஒருவித ஆசாரப் பார்வையே அதுவரை என்னிடத்தில் இருந்து வந்தது. அதை உடைத்தவர் பேராசிரியர். ஒருநாள் தான் சமையல் செய்து, நாங்கள் எல்லோரும் சேர்ந்து அந்த உணவை உண்ண வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் சமையல் செய்வதற்குப் பேராசிரியருக்கு எங்கே நேரமிருந்தது!

## 12

# பதுங்குகுழியில் பேராசிரியருடன் நடத்திய உரையாடல்

போர்க்காலச்சூழல் உருவாகி, நாட்டு நிலைமை சீர்குலைந்து போனது. எங்கள் பகுதிக்குள் கடலில் இருந்து வீசப்பட்ட முதற் ஷெல், எனது வீட்டுக்கு அப்பால் சற்றுத் தூரத்தில் சொற்ப நாட்களுக்கு முன்னர் திருமணமாகி இருந்த ஓர் இளம் பெண் மேல் வந்து விழுந்து அவள் காலமானாள். அதன் பின்னர் அடிக்கடி கடலில் இருந்து ஷெல்கள் நாட்டுக்குள் ஏவப்பட்டன. ஆகாயத்தில் திடீரெனப் பறந்து வந்து குண்டுகள் பொழிந்தன. மக்கள் வெளியில் நடமாடுவதற்கும், நான்கு பேர் ஓர் இடத்தில் கூடுவதற்கும் அஞ்சினார்கள். வீட்டில் இருந்து புறப்பட்டுச் செல்லும் ஒருவர் திரும்பி வீடு வந்து சேருவாரோ என்பதற்கு உத்தரவாதமில்லாத நிலை. ஒவ்வொருவரும் தத்தமது வீட்டிற்தானும் அச்சமில்லாது அமைதியாக வாழ்வதற்கு இயலாத நிலை. இரவு நேரங்களிலும் நிம்மதியாகத் தங்கள் வீடுகளில் படுத்து உறங்குவதற்கு முடியவில்லை. உறங்கும் போது எந்தச் சமயம் குண்டு வந்து தங்கள் மேல் விழும் என்று பயந்து பயந்து விழித்துக் கிடந்தார்கள்.

இந்தப் பாதிப்பு உள்ளூருக்குள் வாழ்ந்த மக்களிலும் பார்க்க கடற்கரைப் பிரதேசங்களை அண்டி வாழ்ந்த மக்களுக்கே அதிகம். ஆனால், எல்லோரும் அக்காலத்தில் தங்கள் தங்கள் இல்லங்களில் பதுங்குகுழிகள் அமைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். வீடுகளில் இருக்கும் வேளைகளில் ஷெல் சீறிக் கொண்டு வந்தால், பொம்மர் திடீரெனச் சுழன்று கொண்டு வந்தால், ஓடோடிச் சென்று பதுங்கு குழிகளுக்குள் பதுங்கிக் கொள்வார்கள். பயங்கரமான இத்தகைய நிலைமைக்குள்ளும் மக்கள் வாழ வேண்டித்தான் இருந்தது. தமது அன்றாடக் கடமைகளைச் செய்ய

வேண்டியவர்களாகவே இருந்தார்கள். நான் பேராசிரியர் இல்லத்துக்கு வழமைபோல போய் வந்து கொண்டு இருந்தேன்.

ஒரு தினம் மாலை வேளை, பேராசிரியர் வீட்டில் அக்காவும் பிள்ளைகளும் வெளியில் எங்கோ சென்று விட்டார்கள். பேராசிரியரும் நானும் பேராசிரியர் வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் இடையேயுள்ள முற்றத்தில் கதிரைகளைப் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்து பேசுகின்றோம். திடீரெனக் கடலில் இருந்து வீசிய ஷெல் ஒன்று, எங்கள் தலைக்கு மேலே கூவிக் கொண்டு போகின்றது. இருவரும் துடித்துக் கொண்டு எழுந்து பதுங்குகுழி நோக்கி ஓடுகின்றோம். வீட்டுக்குப் பின்புறமாக சுவரோடு ஒட்டி பதுங்கு குழி அமைத்து வைத்திருந்தார்கள். பேராசிரியரை முதலில் குழிக்குள் இறங்க விட்டு பின்னால் நான் இறங்குகின்றேன். ஷெல் இடைவெளிவிட்டு, விட்டு கிராமத்துக்குள் சென்று விழுந்து கொண்டிருக்கின்றது. அந்தச் ஷெல்கள் வீசப்படும் ஒழுங்கினை அவதானித்தபொழுது, ஷெல் வீச்சு நின்று போய் விட்டது என்று நம்பிக் கொண்டு பதுங்குகுழியை விட்டு வெளியே வரத்தகுந்த நிலைமை இருக்கவில்லை.

அந்தப் பதுங்கு குழிக்குள் இருவரும் நுழைந்து அமர்ந்து கொண்ட பின்னர் பேராசிரியர் என்றும் போல உரையாட ஆரம்பித்து விட்டார். ஷெல் வீச்சுப் பாதுகாப்புக்காகப் பதுங்கு குழிக்குள் இருக்கின்றோம் என்பதனை மறந்து இருவரும் உரையாடிக் கொண்டிருந்தோம். ஷெல் வீச்சு முற்றாக நின்று போய்விட்ட நிலையில் பதுங்கு குழிவிட்டு வெளியே வருவோம் என்றால் பேராசிரியர் அதற்கு உடன்படவில்லை, “பொறுங்கோ தெணி இன்னும் கொஞ்ச நேரம் பார்ப்போம்” எனச் சொல்லித் தடுத்துக் கொண்டே இருந்தார். நீண்ட நேரத்தின் பின்னர் இருவரும் பதுங்கு குழியை விட்டு வெளியேவந்தோம். நான் வீட்டுக்குப் புறப்படத் தயாரானேன். “இல்லை தெணி, நீங்கள் றோட்டிலே போய்க் கொண்டிருக்கிற போது ஷெல் அடித்தால்..” எனச் சொல்லித் தடுத்தார். மீண்டும் கதிரைகளில் அமர்ந்து கொண்டோம். மேலும் பேசிக் கொண்டிருந்தோம். “இனிப் போவோம்...” எனப் புறப்பட்டேன். பேராசிரியர் என்னோடு பேசிப் பேசி ‘கேற்’ வரை வந்தார். நான் சயிக்கிள் வண்டியை எடுத்து உருட்டிக் கொண்டு ‘கேற்’க்கு வெளியே வருகின்றேன். பேராசிரியரும் வெளியே வருகின்றார். நான் சயிக்கிள் வண்டியில் ஏறி அமர்ந்து ஓட்டுவதற்கு முன்னர் பேராசிரியர் சொல்லுகின்றார், “தெணி நடுறோட்டாலே போக வேணும். கரைக்கு இறங்கக்கூடாது...” நான் பேராசிரியர் முகத்தைத்



திரும்பிப் பார்க்கிறேன். அவர் உதட்டில் மெல்லிய புன்னகையுடன் நின்று கொண்டிருக்கின்றார்.

“வாறன் ஸேர்...” சொல்லிக் கொண்டு சயிக்கிளை மிதிக்கின்றேன். வீதி ஓரங்களில் யார்யாரோ நிலக்கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்திருந்த காலமது. அந்தக் கண்ணிவெடிகளில் அகப்பட்டு உடல் சிதறி இறந்து போனவர்களும், கால்கள் சிதறித் துண்டிக்கப்பட்டவர்களும் என, பயங்கர சம்பவங்கள் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருந்த காலம்.

தங்கள் வீட்டு வாசலுக்கு வெளியே மக்கள் ஓர் அடி எடுத்து வைப்பதற்குப் பயந்து கொண்டிருந்த காலம். அதனால் தான் நடுறோட்டில் போகும் வண்ணம் பேராசிரியர் எனக்கு வலியுறுத்தினார் என்பதனை உணர்ந்து கொண்டு போய்க் கொண்டிருந்தேன்.

சிறிது தூரம் சென்ற பின்னர் நான் திரும்பிப்பார்த்தேன். பேராசிரியர் வீட்டுக் ‘கேற்’றில் நின்று கொண்டு என்னையே பார்த்தவாறு கவனிக்கிறார். மேலும் சிறிது தூரம் நான் வருகின்றேன். எதிரில் ஒரு வளைவு. அந்த வளைவில் திரும்பினால் பேராசிரியர் கண்களுக்குத் தெரியாது மறைந்து விடுவேன். திரும்புவதற்கு முன்னர் பின்புறம் திரும்பிப் பார்க்கின்றேன். பேராசிரியர் அதே இடத்தில் என்னை நோக்கிய வண்ணம் நின்று கொண்டிருக்கின்றார்.

பெற்ற தாய் சிறு குழந்தையை வெளியே அனுப்பி வைத்து விட்டு வீதியிலே பார்த்து நிற்பது போல.....பேராசிரியர்..... பேராசிரியரின் அந்த மென்மையான அன்புள்ளம். மகள் வர்த்தனி தனியார் கல்வி நிலையத்துக்குச் செல்ல மறுத்து நின்ற சமயம் மகளை வற்புறுத்தி அனுப்பி வைப்பதற்கு மறுத்த அந்த உள்ளத்தை மேலும் பூரணமான தெளிவுடன் புரிந்து கொண்டேன்.

13

# அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மூலமாக செய்த சேவைகள்

மக்கள் நாட்டுக்குள் சிறைப்பட்டுக் கிடந்த காலம். இராணுவம் ஒரு புறம் போராளிகள் மறுபுறம். எந்த நேரத்தில் எதுவும் நடக்கலாம் என அணு அணுவாக எல்லோரும் செத்துக் கொண்டிருந்தார்கள். சிவில் நிருவாகம் குலைந்து பொதுக் கட்டமைப்புகள் சிதைந்து போயின.

இந்தச் சமயத்தில் பேராசிரியர் சமூகத்தில் இருந்து ஒதுங்கித் தானும் தன் பாடுமாக இருந்துவிடவில்லை. அல்லது வட பிரதேசத்தைவிட்டு, குடும்பத்துடன் இடம்பெயர்ந்து தன்னையும் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ள எண்ணவில்லை. அல்லது பல்கலைக்கழகப் பேராசிரியராகத் தன்னை முடக்கிக் கொண்டு மௌனமாக வாழ்ந்து விடவில்லை. மக்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகித் துன்பப்படும் வேளையில் சமூகப் பொறுப்புள்ள ஒரு சமூக மனிதனாக வாழ்ந்தார். பிரஜைகள் குழுவின் தலைவராக இருந்து மக்கள் நலனுக்காகப் பாடுபட்டார். பயங்கரமான சந்தர்ப்பங்களில், சூழ்நிலைகளில் இராணுவத் தளபதி அழைத்த போதும் மக்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லிப் பரிகாரம் காண வேண்டிய சமயங்களில் எல்லாம் துணிந்து இராணுவ முகாம்களுக்குச் சென்று வந்தார்.

மறுபுறத்தில் அல்லற்படும் ஏழை எளிய மக்களுக்கு உதவிகள் செய்யும் பொருட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் (TRRO) தலைவராக இருந்து செயற்பட்டார். இவ்வாறு ஓய்வொழிச்சல் இல்லாது பேராசிரியர் செயற்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் ஒரு சம்பவம்.

ஒரு நாள் இருள் சூழ்ந்து வரும் மாலை வேளையில் பருத்தித்துறை வீதியில் வல்வெட்டித்துறைக்குக் கிழக்கே பொலிகண்டியை அடுத்து வரும் திக்கம் சந்திக்கு அண்மையில் இராணுவத்தின்றக் வண்டி ஒன்று கண்ணிவெடியில் சிக்கிச் சிதறிப் போனது. அந்த வண்டியில் இருந்த இராணுவ வீரர்கள் அனைவரும் உடல் சிதறி இறந்து போனார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெற்றதனை அறிந்தவுடன் அப்பகுதி மக்கள் யாரும் மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக எல்லோரும் மிக அச்சம் அடைந்தார்கள். இந்தச் சம்பவம் காரணமாக என்ன நடக்குமோ! எனக் கலங்கிப் போய் இருந்தார்கள். அனுபவப்பட்ட மக்கள் எதிர்பார்த்தது போல, மறுநாள் அதிகாலையிலேயே வடமராச்சிப் பகுதி முழுவதும் இராணுவத்தினால் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இருளோடு இருளாக இராணுவம் மக்கள் வாழும் பகுதிகளைச் சுற்றிவளைத்து, பின்னர் கிராமங்களுக்குள் நுழைந்து வந்தது. எவரும் வீடுகளைவிட்டு வெளியே செல்லா தவாறு முடக்கி வைக்கப்பட்டார்கள்.

இராணுவம் வீடு வீடாகச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில் இறங்கியது. சில பகுதிகளில் வீடுகளுக்குள் நுழையாது வீதிகளால் மாத்திரம் வரிசையாகப் போய்ச் சேர்ந்தது. சில கிராமங்களில் சில பொது மக்களை இராணுவம் தன்னோடு அழைத்துச் சென்றிருப்பதான செய்தி அப்பொழுது விரைவாக எங்கும் பரவியது.

நடுப்பகல் தாண்டிய வேளை தேடுதல் நடவடிக்கைகள் முடிந்து இராணுவம் முகாம் நோக்கிப் போகத் தொடங்கிவிட்ட சமயம்.. உலகத்தையே உலுக்கிப் போடும் பயங்கரமான குண்டுச் சத்தம் ஒன்று எழுகின்றது. ஒரு நிமிட இடைவெளியில் இன்னொரு குண்டு வெடித்துச் சிதறுகின்றது.

மக்கள் மத்தியில் எங்கும் பதற்றம்... என்ன நடந்தது? என்ன நடந்தது... எல்லோரும் பதறித் துடிதுடித்து அந்தரித்தார்கள். சிறிது நேரத்தின் பின்னர் தகவல்கள் வேகமாகப் பரவத் தொடங்கின. இராணுவம் அழைத்துக் கொண்டு சென்றவர்கள் ஐம்பது பேர்வரை, வல்வெட்டித் துறையும் பொலிகண்டியும் இணையும் மேற்கு எல்லைக் கோடாகவுள்ள ஊரணி கடற்கரை ஓரத்தில் இருக்கும் சனசமூக நிலையம் ஒன்றினுள்ளே அனைவரையும் அடைத்து வைத்துக் கொண்டு குண்டு போட்டுக் கொலை செய்துவிட்டது.மிலேச்சத்தனமான இந்தச் செயலினால் இந்தப்பகுதி உறைந்து போனது.எங்கும் இருள் மண்டிப்போன கனத்த சோகம் நிறைந்து கிடந்தது. மக்கள் துயரவெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தார்கள்.

அடுத்தடுத்த தினங்களில் இன்னொரு தகவல் எங்கும் வேகமாகப் பரவ ஆரம்பித்தது. அந்தக் குண்டினால் இறந்தவர்கள் அனைவரும் சமரபாகு, இலந்தைக்காடு ஆகிய இரண்டு கிராமங்களிலும் வாழ்ந்த அப்பாவிப் பொது மக்கள். அத்தோடு இவர்கள் எல்லோரும் ஒடுக்கப்பட்ட சாதியில் பிறந்தவர்கள்.

இந்த உண்மையை அறிந்த போது மனித சங்காரத்தினால் விளைந்த துயரத்துடன் மனதுக்கு இன்னொரு வகையான அதிர்ச்சியாகவும் இருந்தது. உள்ளம் கொதித்தது. சிங்கள இராணுவம் இந்த ஏழை எளிய மக்களை சாதி அடிப்படையில் எவ்வாறு இனங்கண்டு பிடித்துக் கொண்டு சென்று அழித்தொழித்தது?அவர்களுக்கு இவர்களை எப்படித் தெரியும்? அப்பொழுது தான் நான் ஒன்றைத் தெளிவாக விளங்கிக் கொண்டேன். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போகின்றோம் என்று சொல்லிக் கொண்டு எத்தனை குழுக்கள் ஆயுதங்களைக் கையில் தூக்கிக் கொண்டு வீரபுருஷர்களாக இந்த மண்ணில் பவனி வந்தார்கள்! காலப் போக்கில் இவர்களுள் பலர் ஆயுதத்தைக் கீழே போட்டுவிட்டு, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஒதுங்கிப் போனார்கள். சிலர் எழுச்சி பெற்ற ஆயுதக் குழுவுடன் இணைந்து கொண்டார்கள். வேறு சிலர் உயிரைப் பாதுகாக்க வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடினார்கள். இன்னும் சிலர் அரச இராணுவத்துடன் இணைந்து வக்கிரப் புத்தியுடன் செயற்பட்டார்கள். இவர்களில் பலர் இந்தச் சமூகத்தில் தங்களைச் சண்டியர்களாகத் தக்க வைத்துக் கொள்வதற்குக் கையில் ஆயுதங்களைத் தூக்கியவர்கள் தான். இந்தக் கொடியவர்கள் எத்தனை பேர் இந்த மண்ணின் புராதன புத்திரர்களாக, சாதிய வெறியர்களாக இருந்தார்கள்! இலங்கை இராணுவத்துடன் இணைந்து மக்கள் மத்தியில் வரும் சமயங்களில் முகங்களை மூடிக் கட்டிக் கொண்டு வந்தார்கள். தலையாட்டிகளாக இருந்து காட்டிக் கொடுத்தார்கள். இவர்களால் தான் இந்த மக்கள் சாதிய அடிப்படையில் இனங்கண்டு பிரித்தெடுக்கப் பெற்று பிடித்துச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

நான் பேராசிரியர் இல்லத்துக்கு வீதியால் செல்லும் பொழுது குறித்த சம்பவம் நடைபெற்ற இடத்தினைத் தாண்டியே தினமும் போய்வந்து கொண்டிருந்தேன். சிதைந்து கிடக்கும் சனசமூக நிலையக் கட்டிடத்தைக் காணும் பொழுதெல்லாம் உள்ளே அழுது கண்ணீர் வடித்துக் கொண்டே போய்வந்தேன்.

இந்தச் சம்பவம் நடந்து முடிந்த பிறகு பேராசிரியர் ஒரு நாள் என்னிடம் கூறினார். 'பாதிக்கப்பட்ட சனங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேணும். எல்லோருக்கும் உதவி செய்வதற்கு TRRO இல் நிதியில்லை. சிறிய தொகை தான்... ஒரு ஐயாயிரம் ரூபாவை ஒதுக்கலாம். அதுவும் ஐந்து பேருக்குக் கொடுத்தால் ஆயிரம் ஆயிரம் ரூபா. எந்தப் பிரயோசனமும் இருக்காது. மிகவும் ''பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்துக்கு ஐயாயிரத்தையும் மொத்தமாகக் கொடுத்து, ஒரு கடையைப் போட்டு வியாபாரம் செய்து சீவிக்க வழி செய்யலாம். குடும்பத்தைத் தெரிவு செய்து கொண்டு வாருங்கோ'' என.



பாதிக்கப்பட்ட கிராமங்களுள் ஒன்று சமரபாகு. அந்தக் கிராமத்து ஆசிரியர் ஒருவர் கல்லூரியில் என்னோடு கடமை ஆற்றிக் கொண்டிருந்தார். அவரிடத்தில் விபரங்களை எடுத்துச் சொன்னேன். மறுதினம் அவர் வந்து, ஒரு குடும்பத்தைப் பற்றி எடுத்துக் கூறினார். மிகவும் வசதி குறைந்த ஒரு குடும்பம். இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களுள் அந்தக் குடும்பத் தலைவனும் ஒருவன். ஆணும் பெண்ணுமாகப் பல குழந்தைகள். தந்தையின் உழைப்பில் வாழ்ந்தவர்கள். எல்லோருமே தலைப்படாத சின்னஞ்சிறுசுகள். ஆசிரியர் கூறிய விபரங்களைக் கேட்டறிந்து பின்னர், அடுத்த தினம் அந்த ஆசிரியரையும் அழைத்துக் கொண்டு குறிப்பிட்ட அந்தக் குடும்பம் வாழ்ந்த வீட்டுக்குச் சென்றேன். கணவனை இழந்து துயருற்றிருந்த அந்த விதவைத் தாயையும் குழந்தைகளையும் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அடுத்து வந்த சனிக்கிழமை காலையில் அந்த ஆசிரியருடன் பேராசிரியர் இல்லத்துக்கு வருமாறு அந்த விதவைத் தாயிடம் கூறிவிட்டுச் சென்றேன்.

நான் சொல்லிச் சென்றது போல, அன்றைய தினம் இருவரும் பேராசிரியர் வீட்டுக்கு வந்தார்கள். பேராசிரியர் அந்த விதவைத் தாயிடம் விபரங்களைக் கேட்டு குறித்துக் கொண்டு, யாழ்ப்பாணம் TRRO காரியாலயத்துக்கு வருமாறு கூறி அனுப்பினார்.பேராசிரியர் ஒதுக்கிக் கொடுத்த பணத்தில் அந்தத் தாய் சிறிய ஒரு கடையை வீட்டோடு இணைத்து நிறுவி வியாபாரம் நடத்த ஆரம்பித்தார். இன்று அந்தக் கடை சிறிய கடை அல்ல. அந்தப் பகுதியிலுள்ள, ஒரு பெரிய கடை.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட இன்னொரு சம்பவம். போர்க்காலச் சூழ்நிலை உருவானதன் பின்னர் தொழில் துறை சார்ந்த பாதிப்புக்குப் பெருமளவு ஆளானவர்கள் கடற்தொழிலாளர்கள். சாதாரண கடற்தொழிலாளர் குடும்பங்கள் அன்றாட வாழ்வினை ஓட்டுவதற்கான போராட்டங்களுடன் தினமும் அல்லாடிக் கொண்டிருந்தார்கள். இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த கணவனை இழந்து விதவைகளாக இருக்கும் இளம் பெண்கள் கோழிப் பண்ணைகளை அமைத்து தங்கள் வாழ்வாதரத்துக்கான வருமானத்தைத் தேடிக் கொள்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் திட்டத்தினை உருவாக்கியது.

இத்திட்டத்தின் கீழ் விதவைகளாக இருக்கும் பெண்கள் அனைவருக்கும் தேவையான நிதி உதவி செய்யத் தகுந்த நிறுவனமாக அது இருந்து வரவில்லை. விதவைப் பெண்களிடம் விண்ணப்பங்களைக் கோரிப் பெற்று அவற்றை ஆராய்ந்து அந்தப் பெண்கள் வாழும் பகுதிகளுக்கு நேரிற் சென்று உண்மை நிலைமையைக் கண்டறிந்த பிற்பாடே தகுதியானவர்களுக்குக் கோழிப் பண்ணை வைத்து நடத்துவதற்கு நிதி வழங்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தது.

இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென கள உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். குறிப்பிட்ட பதவியை வகித்தவர் ஓர் எழுத்தாளரும் கூட. அவர் மிக நேர்மையாகத் தனது கடமைகளை விழிப்புடன் செய்து வந்தார். போரினால் கணவனை இழந்து வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள விதவைக் குடும்பங்களை நேரிற் சென்று சந்தித்து அவர்களுள் யார் யாருக்கு உதவி வழங்க வேண்டுமெனக் கண்டு, பின்னர் தீர்மானித்தும் வந்தார்.

அப்படி அவர் உதவி செய்வதற்கு ஒரு கிராமத்தில் தீர்மானித்த இளம் விதவைகளுள் இரண்டொருவர் குழந்தைகள் ஒருவரும் இல்லாத தனி ஆட்களாக இருந்தார்கள். அவர்களுக்கு வாழ்வாதாரம் வேறெதுவும் இல்லாத காரணத்தினால் அந்த நிதி உதவித் திட்டத்துக்குள் அவர்களும் உள்வாங்கப்பட்டார்கள்.

இந்தப் பெண்கள் அனைவருக்கும் நிதி உதவி வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிந்து விட்டன. இனி என்ன! கோழிப் பண்ணை ஒன்று வைப்பதற்கான அந்த நிதியை விதவைகளுக்கு வழங்க வேண்டியது தான்.இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்திக் கொண்டிருந்த உத்தியோகத்தர் செவிகளில் காத்து வாக்கில் ஒரு செய்தி வந்து விழுந்தது.

அவர் நிதி வழங்குவதற்குத் தீர்மானித்திருக்கும் விதவைகளுள் ஒருத்தி பிள்ளைகள் இன்றித் தனித்திருப்பவள்; இரகசியமாக ஒரு திருமணஞ் செய்து விட்டாள் என்பது தான் அது. அந்த உத்தியோகத்தர் அந்தக் கிராமத்துக்கு முன்னர் பல தடவைகள் சென்று வந்தது போல மீண்டும் ஒரு தினம் போனார். பலரிடத்திலும் அந்தரங்கமாக அந்தப் பெண் பற்றி விசாரித்துப் பார்த்தார். தான் கேள்விப்பட்ட செய்தி உண்மையானது என்பதனை உறுதி செய்து கொண்டார். மிகப் பொறுப்புடன் நேர்மையாகப் பணி புரிந்த அவருக்கு அந்தப் பெண்ணின் மீது வெறுப்பும் சினமும் உண்டானது. அவள் இப்பொழுது விதவையாக இல்லை. ஒருவனைத் திருமணஞ் செய்திருக்கின்றாள். அப்படி வாழ்ந்து கொண்டு தன்னை ஏமாற்றி விட்டாளே! என்ற கொதிப்பு அவர் உள்ளத்தில் உண்டானது. அவளுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்திருந்த நிதி உதவியை வழங்காது நிறுத்தி வைத்துவிட அவர் முடிவு செய்து கொண்டார்.



அவர் முடிவுகளை எடுத்தாலும் இறுதித் தீர்மானம் அந்த நிறுவனத்தின் தலைவராக இருந்து வந்த பேராசிரியரின் கையிலேயே தங்கி இருந்தது.

களஉத்தியோகத்தர் நடந்த விடயங்கள் அனைத்தையும் அதிருப்தியுடன் பேராசிரியரிடத்து விபரமாக எடுத்துக் கூறினார். அந்தப் பெண் தன்னை ஏமாற்ற நினைத்து திட்டமிட்டுக் காரியமாற்றி இருக்கின்றாள் என்ற விதமான ஒரு வெப்பிசாரம் அவர் உள்ளத்தில் இருப்பதனை அவர் பேச்சின் மூலம் பேராசிரியர் உணர்ந்து கொண்டார். இறுதியில் அந்த உத்தியோகத்தரைப் பார்த்து "நீ என்ன முடிவு எடுத்திருக்கிறாய்?" எனப் பேராசிரியர் வினவினார்.

"வேறு என்ன ஸேர் முடிவு?அந்தப் பெண்ணுக்கு நிதி உதவி செய்வதை நிறுத்த வேண்டியது தான்" என்றார் அவர்.

அப்பொழுது பேராசிரியர் நிதானமாகச் சொன்னார். "உன்ரை சகோதரிக்கு சீதனம் கொடுப்பது போல அந்தப் பெண்ணுக்கு அந்த நிதியைக் கொடு. அவள் குடும்பம் அதனாலே வாழட்டும்".

அந்த உத்தியோகத்தர் பேராசிரியர் முகத்தை நிமிர்ந்து பார்த்து அதிசயமாக நோக்கினாராம்.

இந்தச் சம்பவத்தைக் கூறி, பேராசிரியர் நிம்மதியுடன் மெல்லச் சிரித்தார். இது தான் பேராசிரியரின் மனித நேயம்.துன்பப்பட்ட மக்களை இனங்கண்டு மனநிறைவுடன் இவ்வாறான பதவிகளைப் பேராசிரியர் செய்து வந்த போதிலும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பொறுப்பினைச் சுமந்திருந்ததனால் அவர் பெரும்துயரப் பட்ட சம்பவம் ஒன்றுண்டு. அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த பொறுப்பு வாய்ந்த ஒருவரின் மரணம் அவர் உள்ளத்தை மிகத் துன்புறுத்தியது. அந்தச் சமயத்தில் நான் சந்தித்த வேளைகளில் எல்லாம் வேதனையுடன் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது அவரிடம் குறிப்பிட்ட ஒரு பண்பின் வெளிப்பாட்டினை நான் அவதானித்தேன். பழிக்கஞ்சி வாழும் பண்பாளர் அவர் என்பதனை உணர்ந்து கொண்டேன். தனது சகோதரி காலமான சமயத்தில் பேராசிரியர் கலங்கிப் போய் இருந்ததனைக் கண்ட பின்னர், இந்த மரணத்தினால் அவர் மனம் உடைந்து போய் இருந்ததைக் கண்டேன்.

# 14

# பரீட்சையில் புள்ளியிடுவது தொடர்பில் பேராசிரியரின் கருத்து

எனது கற்பித்தல் பணி மீது பேராசிரியருக்கு உயர்ந்த ஒரு கணிப்பீடு இருந்து வந்திருக்கின்றது. தனது மனப்பதிவினை பேராசிரியர் எழுத்திலும் பதிவு செய்திருக்கின்றார். இத்தனைக்கும் எனது கற்பித்தல் செயற்பாட்டினை நேரில் பார்ப்பதற்கோ அல்லது எனது செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கோ அவருக்குச் சந்தர்ப்பம் என்றுமே இருக்கவில்லை. ஆனால், என்னோடு நேரிற் பேசிக் கொண்டிருக்கும் சமயங்களிலும், கல்லூரியிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் என்னுடன் கற்பித்த ஆசிரியர்களுடன் பேசும் சமயங்களிலும், எனது மாணவர்கள் வாயிலாகவும் பல தகவல்களைப் பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றார்.

பல்கலைக்கழகத்தில் கற்ற ஒரு பட்டதாரி மாணவன், பின்னர் ஒரு சமயத்தில் தன்னோடு உடன் கற்றவர்களுக்கு விரிவுரையாளராக வந்திருப்பது புதுமையான ஒரு செயலல்ல. ஆனால், இடைநிலைக் கல்வி வரை கற்பித்தல் செயற்பாடு நடைபெறும் பாடசாலைகள், கல்லூரிகளில் இது சாத்தியமான ஒரு காரியமல்ல. எனது வாழ்க்கையில் இது சாத்தியப்பட்டிருக்கின்றது. மாணவனாக H. S. C வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த நான் அதனை விட்டு நீங்கி, முன்னர் கல்வி கற்றுத் தேறிய கல்லூரிக்குத் திரும்பி வந்து, மிக இளம்வயதில் ஆசிரியப் பதவியைப் பெற்றுக் கொண்டேன். நான் மாணவனாக இருந்த காலத்து மாணவர்களுக்கு ஆசிரியனாகக் கல்வி கற்பித்தேன். உடன் மாணவர்களாக என்னுடன் ஒரே வகுப்பில் படித்த மாணவர்களின் வகுப்புக்குச் சென்று படிப்பித்தேன். இதனால் ஆரம்ப காலத்தில் மாணவர்கள் மத்தியில் எனக்குச் சில நெருக்கடிகள் இருந்து வந்தன. அந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு ஒரே



வழியாக எப்பொழுதும் எனது கையில் ஒரு பிரம்பு இருந்தது. நான் மிக இறுக்கமான ஒரு ஆசிரியனாக நடந்து கொண்டேன். வளர்ந்து வந்தேன்.

பரீட்சை விடைப் பத்திரங்களுக்குப் புள்ளி இடுவதில் வெகு இறுக்கமாக இருந்தேன். தமிழ் மொழியை மாணவர்கள் வழுவில்லாது கற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் மிகக் கண்டிப்பாக நடந்து கொண்டேன்.

பேராசிரியர் ஒரு தினம் என்னுடன் பேசிக் கொண்டிருந்த வேளையில் "தெணி புள்ளி இடுவதற்கு ஒரு மாணவனின் விடைப் பத்திரத்தைக் கையில் எடுக்கும் போது, இவனுக்குரிய புள்ளி நூறு. இவன் விட்ட சிறு சிறு தவறுகளுக்குக் கொஞ்சப் புள்ளிகளைக் கழித்து விட்டு மிகுதியான முழுப் புள்ளியையும் அவனுக்கே கொடுத்துவிடுவேன் என எண்ண வேண்டும். அதுவே முறை" எனக் கூறினார். என்னை அறிந்து கொண்டு பேராசிரியர் இவ்வாறு கூறினாரா?அல்லது சாதாரணமாக பேச்சோடு பேச்சாகச் சொன்னாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், அதன் பின்னர் விடைப்பத்திரங்களுக்குப் புள்ளியிடும் சமயங்களில் எல்லாம் பேராசிரியர் அன்று கூறிய அந்தக் கருத்தினை நான் நினைத்துக் கொள்வேன். அது என்னை மிகவும் பாதித்ததென்றே சொல்ல வேண்டும். அப்பொழுது பேராசிரியர் இன்னொரு விடயத்தினை எடுத்துச் சொன்னார். "ஒரு வினாப்பத்திரத்தைத் தயாரித்தால் அதற்கு விடை எழுதும் மாணவர்களுள் ஒருவன் கூடப் பூச்சியம் புள்ளியைப் பெறக்கூடாது. பல மாணவர்கள் நூறு புள்ளியைப் பெறவும் கூடாது. அந்த வினாப் பத்திரம் சராசரித்தன்மை உடைய ஒன்றாக இருக்க வேண்டும்".

பாடசாலை மாணவர்கள் விடயத்தில் இவ்வளவு தாராளப் போக்கினைப் பின்பற்ற வேண்டும் என்னும் கருத்துள்ள பேராசிரியர், பல்கலைக் கழகக் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் பட்டதாரி மாணவர்கள் மிக ஆழமான அறிவினைப் பெற வேண்டும் என்னும் கொள்கை உள்ளவர் என்பதனை நான் அறிவேன். ஆய்வுக் கட்டுரை எழுதும் செயற்பாட்டில் பட்டதாரி மாணவர்கள் ஈடுபடும்போது ஆய்வுப் பொருள் பற்றிய பல நூல்களை முன்கூட்டியே வாசிக்க வேண்டும் எனச் சிபார்சு பண்ணுவாராம். ஆய்வுக் கட்டுரைகளைத் திருத்தித் திருத்தி, திரும்பத் திரும்ப எழுதச் செய்து செம்மையான ஓர் ஆய்வு உருவாகும் வண்ணம் வழி நடத்துவாராம்.

## 15

# தேவரையாளிச் சமூகம்

பேராசிரியர் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்த ஒரு பேரறிஞர் என்னும் கருத்துக்கு மாற்றுக் கருத்து யாரும் சொல்லிவிட முடியாது. இந்தப் பேராசிரியர் வடபகுதியில் வடமராட்சிப் பிரதேசத்தில் குறிப்பிட்ட ஒரு எல்லைக்குள் வாழும் மக்களைப் பொதுவான ஒரு சொற்றொடருக்குள் அடக்கிக் கூறியுள்ளார். அந்த மக்களைக் குறிக்கும் ஒரு பொதுப் பெயராக அத்தொடரை இன்று பலரும் பயன்படுத்தி வருகின்றனர். அதன் மூலவர் யாரென்னும் வரலாற்றுண்மை எக்காலத்திலும் மறைந்து போய்விடக் கூடாதென்பது எனது எண்ணம்.

நான் கல்வி கற்று பின்னர் ஆசிரியராகப் பணிபுரிந்த தேவரையாளி இந்துக் கல்லூரியில் இருந்து வரலாற்றில் முதற்தடவையாக 1975 ஆம் ஆண்டு கல்லூரிச் சஞ்சிகை ஒன்று வெளியீடு செய்வதற்குத் தீர்மானிக் கப்பெற்றது. 'தேவரையாளி இந்து' என்னும் அச்சஞ்சிகையின் இணை ஆசிரியர்களுள் ஒருவராக நான் இருந்தேன். அந்தச் சஞ்சிகையில் பேராசிரியரின் கட்டுரை ஒன்றும் இடம்பெற வேண்டுமென மலர்க்குழு தீர்மானித்தது. பேராசிரியர் அப்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வந்து சேராத காலம். நான் பேராசிரியருடன் தொடர்பு கொண்டு வல்வெட்டித்துறையிலுள்ள அவர் இல்லத்துக்கு இரண்டு, மூன்று தடவை சென்று பண்பாடு பற்றிய அந்தக் கட்டுரையைப் பெற்று சஞ்சிகையில் இடம்பெறச் செய்தேன்.

பின்னர் இரண்டாவது தேவரையாளி இந்துவை ஒரு தேவையின் பொருட்டு 1980 இல் வெளியிட்டு வைக்க வேண்டிய அவசியம் வந்து நேர்ந்தது. அப்பொழுது இருந்த அதிபர் அதற்கு முன்னர் இருந்த அதி பரின் சேவை நலன் பாராட்டும் நோக்கத்துடன் சஞ்சிகையை வெளியிட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். சஞ்சிகையின் முழுப் பொறுப்பை யும் என்னிடத்தில் ஒப்படைத்து, சஞ்சிகை ஆசிரியராகவும் என்னை நியமித்தார்.



அந்தச் சமயம் பேராசிரியர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றலாகி வந்து விட்டார். நான் பேராசிரியரை அணுகி, சேவை நலன் பாராட்டு மலராக வெளிவர இருக்கும் சஞ்சிகைக்குக் கட்டுரை ஒன்றினை எழுதித்தருமாறு கேட்டுக் கொண்டேன்.

தேவரையாளி இந்துக் கல்லூரிக்கும் பேராசிரியருக்கும் பாரம்பரிய மான ஒரு தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. வடமராட்சிப் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினராலே 1917 இல் தோற்றுவிக்கப் பெற்றது வேரையாளிச் சைவ வித்தியாசாலை, இன்றைய தேவரையாளி இந்துக் கல்லூரி. இந்தப் பாடசாலை, ஆரம்பித்த காலத்தில் இங்கு ஆசிரியப் பதவி ஏற்று மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு உயர்சாதியாரெனச் சொல்லப்படுகின்றவர்கள் மறுத்து நின்றார்கள். அக்காலகட்டத்தில் பேராசிரியரின் தந்தையார் ஓர் ஆசிரியராக வருகை தந்து இந்த மாணவர்களுக்கு கல்வி கற்பித்திருக்கின்றார். தனது தந்தையார் கற்பித்த பாடசாலை என்பதால் இந்தக் கல்லூரியைப் புனித தலமாகக் கருதும் மனோபாவம் பேராசிரியர் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது.

இந்தக் கல்லூரியைச் சூழவுள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்துப் பிள்ளை களின் அறியாமை இருள் அகற்றி, அறிவுக் கண் திறந்த தாயாக விளங்கி வந்தது இந்தக் கல்வித் தாபனம். அதனால் இந்த மக்கள் ஏனைய பகுதி களில் வாழ்ந்து வந்த மக்களிலும் பார்க்க கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள். விளங்கி வருகின்றார்கள். இந்தக் கல்லூரியை மைய மாகக் கொண்டுள்ள சமூகம், இதன் பின்னணி என்பன யாவையும் மிகத் துல்லியமாக விளங்கி, உணர்ந்து வைத்திருப்பவர் பேராசிரியர். சேவை நலம் பாராட்டு மலரில் வேறு விடயங்கள் எழுதுவதைத் தவிர்த்து விட்டு தேவரையாளி இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்களை, அவர்கள் பெரும்பாலார் வாழ்ந்து வந்த கல்லூரியைச் சூழ வாழ்ந்து வரும் மக்களை, ஒன்று சேர்த்துப் பொதுவாகத் 'தேவரையாளிச் சமூகம்' எனக் குறிப்பிட்டு எழுதினார்.

அந்தக் கட்டுரையைப் பெற்று அந்த மலரில் இடம் பெறச் செய்தேன். அந்த மலர், வெளிவந்த பின்னர் கிராமங்களின் பெயர்களைத் தனித் தனியாகக் குறிப்பிட்டுச் சொல்லாது எல்லாக் கிராமங்களையும் ஒன்றாக இணைத்து 'தேவரையாளிச் சமூகம்'என்றே இன்று பலரும் மேடைகளில் பேசியும் எழுத்து வடிவில் எழுதியும் வருகின்றனர்.

ஒரு கருத்து நிலையில் பேராசிரியர் பயன்படுத்திய இந்தச் சொற்பிர யோகம் அவரது ஆழ்ந்த சமூக நோக்கின் தமிழ்ப் புலமையின் வெளிப்

பாடு என்பதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். தேவரையாளிச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து கின்றவர்களுள் ஒருவர் தான் அல் வாயூர்க் கவிஞர் மு.செல்லையா. ஈழத்துக் கவிதைப் பாரம்பரியம் பற்றி எழுதுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் அவருடைய பெயரைக் குறிப்பிடு வதற்குப் பேராசிரியர் தவறுவதில்லை. 'மல்லிகை'யின் அட்டைப் படமாகக் கவிஞரின் படத்தினை வெளியிடுவதற்குத் தீர்மானித் தபோது, அறிமுகக் கட்டுரை யாரிடத்தில் எழுதுவித்து வாங்குவோம் என, ஜீவா என்னிடத்தில் வினவினார். பேராசிரியரிடமே அந்தக் கட்டுரை யைப் பெற்றுக் கொள்வோமெனக் கூறி, பேராசிரியரைக் கொண்டு எழுது வித்து மல்லிகைக்குக் கொடுத்தேன். பேராசிரியரின் அறிமுகத்துடனேயே மல்லி கையில் கவிஞர் செல்லையாவின் அட்டைப் படம் வெளி வந்தது.

இன்னொரு அட்டைப் பட விவகாரம் சற்றுச் சுவாரசியமான ஒன்று. பேராசிரியருடனும் டானியலுடனும் ஜீவாவுடனும் நெருக்கமான பழக் கமும் உறவும் எனக்கு இருந்திருக்கின்றது. பேராசிரியர் என்னுடனும் ஜீவா, டானியல் இருவருடனும் உறவு வைத்துக் கொண்டார். சர்வதேச மட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட பிளவு, இந்த நாட்டுக் கம்யூ னிஸ்ட்டுகள் மத்தியிலும் பிளவை உண்டாக்கியது. நண்பர்களாக இருந்த டானியல், ஜீவாவும் கட்சிப் பிளவினால் பிரிந்து போனார்கள். பிரிந்து போனது மாத்திரமல்ல, ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்க்கும் தவறான ஒரு நோக்கும் அக்காலத்தில் கட்சித் தோழர்களிடம் காணப்பட்டது. டானியலும் ஜீவாவும் இருதுருவங்களாக மாறிப் போனார்கள்.

பேராசிரியர் கொள்கை ரீதியில் ஜீவாவின் அணியைச் சேர்ந்தவர். ஆனால், டானியலுடனும் நெருக்கமான நட்புறவினைப் பேணி வந்தார். பேராசிரியரிடத்தில் இருந்து வந்த இயல்பும், மிக முக்கியமான முற் போக்கு விமரிசர்களுள் ஒருவராக அவர் இருந்ததும், அறுந்து போகாத அந்த நட்புக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

நான் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இளையவன். ஜீவாவின் கம்யூனிஸ்ட் அணியைச் சேர்ந்தவன். அதேசமயம், டானியலுடனும் நெருக்கமான நட்பும் உறவும் இருந்து வந்திருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சினைகள் மீது எனக்கிருந்து வந்த அக்கறையும் அந்த மக்கள் பற்றி நான் படைத்துக் கொண்டிருந்த இலக்கியங்களும் டானியல் என் னிடத்தில் நம்பிக்கையும் நட்பும் கொள்ள வைத்தன.

நான் டானியல், ஜீவா இருவருடனும் நட்போடு பழகினேன். யாழ்ப் பாண நகரத்துக்குப் போய் வருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இருவரையும் சந்தித்துப் பேசுவதற்கு நான் தவறுவதில்லை. இவர்கள் இருவர் மத்தியிலும் மீண்டும் ஐக்கியத்தை உருவாக்க வேண்டுமென்பது எனது உள்ளத்தில் இருந்த வந்த விருப்பம். இவர்கள் இருவரிடத்திலும் இருக்கும் கொள்கைப் பிடிப்புக்கு மேலான நட்பினை, இலக்கிய நட்பினை வைத்துக் கொள்ளலாம். அதனைப் பாதுகாக்கலாம் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. எத்தகைய கொடிய பகையும் அதற்குத் தொடர்ந்து எரியூட்டிக் கொண்டிருக்காது இருப்பின், கால நீரோட்டத்தில் அதன் வெப்பம் தணிந்து கொண்டே வரும். சக்தி மிகுந்த மருந்துகள் நீண்ட காலம் இருந்தால் 'வேகரம்'கெட்டுப்போகும் என்று சொல்லுவார்கள். 'வேகரம்' என்பது அதன் சக்தி அல்லது வலு. கொள்கை அடிப்படை யிலான முரண்பாடும் அப்படியாக வேண்டும் என்பது எனது தீர்மானம்.



ஜீவா வருடா வருடம் தனது பிறந்த நாளைக் கொண்டாடி வருவது வழக்கம். ஜீவாவின் ஒரு பிறந்த தினத்தன்று மல்லிகைக்கு வருமாறு டானியலிடம் கேட்டேன். எனது விருப்பத்தை டானியல் தட்டிக் கழிக் கவில்லை. முரசொலி ஆசிரியர் எஸ்.திருச்செல்வமும் இவர்கள் ஒற்று மையில் அக்கறையாக இருந்தார். பின்னர் தனது மோட்டார் சைக்கிளி லேயே அவர் டானியலை மல்லிகைக் காரியாலயத்துக்கு ஏற்றி வந்தார்.

இந்தச் சம்பவத்தைப் பேராசிரியரிடம் நான் எடுத்துச் சொன்னேன். "இருவரையும் நெருங்கிவரச் செய்வது உங்களாலே தான் முடியும், அதைச் செய்யுங்கோ!" என மகிழ்ச்சியுடன் சொன்னார்.

பின்பு டானியலிடம் கேட்டு, அவரது புகைப்படத்தைப் பெற்று ஜீவாவிடம் கொடுத்தேன். டானியல் பற்றிய அட்டைப்படக் கட்டுரை யைப் பேராசிரியரைக் கொண்டு எழுதுவித்து, அதனையும் ஜீவாவிடம் ஒப்படைத்தேன். இதனைப் பேராசிரியர் பின்வருமாறு பதிவு செய்தி ருக்கின்றார்:

> டானியல் தெணியானிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். தான் இல்லாத காலத்து தான் எழுதாமல் விட்டுள்ள நாவல்களை தெணியானைக் கொண்டு எழுதி முடித்துவிட வேண்டுமென்று தெணியானுக்கும் கூறியுள்ளார்; எனக்கும் சொல்லியுள்ளார். டானியலது ஆளுமை சிக்கலானது. பன்முகப் பட்டது. அவை யாவற்றுக்குமூடே தெணியான் மேல் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். தெணியான் இல்லையென்றால் மல்லிகையில் டானியலின் படம் வந்திருக்கவும் மாட்டாது, 'டானியல் ஒரு ஆவேச மனிதாயதவாதி' என்று நான் எழுதுவதற்கான வாய்ப்பும் கிட்டியிருக்காது.

16

# மணிவிழா முயற்சி

வடமராட்சி 'ஒப்பரேஷன் லிபரேஷனின்'போது எல்லோரும் கோயில் களில் போய்க்குவிந்தோம். பின்னர் வீதியில் நடமாடத் தகுந்த நிலை வந்த பிறகு பேராசிரியர் கரவெட்டியில் உறவினர் ஒருவரின் இல்லத்தில் குடுப்பத்துடன் தங்கி இருப்பது அறிந்து அங்குபோய்ச் சந்திக்கின்றேன். ஒரு வாரகாலத்தின் பின்னர் மீண்டும் வீடுகளுக்குத் திரும்பினோம். பிறகு மில்லரின் நெல்லியடி வித்தியாலயத் தாக்குதலைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து ஓடுகின்றோம். சுமார் இரண்டு மாதங்கள் கழிந்து வீட் டுக்கு மீண்டும் வருகின்றோம்.

பேராசிரியர் வீடு தேடி ஒரு தினம் செல்கின்றேன் பேராசிரியர் என்னை வரவேற்றுக் கொண்டு சொல்கிறார் ''வானமே கூரையாக வாழ் கிறோம்'' என. நிமிர்ந்து வீட்டுக்கூரையை நோக்குகின்றேன். வானம் நன்றாகத் தெரிகின்றது. கடலில் இருந்து வீசிய ஷெல்லின் பாதிப்பால் கூரை ஓடுகள் உடைந்து சிதறிக்கிடக்கின்றன

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த பின்னர் ஆரம்பத்தில் எல்லாம் சுமுகநிலைக்கு வந்துவிட்டதான ஒருவித மாயையுடன் மக்கள் வாழத்தொடங்கினர்.

அடிக்கடி நடந்து கொண்டிருந்த தாக்குதல்கள், குழப்பங்களினால் அந்தந்த சமயங்களில் ஓடி ஒளிந்து அல்லற்பட்டுக் கொண்டிருந்த வேலைகளை, கடமைகளைச் செய்து கொண்டிருந்தார்கள். செய்ய வேண்டியும் இருந்தது. விழாக்கள், கொண்டாட்டங்களும் இடையிடையே நடக்காது போய்விடவில்லை.

மே 1992இன் பின்னர் ஓராண்டு காலம் பேராசிரியரின் மணி விழாக்காலம். நெருக்கடியான அந்தக்கால கட்டத்திலும் யார் யாருக்கோ பொன்னாடையும் பூமாலையுமாக விழாக்கள் நடந்து கொண்டுதான் இருந்தன. யாழ்ப்பாணக் கல்விச்சமூகம் பேராசிரியருக்கு மணிவிழா ஒன்றினை எடுக்குமென ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். ஏதிர்பார்ப்பு எதிர்பார்ப்பாகவே இருந்தது. காலம் கடந்து போய்க் கொண்டிருந்ததே ஒழிய, அப்படி ஒரு விழா நடைபெறுவதற்கான முஸ்தீப்புகள் எதனையும் கண்டுகொள்ள முடியவில்லை.

ஒருநாள் பேராசிரியரிடம் அவரது மணிவிழா பற்றி மெல்லப் பிரஸ் தாபித்தேன். அவர் அது பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. 'விழாவும் கொண்டாட்டங்களும் எதற்கு! எனக்குரிய பணிகளை நான் செய்துகொண்டிருந்தால் போதும். அதில்தான் எனக்கு மனநிறைவு' என்று கூறினார். பேராசிரியர் தனது உண்மையான உள்ளத்தை வெளியில் எடுத்துச் சொன்னாராயினும் எனக்கதில் திருப்தி உண்டாகவில்லை. அத்தோடு விழாவுக்குரியவரிடம் அவரது விழா பற்றி பேசுவது முறை யல்ல எனவும் மனதில் உணர்ந்து கொண்டேன்.

ஆனால், ஒன்றை மாத்திரம் அவரிடத்தில் எடுத்துச் சொன்னேன். மணிவிழா எனும் பெயரில் ஆடம்பரமான ஒரு கொண்டாட்டம் நடைபெற வேண்டும் என்பது எனது விருப்பமல்ல. அத்தகைய கேளிக்கைகள் காலப்போக்கில் பலராலும் மறந்து போய் விடக்கூடியவை. அதற்கு மேலாக ஒரு மணி விழா மலர் வெளியிடவேண்டும். உங்களைப் பற்றிய கருத்துக்களை பலரிடமும் கேட்டுக் கட்டுரைகளாகப் பெற்று அந்த மலரில் தொகுத்து ஓர் ஆவணமாகப் பதிவுசெய்து வெளியீடு செய்ய வேண்டும் என்றேன்.

''அதெல்லாம் சிரமமான காரியம்'' என்று சுருக்கமாக கூறிவிட்டு பேராசிரியர் மௌனமாக இருந்துவிட்டார்.இன்று வெளியிடப்பெறும் மணி விழா மலர்களின் உள்ளடக்கம் போன்று அன்று ஒரு மலரை உருவாக்குவதாக இருந்தால், வெகு இலகுவாக அந்தக் காரியத்தை நிறைவேற்றலாம். குறித்த ஒரு பொருள் பற்றி ஒரு நூலை அல்லது கட்டுரைகளைத் தொகுத்து விழாவுக்குரியவரின் வாழ்க்கை குறிப்பினை அதோடு இணைத்து மணிவிழா மலராக வெளியிடப்படுகின்றன. அக் காலத்தில் கட்டுரைகள் அனைத்தும் மணிவிழா நாயகன் பற்றி எழுதப் பெற்றவைகளாக இருந்து வந்ததுதான் நடைமுறை. அவ்வாறான ஒரு மலரை வெளியிடுவதுதான் எனது விருப்பமாகவும் இருந்தது.

நான் எனது எண்ணத்தைக் கைவிட்டு விடவில்லை. யாழ்.பல் கலைக்கழகப் பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா பேராசிரியர் சிவத்தம்பி மேல் மிகுந்த மதிப்பும் அன்புமுள்ளவர் என்பது எனக்கு தெரியும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்த எனது நீண்டகால நண்பர்களுள் அவரும் ஒருவர். அவரும் நானும் நேரிற் சந்தித்துப் பேசிக்கொள்ளும் சமயங்களில் ஒருவரை ஒருவர் ஒருமையில் விழித்துப் பேசிக்கொள்ளும் அளவுக்கு எங்களுக்கிடையே நட்பும் நெருக்கமும் இருந்து வந்தது.

யாழ்.பல்கலைக்கழகம் சென்று பேராசிரியரின் மணிவிழாக் காலத்தை நினைவுபடுத்தி, அவருக்கொரு மணிவிழாவும் பிரதானமாக ஒருமலர் வெளியீடு செய்வதும் பற்றிப் பேசினேன். நண்பர் கிருஷ்ணராஜாவுக்கு பூரணமான மனவிருப்பம் இருந்தது. விழாக் காரியங்களைக் கவனிப் பதற்கு வெகு உற்சாகமாக உடன்பட்டார். குறித்த ஒரு தினத்தில் ஒரு விழாவினை நடத்தி முடிப்பது பெரிய காரியமல்ல. விழா நடத்துவது எங்கள் பிரதான நோக்கமுமல்ல. சிறப்பான மலர் ஒன்றினைப் பதிவாக வெளியிட்டு வைக்க வேண்டும் என்பதே எங்கள் அந்தரங்க நோக்கமாக இருந்நது.

பேராசிரியர் பற்றி யார் யாரிடம் கட்டுரைகள் வாங்க வேண்டுமென இருவரும் யோசித்து, பெயர்களைக் குறித்து வைத்துக் கொண்டோம். மேலும் யாரிடமெல்லாம் கட்டுரைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமென் பதனை பேராசிரியரிடம் கேட்டறிந்து கொள்வோம் என முடிவு செய் தோம். கட்டுரைகளைச் சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றுக்கொள்வதற்காக தொடர்புகளை நண்பர் கிருஷ்ணராஜாவே வைத்துக் கொள்வதென்னும் தீர்மானத்தையும் செய்து கொண்டோம்.

சில காலம் சென்ற பிறகு நண்பருடன் தொடர்பு கொண்டேன். கட்டுரைகளை அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மீண்டும் மீண்டும் தொடர்பு கொண்டேன். எங்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகவே இருந்தது. பேராசிரியருக்கு ஒரு மணிவிழா மலர் வெளியிடவோ, அதனை வெளியிட்டு வைக்கும் வைபவத்தை ஒரு மணிவிழாவாகக் கொண்டாடவோ, இயலாது ஏமாற்றமும் வேதனையும் அடைந்தோம். மலரில்லாத மணிவிழா ஒன்று ஒருதினம் பேராசிரியருக்கு பின்னர் நல்லூரில் நடத்தப்பட்ட நிகழ்வு நடந்தேறியது.

ஒரு சமயம் பேராசிரியர் எழுத்து மொழிநடை பற்றிய சர்ச்சை ஒன்று திடீரென எழுந்தது. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த மாசிகை மல்லிகையில் பேராசிரியரின் கனதியான கட்டுரைகளும், வேறு சிலரின் கட்டுரைகளும் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. இலக்கியம், சமூகம் சார்ந்த பேராசிரியரின் புதிய பார்வை பலரையும் சிந்திக்கவும் புதியவற்றை நோக்கவும் உந்துதலாக அமைந்தன.



பேராசிரியர் தனது நவீன சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்குரிய தளமாக மல்லிகை அக்காலத்தில் விளங்கியதுடன் அதன் பெறுமதிமிக்க வளர்ச்சிக்கும் அவரது கட்டுரைகள வழிசமைத்தன.

இந்த சமயத்தில்தான் பேராசிரியரின் கட்டுரைகள் விளங்குவதற்குச் சிரமமான மொழிநடையில் அவர் எழுதுவதாக அதே மல்லிகையில் ஒரு கட்டுரையை ஒருவர் எழுதி இருந்தார். அந்தக் கட்டுரையை படித்த பிறகு பேராசிரியர் அது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அந்தக் கட்டுரை எனக்குள் பெரிய அதிர்ச்சியைக் கொடுத்தது. அதனை எழுதியவர் நேர்மையாக, துணிச்சலாகத் தனது சொந்தப் பெயரில் எழுதியிருக்க வில்லை. அவ்வாறு இல்லாது புனைபெயரில் ஒளிந்தி ருந்து எழுதியிருந்தமை அவரது பேடித்தனத்தை வெளிப்படுத்துவதாகத் தோன்றியது. என்னதான் புனைபெயருக்குள் புகுந்து மறைந்திருந்தாலும் அவர் யாரென்பதனைத் தெளிவாக நான் அறிந்திருந்தேன். எனக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் பேராசிரியரின் மொழி நடையினை இவ்வாறு வசைபாடி விட்டாரே! என்பது எனது அதிருப்திக்குரிய காரணமல்ல. ஒருவரது மொழிநடை பற்றி எனக்குள் தெளிவான, திட்டமான சில கருத்துக்கள் இருந்து வந்தன.

ஓர் எழுத்தாளன் எவ்வாறு சிந்திக்கின்றானோ அந்தச் சிந்த னையின் வெளிப்பாடாக வருவது தான் அவனது மொழிநடை. குறித்த ஒரு பொருள் பற்றிச் சிந்திப்பதாக இருந்தால் எல்லோரும் ஒத்த வகையில் சிந்திப்பதில்லை. சிந்தனையானது தனிஆள் வேறுபாடுகளுக்கமைய ஆளுக்காள் மாறுபட்ட இயல்புகளை உடைய சிந்தனையை எழுத்தில் பதிவு செய்யும் போது மொழிநடை வேறுபடவே செய்யும்.

உதாரணமாக நோக்குவதனால் டாக்டர் மு.வ.இன் மொழி நடை, அறிஞர் அண்ணாத்துரையின் மொழிநடை, ரா.பி.சேதுப்பிள்ளையின் மொழிநடை, வா.ரா.இன் மொழிநடை, திரு.வி.க.இன் மொழிநடை, புதுமைப்பித்தன், மௌனி, ஜெயகாந்தன், சுந்தரராமசாமி, லா.சா. ரா... எனப் பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவர்கள் எவருடைய மொழிநடையும் ஒன்றை ஒத்தாக இன்னொன்று இருப்பதில்லை. மௌனி யையும் லா.சா. ரா.வையும் படித்து விளங்கிக் கொள்ளும் தமிழ் வாசகர்க ளுக்கு பேராசிரியரின் மொழிநடையா விளங்கவில்லை என ஆச்சரியப் பட்டேன்.

விளங்கிக்கொள்ள முடியவில்லை என்பது திட்டமிட்டுக் கூறப்பட்ட ஒரு குற்றச்சாட்டு. குறைகூறியவர் காலத்துக்குக் காலம் வேறுபட்ட பல தளங்களில் நின்று தாளம் போடுகின்ற ஒருவர்.

பேராசிரியர் தந்தையாரான பண்டிதரின் மரபில் வந்த ஆழ்ந்த தமிழ்ப் புலமையுள்ளவர். அதே சமயம் ஆங்கிலத்திலும் அதேபோன்ற புலமையுள்ள ஒரு கல்விமான். இத்தகைய ஓர் உருவாக்கத்தின் பேறான வெளிப்பாடே அவரது எழுத்துநடை மொழிநடை. பேராசிரியரின் வாக்கிய நடை நீண்டதாக இருக்கும். நாவலரின் வசனம் மிகமிக நீண்டதாக இருப்பது கண்டு இவர்கள் குறைபட்டுக் கொள்வதில்லை. பேராசிரியர் ஒரு வாக்கியத்தை எழுதும் போது அந்த வாக்கியம் வெளிப்படுத்தும் தனது கருத்தினை எவராவது பிழைபடவோ, அல்லது திரித்தோ பொருள் கொள்ளும் வாய்ப்பினை, அந்த வாக்கியம் தன்னகத்தே கொண்டிருக்க கூடாது என்பதனை மிகுந்த கவனத்தில் கொண்டு எழுதுவதை அவதானிக்கலாம்.

அத்தகைய பார்வைத்தெளிவில்லாத குறைகூறும் கட்டுரைக்கு எதிர் வினையாக ஒரு கட்டுரை நான் எழுதினேன். அதனையும் மல்லிகை வெளியிட்டு வைத்தது.

இந்தச் சர்ச்சையில் மாட்டிக்கொள்ளாது, தனக்குச் சம்பந்தப்படாத விடயம் போலப் பேராசிரியர் பார்வையாளராக இருந்து வந்தார் என்பது எனக்கு வியப்பாக இருந்தது.

## 17

## விரும்பாத இடப்பெயர்வு

மனிதர்கள் பெரும்பாலும் தங்களையே, தாங்கள் விளங்கிக் கொள்ளாமலே வாழ்ந்து வருகின்றார்கள் என்னும் உண்மை, பொதுவாக இந்த மனிதர்கள் அறிந்து கொள்வதில்லை. அதனால்தான் சிலருக்கு 'எல்லாம் தெரிந்த குணம்' வந்து விடுகின்றது. பேராசிரியருடன் பேசிக் கொண்டிருக்கும் வேளைகளில் அவர் தன்னை எவ்வளவு துல்லியமாக விளங்கி வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதனை உணர்ந்து கொள்ளலாம். ஒரு தினம் பல்கலைக்கழகம் சார்ந்தவர்களுடைய தமிழ்ப் புலமை பற்றிப் போராசிரியருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அச்சமயம் கூறினார் "தமிழ் இலக்கணத்தைத் தெளிவாகக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் அது பேராசிரியர் வேலுப்பிள்ளை இடந்தான். அவருக்குத் தமிழ் இலக்கணத்தில் நல்ல தாடணம் உண்டு" என. புலமைக் காய்ச்சலினால் வெந்து கருகிக் கொண்டிருக்கும் தமிழ்கற்றோர் மத்தியில் இப்படியும் ஒரு பெரிய மனிதரா? என நான் அதிசயப்பட்டேன்.

கடந்த காலப்போரினால் பெருமளவு பாதிக்கப்பட்டவர்கள் கடற்கரையை அண்டிய பிரதேசங்களில் வாழ்ந்து வந்த பொதுமக்கள் தான் என்பது உண்மை. கடற்கரைகளில் இருந்து ஓரளவு தூரம் உள்ளே தள்ளி நாட்டுக்குள் வாழ்ந்த மக்கள் படாத கஷ்டங்களை கடற்கரைகளுக்கு அண்மையில் வாழ்ந்த மக்கள் அனுபவித்தார்கள். எல்லோருந்தான் பதுங்கு குழிகள் தோண்டி வைத்துக் கொண்டிருந்தாலும் கடற்கரைப் பகுதி மக்கள் அடிக்கடி சொந்த வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து ஓட வேண்டிய நிர்ப்பந்தம், அவர்களுக்கு மாத்திரமே இருந்து வந்தது. இரண்டொரு தினங்களில் வீடுகளுக்குத் திரும்பி வருவதும் மறுபடியும் ஓடுவதுமாக அலைந்து கொண்டிருந்தார்கள். உள்ளூர்ப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள் இந்த மக்களை வேடிக்கையாகப் பார்த்ததும் உண்டு.

இந்தப் பாதிப்பு,தாக்குதல் வல்வெட்டித்துறைப் பிரதேசத்து மக்களுக்கு அதிகம். வல்வெட்டித்துறையில் வாழ்ந்த வசதிபடைத்தவர்கள் தமிழ் நாட்டுக்கும், மேற்குநாடுகளுக்கும், கொழும்புக்கும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் தப்பிப் போனார்கள்.

பேராசிரியர் சமூகப் பொறுப்புடன் மன ஓர்மத்துடன் இடம்பெயராது அந்த மண்ணில் வாழ்ந்து வந்தார். கடலிலிருந்து ஏவி விடப்பட்டு நாட்டுக்குள் வந்து விழுந்து சிதறும் ஷெல் 'இது பிரஜைகள் குழுத்தலைவர் வீடு' என்று பார்த்து விலகியா போகும்? அமைதிக்காக வந்த இந்தியப்படை, பேராசிரியரின் வீட்டு மேற்குப் பக்கமுள்ள சுவரோடு, சிதம்பராக்கல்லூரிக்குக் கிழக்கே பேராசிரியர் வீட்டுக்கு மேற்கே இருந்த ஒரு வீட்டில் முகமிட்டிருந்தது. அந்த முகாமில் இருந்த இராணுவத்தளபதி பேராசிரியர் இல்லந்தேடி வந்து நட்புரிமையுடன் உரையாடும் பாவனையில் கதையோடு கதையாக தகவல்களை பெற்றுக்கொள்ள முயன்று கொண்டிருந்தார். அவரோடு பேசிக்கொண்டிருந்த சமயம் ஒரு தினம் நான் அங்கு போய்ச் சேர்ந்தேன். பேராசிரியர் தளபதிக்கு என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். அவர் என்னோடு கைகுலுக்கி, ஓய்வாக இருக்கும் சமயங்களில் முகாமுக்கு வந்து பொழுது போக்காகத் தன்னோடு பேசுமாறு கேட்டுக்கொண்டார்

எங்களுக்கு எங்கள் தலைகள் மீது அக்கறையிருந்தது. இராணுவத்துடன் எந்த உறவும் வைத்துக்கொள்ள விரும்பாத போதும் நிர்ப்பந்தத்தினால் தானும் அவர்களோடு ஊடாடினால் உங்கள் உயிர் வாழ்வுக்கு என்ன உத்தரவாதம்? ஆனால், பேராசிரியர் பிரஜைகள் குழுத்தலைவராக இருந்தமையால் வடபிரதேச இராணுவத்தளபதியின் அழைப்புக் கிடைத்த சமயங்களில் எல்லாம் அங்கு சென்று சந்திக்க வேண்டிய அவசியம் இருந்து வந்தது.

இனி, மீளமுடியாத இந்த நெருக்கடிகளினால் பேராசிரியர் வல்வெட்டித்துறையிலுள்ள வீட்டில் இருந்து இடம்பெயர்ந்து மனைவி, பிள்ளைகளைக் கொழுப்புக்கு அனுப்பிவைத்தார். தான் யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கு போய் வாழத்தொடங்கினார்.

## 18

# பேராசிரியரின் திருநெல்வேலி வாழ்க்கை

பேராசிரியர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் (1992) தாபாற் பெட்டிச் சந்திக்கருகே உள்ள வசதியான பெரிய வீடொன்றில் குடியிருந்தார். அந்த வீட்டில், அவர் தங்கியிருந்து யாழ்.பல்கலைக்கழகம் போய் வருவது அவருக்கு இலகுவாக இருந்தது. நகரம் சார்ந்த பகுதியில் வாழ்ந்தமையால் சமூக வேலைகளில் தொடர்ந்து ஈடுபடுவது முன்னரிலும் சுலபமான தாயிற்று.

பேராசிரியரும் நானும் முன்னர் போல வாரத்தில் ஒரு தடவையாவது சந்தித்துப் பேசிக்கொள்ளும் சூழ்நிலை இப்போது இல்லாது போனது. அக்காலம் பஸ்வண்டிகள் வீதிகளில் ஓடுவது தடைப்பட்டுக்கிடந்த காலம். அவசர நோயாளர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு வாகனங்கள் கிடைக்காத நெருக்கடியான வேளை. ஒரு சில வாகனங்கள் பெற்றோலில் மண்ணெண்ணெய்யைக் கலந்து புகைகக்கிக்கொண்டு மிக அத்தியாவசிய தேவைகளுக்கு வீதிகளில் ஓடிப்போயின.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் வடமராட்சியில் இருந்து இருபது மைல்களுக்கப்பால் நான் சென்று பேராசிரியரைச் சந்தித்து வருவது சுலபமான காரியமாக எனக்கிருக்கவில்லை. அக்காலத்தில் பொதுவாக எல்லோருக்கும் தேசிய வாகனமாக இப்பகுதியில் இருந்தது சைக்கிள் வண்டி. இங்கிருந்து சைக்கிள் வண்டியில் புறப்பட்டு யாழ்ப்பாணம் சென்று திருநெல்வேலியில் பேராசிரியரை சந்தித்து வீட்டுக்குத் திரும்பி வருவதாக இருந்தால் எனக்கு ஒருநாள் தேவைப்பட்டது. நீண்டதூரம் சைக்கிள் ஓடிப்போகும் அலுப்பான பிரயாணம் மாத்திரமல்ல, பயங்கரம் நிறைந்த பிரயாணமாகவும் அது இருந்தது. குறிப்பாக வடமராட்சியைத் தாண்டும் பொழுது பரந்து நீண்டு கிடக்கும் வல்லைவெளிக் கூடாகச் செல்வது சோதனை மிகுந்த ஒரு கண்டம். பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் ஷெல் திடீரென எந்தச் சமயத்திலும் அந்த வீதியில் வந்து விழுந்து உயிர்களைக் காவு கொள்ளலாம். அப்படியான சம்பவங்கள்

இடையிடையே தொடர்ந்து அங்கு நடந்து கொண்டிருந்தன. இவை களுக்கு மத்தியிலும் மனிதர்கள் வாழவேண்டி, செயற்பட வேண்டியிருந்தது. உயிராபத்து நிறைந்த அந்த வீதியில் சைக்கிள் வண்டிகளில் பயணம் பண்ணிக் கொண்டுதான் இருந்தார்கள்.

நான் சைக்கிள் வண்டியில் சென்று பேராசிரியரை இடையிடையே சந்தித்துக் கொண்டு வரத்தவறவில்லை. ஆனால், முன்னர் போல நீண்ட நேரம் அமர்ந்திருந்து மனந்திறந்து இருவரும் பேசுவதற்கான சூழ்நிலை இல்லாது போனது. ஆயினும் சைக்கிளில் செல்வதனால் இன்னொரு வாய்ப்பு சுலபமாக எனக்கு கிட்டியது. பேராசிரியரிடம் விடைபெற்றுக் கொண்டு யாழ்ப்பாண நகரம் சென்று 'மல்லிகை'க்காரியாலயத்தில் ஜீவாவைச் சந்திப்பேன். அங்கிருந்து புறப்பட்டால் சில சமயங்களில் பேராசிரியர் நந்தியைச் சந்திப்பேன். அந்தநாள் பிரயாணம் ஒரு இலக்கியப் பயணமாகவே அன்றெனக்கு அமைந்துவிடும்.

இவ்வாறு இடையிடையே போய் வந்துகொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த வட அல்வை க.முருகேசு ஆசிரியரின் பவளவிழாக்காலம் வந்தது. ஆசிரியர் எமது சமூக முன்னோடிகளில் ஒருவர். அவருடைய பவளவிழாவை மிகச்சிறப்பாக நடத்த வேண்டுமென அவர் ஊரவர்கள் தீர்மானித்தார்கள். அதற்கான ஒரு குழுவை தெரிவுசெய்து செயற்பாடுகளை மேற்கொண்டார்கள். பவள விழா மலர் ஒன்று வெளியிடுவதாக முடிவு செய்யப்பெற்று, அதன் இணையாசிரியர்களாக மு.இராசநாயகம், க.சின்னராசா ஆகிய இருவரைத் தெரிவு செய்தார்கள்.

பவளவிழா மலரில் விழா நாயகனின் வாழ்க்கை வரலாற்றினை எழுதித்தரும் வண்ணம் இணையாசிரியர் இருவரும் என்னிடம் கேட்டுக்கொண்டனர். அவ்வாறு அவர்கள் கேட்டுக்கொண்டமைக்கு அடிப்படையில் ஒரு நியாயம் இருந்தது. தேவரையாளி சைவ வித்தியா சாலையில் (தேவரையாளி இந்துக்கல்லூரி) விழாநாயகன் முருகேசு ஆசிரியரிடம் கல்விகற்ற மாணவன் நான். அதனால் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி ஒரு தனிச்சிறு நூலாக வெளியிடத்தகுந்த மிக நீண்ட சுயசரிதை ஒன்றினை எழுதிக்கொடுத்தேன். அதனை உள்ளடக்கி மலரை உருவாக்கினார்கள். விழாவுக்கான திகதியைத் தீர்மானித்துக் கொண்டு திரும்பவும் என்னிடம் வந்தார்கள். பேராசிரியரையும் டொமினிக்ஜீவாவையும் அந்த விழாவில் வந்து கலந்து கொள்வதற்கான ஏற்பாட்டினைச் செய்து தரும் வண்ணம் கேட்டுக் கொண்டார்கள்.



நான் யாழ் நகரம் சென்று இருவரும் வந்து விழாவில் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகளைச் செய்துகொண்டு வீடு திரும்பினேன். அந்த விழா வட அல்வை க.முருகேசு ஆசிரியர் பிறந்த மண்ணில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா நாயகன் ஆரம்பகாலத்தில் சமூகம் சார்ந்த சபையில் தலைமை தாங்கி வழிநடத்திய போது அச்சபையில் அங்கம் வகித்தவர் ஜீவா. அதனால் பவளவிழாவில் பாராட்டுரை வழங்குவதற்கான இடத்தினை ஜீவாவுக்கு வழங்கியிருந்தார்கள். பேராசிரியரின் தந்தையாரிடத்து கல்வி கற்றவர் முருகேசு ஆசிரியர். அந்தத் தொடர்பு காரணமாகவும் பேராசிரியர் வடமராட்சியைச் சேர்ந்தவர் என்பதனாலும் ஏனைய சிறப்புக்களாலும் அவரை அழைத்து பவளவிழா மலரை வெளியிட்டு வைக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

விழாவுக்குரிய அழைப்பிதழ் அச்சிட்டு விநியோகித்து, விழாவுக்கான சகல ஒழுங்குகளும் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து இருவரும் விழாநடைபெறும் இடம் வந்து சேருவதற்கான ஏற்பாட்டினையும் செய்து முடித்திருந்தோம். டொமினிக்ஜீவா ஒரு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி திருநெல்வேலி சென்று பேராசிரியரை அதில் ஏற்றிக்கொண்டு வந்து சேரவேண்டும் என்பது தான் அந்த ஏற்பாடு.

விழா அன்று காலையில் அங்கிருந்து புறப்பட்டு வருவதற்கான நேரத்தைத் தீர்மானிப்பதற்காக ஜீவா திருநெல்வேலி சென்று பேராசிரியரை சந்தித்தார். அப்பொழுது அந்த விழாவுக்குத் தான் வருவதற்கு விருப்பமில்லையென ஜீவாவிடம் பேராசிரியர் மறுத்துக் கூறினார்.

இந்த இடத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் அவசியமாகின்றது. இந்து ஆலயம் எதுவாக இருந்தாலும் வழிபாட்டுக்குச் சென்றால் முதலில் விக்னேஸ்வரப் பெருமானை வழிபடவேண்டும் என்பதுதான் இந்துமதம் காட்டும் நெறிமுறை. முழுமுதற்கடவுளான சிவன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்குச் சென்றாலும் அதுதான் நடைமுறை. விக்னேஸ்வரப் பெருமானை வழிபாடுசெய்து தொடங்கும் காரியங்கள் அனைத்தும் எதிர் கொள்ளும் விக்கினங்களில் இருந்து பாதுகாத்து அப்பெருமான் அருள்புரிவாரென இந்துமதம் கூறுகின்றது. ஆனால், விக்கினேஸ்வரரை வழிபாடு செய்யாது ஆரம்பிக்கும் காரியங்களுக்கு விக்னேஸ்வரப் பெருமான் தானே முன்வந்து விக்கினங்களை விளைவிப்பாரோ என்னமோ!

அந்த விக்னேஸ்வரக் கடவுளாகத் தங்களை நினைத்துக் கொண்டு சில பகுதிகளில் வாழ்ந்து வரும் சிலரைப் போய்த் தரிசித்து, தேங்காய் உடைத்து வழிபாடு செய்து, அவர்களை முன்னே வைத்து காரியம் ஆற்றத் தவறினால், அந்த விக்கினேஸ்வரன்கள் விக்கினங்களைக் கொடுப்பார்கள். இந்தப் பெரிய உண்மையை பவளவிழாக் குழுவினர் உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். அந்த தவறு காரணமாகப் பேராசிரியரிடம் சென்று அந்த விழாவில் குழப்பம் நடைபெறும், அடிதடி எல்லாம் நடக்கும் என யாரோ வத்திவைத்துவிட்டார்கள்.

அதனால் பேராசிரியர் விழாவுக்கு வருவதற்கு மறுப்புத் தெரிவித்தார். அப்பொழுது ஜீவா பேராசிரியரிடம் நிதானமாக "நீங்கள் இப்ப முருகேசு ஆசிரியருக்காக விழாவுக்குச் செல்லவேண்டி இருக்கிறதா? அல்லது தெணியானுக்காகச் செல்ல வேண்டியிருக்கிறதா?'' என வினவினார். உடனே பேராசிரியர், "தெணி அழைப்பை நான் நிராகரிக்க இயலாது. சரி போவோம்'' எனப்புறப்பட்டு வந்துவிட்டார். விழா சிறப்பாக நடந்து முடிந்தது. மலரில் இடம்பெற்றுள்ள விழாநாயகனின் வரலாறு, சாதியம் பற்றி இதுவரை வெளிவந்துள்ள கட்டுரைகளுள் மிக முக்கியமான ஒன்றெனப் பேராசிரியர் குறிப்பிட்டார். உண்மையில் எனது தொடர்பும் அழைப்பும் இல்லாதிருந்தால் பேராசி ரியர் அந்தப் பவளவிழாவுக்கு வருகை தந்திருக்கமாட்டா ரென்பது அந்த விழா ஏற்பாட்டாளர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பேராசிரியரை மாதத்தில் ஒரு தடைவயாவது தேடிச் சென்று சந்தித்து வந்தேன். யாழ்ப்பாணத்தில் இலக்கிய விழாக்கள் நடைபெறும் சமயங்களில் நேரில் கண்டு கொள்வோம். அப்படியான சந்திப்புக்கள் சுகம் விசாரிப்புடன் முடிந்துவிடும். யாழ். சென்று அவரைச் சந்திக்க வேண்டும் என்னும் விருப்பம் மனதில் இருந்து வந்துள்ள போதிலும் சில காலத்தில் அதற்கென வாய்ப்பு இல்லாது போகும். சில தருணம் பேராசிரியர் வீட்டில் இல்லாது வெளியே போயிருப்பார். அப்பொழுது அவரைச் சந்திப்பதற்கு இயலாது ஏமாற்றத்துடன் வீடு திரும்பி வர வேண்டியும் நேர்ந்திருக்கின்றது.

நாங்கள் இருவரும் சந்தித்து அமைதியாக இருந்து பேசிக்கொள்ளும் சூழ்நிலைகள் குழம்பிப்போய் இருந்த தருணத்தில், ஒருநாள் வந்து தன்னுடன் தங்கி நிற்குமாறு ஒரு தகவலை பேராசிரியர் எனக்கு அனுப்பி இருந்தார். தகவல் கிடைத்த அந்த வாரம் சனிக்கிழமை காலையில் மனைவி, பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொண்டு சைக்கிள் வண்டியில் கிளம்பி திருநெல்வேலிக்குச் சென்றேன். பேராசிரியருடன் சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்து விட்டு, மல்லிகைக் காரியாலயம் சென்று ஜீவாவை சந்தித்து வருவதாகப் புறப்பட்டேன். பல்கலைக்கழக மாணவர்களும் வெளியாரும் பகல் நேரம் அடிக்கடி வந்து பேசிக்கொண்டு சென்றார்கள். அதனால் தான் நாங்கள் பகலில் பேசமுடியாதென்பதால் போய் தாமதிக்காது திரும்பி வரும் வண்ணம் கூறி அனுப்பினார்.



மல்லிகை காரியாலயத்தில் பேராசிரியர் நந்தியின் உறவினர் வங்கி முகாமையாளராக இருந்த பாலசுந்தரம் அங்கிருந்தார். அவர் மல்லிகை இதழ்கள் ஒவ்வொன்றையும் தவறாமல் படிக்கும் வாசகர் மாத்திரமன்றி எல்லா இதழ்களையும் ஒழுங்காகச் சேர்த்து வைத்திருந்த ஒருவர். மல்லிகை எழுத்தாளனாகிய என்னை நன்றாக அவருக்குத் தெரியும். எனது எழுத்துக் களை விரும்பிப் படிக்கின்றவர். நேரிற் சந்திக்கும் போது தான் வாசித் தவை பற்றி ஒளிவுமறைவில்லாது என்னோடு பேசுகின்றவர். என்மீது அன்பும் அபிமானமும் உள்ளவர். என்னைக் கண்டதும் அவருக்கு பெரிய புளுகம். "தெணியான் இன்றைக்குச் ஜீவாவுடன் வீட்டுக்கு வரவேண்டும்" என அழைப்பு விடுத்தார். "நான் பேராசிரியருடன் தங்கி நிற்பதற்காக வந்திருக்கிறேன்'' என மெல்லச் சறுக்கப்பார்த்தேன். அவர் என்னை விட்டு விடுவதாக இல்லை."இன்று விசேடமாக ஒடியற்கூழ் காய்ச்சி இருக்கிறோம். போய் பேராசிரியருக்குச் சொல்லிவிட்டு, ஜீவாவுடன் வாருங்கோ'' விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டார். அவருடைய வேண்டுகோளைத் தட்டிக் கழிக்க இயலவில்லை. பேராசிரியரிடம் திரும்பிப் போனேன். பேராசிரியர் "தெணி, மத்தியானச் சாப்பாட்டுக்கு இங்கே வந்து விடவேணும்'' எனக் கூறி அனுப்பி வைத்தார்.

ஜீவாவும் நானும் எங்கள் சைக்கிள் வண்டிகளில் நல்லூரில் கோயில் வீதியில் இருந்த பாலசுந்தரம் வீடுபோய்ச் சேருகின்றோம். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த பறங்கி இனத்தவர் ஒருவரும் அங்கிருந்தார். சாப்பாட்டு மேசையில் நால்வரும் சுற்றியிருந்து கூழ் குடித்தோம்.

கூழ்குடித்த வயிறு சற்று நேரத்தில் பாரம் குறைய ஆரம்பித்தது. நான் அங்கிருந்து புறப்படுவதற்கு தயாரானேன். மதிய உணவையும் உண்டு முடித்துக் கொண்டு செல்லுமாறு பாலசுந்தரம் கடுமையாக வற்புறுத்தினார். 'பேராசிரியர் காத்திருப்பார்' என்ற காரணத்தைக் கூறி உணவைத் தவிர்த்து விட்டுப் புறப்பட்டேன். பேராசிரியர் வீடு வந்து நான் சேரும் போது மதிய உணவுக்கான நேரம் கடந்துபோய்விட்டது. பேராசிரியர் தானும்

உணவு உண்ணாது பசியோடு எனக்காகக் காத்திருந்தார். இருவரும் ஒன்றாக மதிய உணவை முடித்துக் கொண்டோம். மாலையில் தேநீர் தந்தார். அவருக்கு உதவியாக இடையிடையே வந்து நிற்கும் மருமகளை இருட்டுக் கட்டுவதற்கு முன்னர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். மின் சார விநியோகம் துண்டிக்கப்படிருந்த காலமது, மாலைநேரம் அரிக்கன் லாம்பை எடுத்து சிமினியைப் பழைய துணியினால் துடைத்துச் சுத்தம் செய்து எண்ணெய் விட்டு விளக்கை ஏற்றி வைத்துவிட்டு என்னோடு முன்னர் போலப் பேசிக் கொண்டிருந்தார்

பின்னர் இரவுச்சாப்பாடு, எனக்கு இடியப்பமும் கறியும், தனக்கு இரண்டு துண்டு பாண். இருவரும் உரையாடிக்கொண்டே சாப்பிடத் தொடங்கினோம். இரவு நேரங்களில் வயிறு நிறைய அதிக உணவு உண்ணும் பழக்கமில்லாதவன் நான். ஆனால் அன்று நான் சாப்பிட்டுக் கொண்டிருக்க பெற்றதாய்போல வற்புறுத்தி வற்புறுத்தி ஒவ்வொரு இடியப்பமாக எனது கோப்பையில் எடுத்தெடுத்து வைத்து பேராசிரியர் உண்ணும்படி செய்தார். நான் அந்தச் சமயத்தில் உண்மையில் உள்ளம் நெகிழ்ந்து போனேன். 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து....' திருவாசகம் என் அடி மனதில் மெல்ல சுருதி கூட்டிக் கொண்டிருந்தது.

இரவு உணவு உண்டு முடிந்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னர் தனது கட்டிலுக்கருகே எனக்கும் ஒரு கட்டில் போட்டு இருவரும் படுத்துக்கொண்டோம்.அப்பொழுதுதான் பேராசிரியர் எதற்காக என்னை அழைத்து தங்க வைத்துக்கொண்டார் என்பதனை மிகத்தெளிவாக நான் உணர்ந்து கொண்டேன். தனிமை எவ்வளவு கொடுமையானது என்னும் உண்மையையும் விளங்கிக் கொண்டேன்.

பேராசிரியர் பல ஆண்டுகளாக என்னோடு பழகி வந்திருப்பினும் தனிப்பட்ட மனச்சுமைகளைப் பேசிக்கொண்டது மிகக் குறைவு. அன்று பேராசிரியர் தனது மனதில் இருந்த பாரத்தை எடுத்துச் சொல்லச் சொல்ல, நான் கேட்டுக்கொண்டு படுத்துக்கிடந்தேன். அவருடைய மன ஆறுதலுக்காகச் சிலவற்றை இடையிடையே நான் சொல்லிக் கொண்டிருந்தேன். நான் எப்பொழுது உறங்கினேன், பேராசிரியர் எப்பொழுது உறங்கினார் என்பது எனக்குத் தெரியாது.

மறுநாள் காலை விடிந்தது. அன்று காலையில் பேராசிரியர் சொன்னார் "நான் மனந்திறந்து யாரோ ஒருவருக்குச் சொல்ல வேண்டியிருந்தது. அதை எல்லாம் சொல்லுவதற்குப் பொருத்தமான ஆள் நீங்கள்தான் தெணி. இப்போது மனம் லேசாக இருக்கிறது" என.

## 19

# அறிவோர் கூடலில் பேராசிரியர்

பேராசிரியர் மணிவிழா பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறேன். பேராசிரியர் பிறந்த வடமராட்சி மண்ணில் அவருக்கு மணிவிழா நிகழ்வொன்று இடம்பெற்றது.

அக்கால கட்டத்தில் பருத்தித்துறையில் வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தன் இல்லத்தில் 'அறிவோர் கூடல்' என்னும் ஒரு நிகழ்வு ஒழுங்காக சிறப்பாக நடைபெற்று வந்தது. வடமராட்சியில் வாழ்ந்து கொண்டிருந்த கலை, இலக்கியவாதிகளும், ஆர்வலர்களும் கொள்கை வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு மாதத்தில் ஒரு தடவை பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை ஒன்றுகூடி கலை, இலக்கியம் பற்றி பேசிக் கலந்துரையாடி, தேநீர் அருந்தி மகிழ்ந்த கூடல் அது, 'அறிவோர் கூடல்' என அந்தச் சந்திப்புக்குப் பெயர் சூட்டப் பெற்றிருந்த போதிலும் வெளியில் இருந்தவர்கள் அதனை 'அறிந்தோர் கூடல்' அல்லது 'அறிஞர்கள் கூடல்' எனவே சொல்லிக் கொண்டார்கள். அவ்வாறு மதித்தார்கள். அந்தக் கூடலை முன்மாதிரியாகக் கொண்டு பின்னர் சில கூடல்கள் இடம்பெற்று வந்தபோதும், நான் அறிந்த மட்டில் அதுபோன்ற சிறப்பான ஒரு கூடல் எங்குமே இதுவரை நடைபெற்றுவரவில்லை. இந்தக்கூடலின் மூலமூர்த்தியாக இருந்து செயற்பட்டவர் முருகானந்தன். கலை, இலக்கிய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்புடன் அந்தக் கூடலைச் சில நண்பர்களுடன் இணைந்து கட்டமைத்து, செயற்படுத்தி வந்ததில் பொருளாதார ரீதியான இழப்பு அவருக்கு அதிகம்.

அந்த அறிவோர் கூடலில் வழமையாக இடம்பெற்று வரும் நிகழ்வுகளில் ஒன்று கௌரவிக்க வேண்டியவர்களை உரிய நேரத்தில் கௌரவிப்பது. பேராசிரியரின் மணிவிழாக்காலமாக இருந்தமையினால் அவரை அழைத்துக் கௌரவிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள்.

பேராசிரியர் அப்பொழுது யாழ்ப்பாணம், திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியிலுள்ள வீட்டில் வசித்து வந்தார். நான் யாழ்ப்பாணம்சென்று இடையிடையே அவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டு வருவது அக்காலத்தில் பலருக்கும் தெரியும். அதனால், பேராசிரியரைச் சந்தித்து மணிவிழாச் சந்திப்புக்கான ஏற்பாட்டினைச் செய்துகொண்டு வரும் வண்ணம் என்னிடம் கூறினார்கள்.

நான் யாழ்ப்பாணம் சென்று பேராசிரியரைச் சந்தித்தேன். பேராசிரியர் ஏற்றுக்கொண்ட பல்வேறு 'சமூகச் சோலிகள்' அக்காலத்தில் அவருக்கு இருந்து வந்தது நான் அறிவேன். பேராசிரியர் உடன்பட்டு அறிவோர் கூடலுக்கு வருவாரோ என்பதிலும் ஓர் ஐயப்பாடு உள்ளத்தில் இருக்கவே செய்தது. ஆயினும் அவர் அறிவோர் கூடலை, நான் நேரிற் சென்றுவிடுத்த அழைப்பினை தட்டிக்கழிக்க மாட்டார் என்னும் நம்பிக்கை எனக்கு மனதில் இருந்து வந்தது.

பேராசிரியர் அறிவோர் கூடல் சந்திப்புகள் பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருக்கின்றார். நான் அவருடன் பேசும் சமயங்களில் பல தடவைகள் அவை பற்றி அவருக்கு எடுத்துச் சொல்லியும் இருக்கின்றேன். பேராசிரியருக்கு அழைப்பு விடுத்தவேளை, ஆரம்பத்தில் அவர் தயக்கம் காட்டினார். ''மணிவிழாவின் பெயரால் ஆடம்பரமான ஒரு கொண்டாட்டம் நடத்தும் எண்ணமில்லை, அறிவோர் கூடலில் வழமையாக வழங்கப்பெறும் தேநீருடன், உங்களுடைய சொற்பொழிவொன்றைக் கேட்பதற்கு விரும்புகின்றோம்'' என நான் எடுத்துக் கூறினேன். அதன் பின்னர் பேராசிரியர் அறிவோர் கூடல் நிகழ்வில் கலந்து கொள்வதற்கு உடன்பட்டார்.

அதன்பிறகு இன்னொரு கேள்வியை நான் அவரிடத்தில் கேட்டேன். ''வழமையாகக் கூடலுக்கு வருகின்றவர்கள் எல்லோருக்கும் நாங்கள் அழைப்பு அனுப்புவோம். அவர்களைவிட வேறுயாரையாவது அங்கு அழைக்க வேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா?'' என்பது தான் அந்த வினா.பேராசிரியர் தாமதமின்றி, உடனே பதில் சொன்னார். ''நான் யாரை அழைக்கிறது தெணி! ஒரே ஒருவரைத் தவறாது கூப்பிட வேண்டும். தும்பளையில் வாழும் சிவப்பிரகாசம் ஸேர்'' என்றார்.

தும்பளை சிவப்பிரகாசம் ஸேரை எனக்கு நன்றாகத் தெரியும். பேராசிரியர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் மாணவனாகக் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஸேர் அவருக்குப் படிப்பித்த குரு. பிற்காலத்தில் நான் அக்கல்லூரியில் எச்.எஸ்.ஸி. வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் சிவப்பிரகாசம் ஸேர் அங்கு அதிபராக இருந்தார்.



அறிவோர் கூடலில் பேராசிரியரின் மணிவிழாக் கௌரவிப்பு நிகழ்வுக்கு, யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு அவரை அழைத்து வரவேண்டி இருந்தது. மணிவிழாக்காணும் பேராசிரியரை அவருக்குக் கொடுக்க வேண்டிய கௌரவத்துடன் அழைத்துவர வேண்டுமென எண்ணினோம். வைத்தியகலாநிதி முருகானந்தனிடம் அக்காலத்தில் ஒரு கார் இருந்தது. அந்த காருக்கு 'இலக்கிய வாகனம்' என நண்பர்கள் பெயர் சூட்டி இருந்தார்கள். யாழ் நகரில் நிகழும் முக்கியமான இலக்கியக் கூட்டங்களுக்கு, எங்களை எல்லாம் ஏற்றிக்கொண்டு முருகானந்தன் புறப்பட்டு வருவார்.

முருகானந்தனின் 'இலக்கிய வாகனத்தில்' முருகானந்தனுடன் நானும் சென்று கூடலுக்குப் பேராசிரியரை அழைத்து வருவதெனத் தீர்மானித்துக் கொண்டோம். கூடல் ஒரு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளிற்கூடுவது தான் வழக்கம்.

அன்றைய கூடலுக்கு 'இலக்கிய வாகனத்தில்'முருகானந்தனும் நானும் சென்று பேராசிரியரை அழைத்து வந்தோம். முருகானந்தனின் இல்லத்தில் விறாந்தையிலேயே இந்தக் கூடல் நிகழ்வுகள் வழமையாக நடைபெற்று வந்தன. அந்த வீட்டு விறாந்தை மிக நீளமானது விறாந்தை என்பதால் அதன் அமைப்புக்கேற்ப, அகலம் பெரிதாக இல்லாதது. நீண்டு கிடந்த விறாந்தையில் கிழக்கிலும் மேற்கிலும் வரிசையாகக் கதிரைகள் அடுக்கபட்டிருக்கும். குறுக்காவுள்ள தெற்குப் பக்கத்தில் சுவரோடு சில கதிரைகளைப் போட்டு வைத்திருப்பார்கள். அந்தக் கதிரைகளில் ஒன்றில் உரைஞர் அமர்ந்திருப்பது வழக்கம். விறாந்தைக்குள்ளே நுழைவதற்கான வாசல் வடக்குப் பக்கத்தில் இருந்தது.விறாந்தை நடுவே ஒரு ரீப்போ வைக்கப் பெற்றிருக்கும்.

காரை விட்டு கீழே இறங்கி, பேராசிரியரை முன்னேவிட்டு நாங்கள் இருவரும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றோம். அந்தச் சபைக்குள்ளே நுழைந்த பேராசிரியர் முதலில் கிழக்குப் பக்கமாகப் போடப்பட்டிருந்த வசிசையில் கதிரையில் அமர்ந்திருந்த சிவப்பிரகாசம் ஸேரிடம் நேரே சென்று தனது குருவின் பாதங்களில் விழுந்து வணங்கினார்.

அந்தச் சபை ஒரு தடவை சிலிர்த்துக் கொண்டது. நான் உள்ளம் நெகிழ்ந்து போனேன். பேராசிரியர் தனது ஆசிரியருக்கு அழைப்பு விடுக்கும் வண்ணம் கேட்டுக்கொண்டதன் உள்நோக்கம் அப்பொழுதுதான்

என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. அன்று நடைபெற்ற அந்தக் கூடலின் உச்ச நிகழ்வு அதுவென்றே கூறவேண்டும்.

நான் ஆசிரியத் தொழிலை மிகவும் விரும்பியே அந்தப் பணியை ஏற்றுச் செய்து வந்தேன். இளம்வயதில் ஆசிரியரான காரணத்தால் காலப்போக்கில் இயல்பாக எனக்கொரு சலிப்பு வர ஆரம்பித்தது. சலிப் பாக இருப்பதனால் ஆசிரியத் தொழிலைக் கைவிட்டு இன்னொரு மாற்றுத் தொழில் தேடிக்கொள்ள இயலாது. அவ்வாறு தேடிக்கொள்ளத் தகுந்த வயதும் எனக்கில்லை. கற்பித்தல் துறையில் சிறிய மாற்றம் ஒன்றினைச் செய்து கொண்டால் வசதியாக இருக்குமெனக் கருதினேன்.

அக்கால கட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்களை நியமனம் செய்கையில் கல்வி அதிகாரிகள் பேரளவில் ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தி, தாங்கள் விரும்பிய ஒருவரை நியமனம் செய்வார்கள். வடமராட்சிப் பிரதேசம் இரண்டு தனித் தனிக் கல்வி வலயங்களாக உருவாக்கப்படாத காலமது. அப்பொழுது வடமராட்சியில் இருந்த கல்வி அதிகாரி ஒரு தினம் என்னைச் சந்தித்தவேளை “தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகருக்குரிய இடமொன்று இருக்கிறது. அந்த நியமனத்தை உங்களுக்குத் தந்தால் ஏற்றுக்கொள்ளுவியளா?” எனக் கேட்டார். எனக்கு அப்போது உண்டான மகிழ்ச்சியைச் சொல்லவா வேண்டும்!

உடனே எனது சம்மதத்தை தெரிவித்தேன். அந்த அளவில் நிறுத்திக் கொள்ளாது இன்னொரு கேள்வியை நான் கேட்டு வைத்தேன். எந்தப் பகுதியில் கடமை ஆற்ற வேண்டும் என்பதுதான் அந்தக் கேள்வி. கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய மூன்று பகுதிக ளுக்குள் எந்தப் பகுதிக்குரிய இடம் காலியாக இருக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்பினேன். ‘மற்ற இரண்டு பகுதிகளுக்கும் ஆட்கள் இருக்கிறார்கள். வடமராட்சி கிழக்கு வேண்டும்’ என்றார் அவர். வடமராட்சி கிழக்கு கஷ்டப் பிரதேசம். அப்படியான ஓர் இடத்துக்குச் சென்று கஷ்டப்படுவதற்கு நான் விரும்பவில்லை. அந்த நியமனம் எனக்கு வேண்டியதில்லையென மறுத்துக் கூறிவிட்டேன்.

பேராசிரியரிடம் சென்ற சமயம் நடந்தவற்றை எடுத்துக் கூறினேன். “அது சரியானதுதான். பிறகு பார்ப்போம்” எனப் பேராசிரியர் அப்பொழுது கூறினார்.

பின்னர் சிலகாலம் கழித்து யாழ்ப்பாண மாவட்டம் முழுவதற்கும் பொறுப்பாக இருந்து வந்த கல்விப்பணியாளரைச் சந்தித்த ஒரு சமயம், எனது பிரச்சினையைப் பேராசிரியர் அவருக்கு எடுத்துச் சொன்னார். அந்தக் கல்விப்பணிப்பாளருக்கு என்னை நன்றாகத் தெரியும். பேராசிரியர் கூறியதைத் தனது கவனத்திற்கு எடுத்துக்கொண்டு ஆவன செய்வதாகக் கூறினார். ஆனால், எனது சிரமத்தினைக் கவனத்திற்கொண்டு பேராசிரியர் எடுத்த முயற்சி அப்பொழுது வெற்றி பெறவில்லை. அதற்கு அடிப் படையில் சில காரணங்கள் இருந்தன என்பதை அவர் அறிவார். அதனை நானும் அறிவேன். நான் இதனை இங்கு குறிப்பிடுவதன் நோக்கம், பேராசிரியர் என்மீது எவ்வளவு அக்கறையுடன் இருந்தார் என்பதைச் சொல்வதே!



சைவப் புலவர் சி. வல்லிபுரம் அவர்கள் எனது ஆசிரியர். அவரது ஆக்கங்கள் பல கையெழுத்துப் பிரதியாக இருந்து வந்தன. பெரும்பாலானவை கவிதைகள். அவை பக்திப்பாடல்களாகவே அமைந் திருந்தன. புலவர் அவர்கள் காலமான சமயம், அவற்றைப் படித்துத் தேர்ந்தெடுத்து அவைகளை ஒரு நூலாக வெளியீடு செய்வதற்கு அவர் குடும்பத்தவர்கள் விரும்பினார்கள். அந்தப் பொறுப்பினைப் புலவரின் மாணவனாகிய என்னிடத்தில் ஒப்படைத்தார்கள்.

அவைகளை நான் மூன்று பகுதிகளாகப் பகுத்து, முதற் பகுதியில் அனேக பாடல்களும், இரண்டாவது பகுதியில் ஒருசில கட்டுரைகளும், மூன்றாவது பகுதியில் ஒரு சிறுகதையுமாகத் தொகுத்தேன். அத்தொகு திக்குப் ‘புலவர் தேறல்’ எனப் பெயர் இட்டு, அச்சில் பதிவு செய்து முழுமை யான ஒரு நூலாக உருவாக்கும் பணிகளையும் அவர் குடும்பத்தார் விருப்பம்போலப் பூரணப்படுத்தினேன்.

அந்தியேஷ்டி தினத்தன்று நூல் வெளியீட்டினை விசேடமான ஒரு நிகழ்வாக ஏற்பாடு செய்வதற்கு எண்ணினார்கள். அந்தப் பொறுப் பினையும் என்னிடத்திலேயே ஒப்படைத்துவிட்டார்கள்.

நான் பேராசிரியர் அவர்களையும், கலாநிதி நா. சுப்பிரமணியம் அவர்களையும் வெளியீட்டு நிகழ்வுக்கு அழைத்து வருவதற்கு முடிவு செய்தேன். அவர்கள் இருவரையும் நேரில் சந்தித்து சம்மதத்தைப் பெற்றுக் கொண்டேன். நிகழ்வுக்கு முன்னர் நூற் பிரதி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு பேராசிரியரைச் சென்று சந்தித்தேன். ஓவியர் ரமணியின் அட்டைப்பட ஓவியத்துடன் வெளிவந்திருந்த அந்த நூலைப் பேராசிரியர் கையில் வாங்கி அட்டையைப் பார்த்தார். “என்ன தெணி... தேறல் என்று பெயர் சூட்டி இருக்கிறீர்கள்?” என வினவினார்.

பேராசிரியரின் வினாவைச் சட்டென்று விளங்கிக் கொண்டு, ''தேறல் என்றால் தேன் மாத்திரமல்ல கள் என்ற கருத்தும் இருக்கிறது'' என்றேன்.

''யாரும் விகற்பமாக எண்ணக் கூடாது என்பதால் தான் சொன்னேன்'' எனக் கூறினார்.

''சாதியக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றவர்கள் பற்றி நாங்கள் கவலைப்படவேண்டியதில்லை'' எனத் தெரிவித்தேன்.

குறித்த தினத்தில் சைவப்புலவர் இல்லத்தில் மிக அடக்கமாக, சிறப்பாக நூல் வெளியீட்டு நிகழ்வு இடம்பெற்றது. பேராசிரியரும், கலாநிதியும் வருகை தந்து உரையாற்றினார்கள்.

பேராசிரியர் தனது காரிலும், கலாநிதி தனது மோட்டார் சயிக்கிளிலும் வந்து போனார்கள். எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, வந்து போன இருவரும் என்னோடு மிக நெருக்கமான உறவுடன் வாழ்ந்து வந்தார்கள் என்பதனை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன்.

## 20

## பல்கலைகழகத்துள் காணப்பட்ட எதிர்ப்புகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதினெட்டாண்டு காலம் (1978-1996) பேராசிரியர் தமது பணிகளைச் செய்து வந்திருக்கின்றார். அவரிடத்தில் கல்வி கற்ற மாணவர்கள் அவரை விதந்து போற்றுவதுடன் அதனைத் தமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றார்கள். அதே சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பேராசிரியரின் தகுதி கண்டு அவருக்கு வழங்க வேண்டிய பதவிகளையும் கௌரவத்தையும் வழங்கத் தவறிவிட்டதென்னும் குறைபாடு நடுநிலை நோக்காளர் பலர் உள்ளங் களில் இருந்த வருகின்றது.

பேராசிரியர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சில ஆண்டு காலம் தங்கியிருந்தார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பணியில் இருந்து ஓய்வு பெற்று கொழும்பு வெள்ளவத்தையில் வாழ்ந்து கொண் டிருந்த தனது குடும்பத்தவர்களுடன் (1996) போய்ச் சேர்ந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்(யாழ்.வளாகம்) உருவாக்கப்பெற்ற காலத்தில் பேராசிரியர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ பிரிவு) அவரைக் கண்டு கொள்ளாமல் ஓரங்கட்டியது என்னும் குற்றச்சாட்டு இன்றும் மௌனித்துக் கிடக்கின்றது. அரசோடு இணைந்து செயற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியே (மாஸ்கோ பிரிவு) தந்திரமாக அந்தத் துரோகத்தைச் செய்தது. கட்சி சார்ந்த தமிழ்ப் பிரமுகர்கள் செய்த அந்தத் தவறினை, அதே கட்சியைச் சார்ந்த சிலர் பல ஆண்டுகளுக்குப் பின்னர் மனந்நொந்து என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்.

இவைகள் யாவும் பல்கலைக்கழகம் சார்ந்த விவகாரங்கள். இவை களை நான் இங்கு பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. ஆனால் இத்தனை ஆண்டுகள் மிக நெருக்கமாக நட்புரிமையுடன் பழகி வந்திருக்கும் எனக்கு ஒரு நாள் அல்லது ஒரு விவகாரம் அவர் எனக்கு எடுத்துச் சொன்ன

தில்லை. அத்தகைய பெருந்தன்மையும் கண்ணியமும் உள்ள ஒரு பெரிய மனிதனாகவே அவர் என்னோடு உறவாடினார்.சில சந்தர்ப்பங்களில் பேராசிரியர் முகம் கொடுக்க வேண்டி நேர்ந்த சில சம்பவங்கள் வெளியில் மெல்லக் கசிந்து எனது செவிகளுக்கும் வந்தள்ளன. அந்தச் சமயங்களில் அவற்றைப் பற்றிப் பேராசிரியர் எனக்குச் சொல்லுவாரென நான் எதிர் பார்த்ததுண்டு. ஆனால் அவை பற்றி அவர் வாய் திறப்பதே இல்லை. அவர் தானகச் சொல்லாத விவகாரங்களைக் கிண்டி கிளறி நான் கேட்பதுமில்லை. இத்தகைய நடைமுறை நாகரிகத்தினை இருவரும் பின்பற்றியே பழகி வந்தோம்.

பேராசிரியரை வல்வெட்டித்துதுறையில் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த நான் அவர் திருநெல்வேலியில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இடையிடையே கண்டு பேசிக் கொண்டு வந்தேன். அவர் கொழும்பு போய்ச்சேர்ந்த பின்னர் அதுவும்இயலாது போயிற்று. தொலை பேசியில் தொடர்பு கொண்டு பேசுவதும் சிரமமாக இருந்தது. கொழும் புக்கு வெளியே உள்ள பல்கலைக்கழகங்களுக்கு வருகை நிலைப்பேராசி ரியராகப் போய் வந்து கொண்டிருந்தார். அவர் எங்கே எப்போது என்ன கடமைகளுடன் இருப்பார் என்று அறியாமல் தொலைபேசியில் தொல்லை கொடுப்பதாகப் பேசிக் கொண்டிருப்பதற்கும் எனக்கு முடியவில்லை.

பேராசிரியரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பற்றிப் முன்னர் நான் குறிப்பிட்டதில் ஒரு நோக்கமிருக்கின்றது.யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைக் குற்றஞ் சுமத்துவது அல்ல எனது நோக்கம். அந்த விவகாரங் களுக்கும் எனக்கும் ஒரு சிறிய தொடர்பு தானும் இல்லை.ஆனால் பேராசிரியர் யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய பின்னரும் அவரை எத்தகைய ஒரு வக்கிரப் பார்வையுடன் நோக்கினார்கள் என்ப தனைத் தெளிவுபடுத்துவதற்கான ஒரு சம்பவத்தைச் சொல்லியாக வேண்டும்.

யாழ்ப்பாண மண்ணில் பல்கலைக்கழகம் உருவான பின்னர் அதன் விளைவாக இந்த மண்ணுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் மிகப்பல. இந்த நாட்டில் இலவசக் கல்வி என்னும் வரப்பிரசாதம் அனைவருக்கும் வழங்கப் பெற்றிருப்பினும் உயர்கல்வியைப் பெறுவதில் ஏழைப் பிள்ளை கள் சில சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி இருந்துவந்தது. அந்தக் கஷ்ரங்களில் இருந்து யாழ்ப்பாணத்து மாணவர்களை யாழ்.பல்கலைக் கழகம் பாதுகாத்து வருகின்றது. அத்தோடு வழமையாக இருந்து வரும் துறைகளுடன் புதிய கல்வித்துறைகள் சிலவற்றையும் இங்கு தொடங்கியது.



அவ்வாறு ஆரம்பிக்கப்பெற்ற நுண்கலைத்துறையினுள் நாடகமும் அரங்கியலும் என்னும் பகுதியினை உள்வாங்கிக் கொண்டமைக்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் பேராசிரியர். இன்று வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்வியியற் கல்லூரிகளிலும் அந்தத்துறை கற்பிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தியிருக்கும் மிக நல்ல ஒரு திட்டம் வெளிவாரி பட்டப்படிப்பு அலகினைத் தோற்றுவித் தமை எனலாம்.

இவ்வாறே ஆங்கில பட்டப்படிப்புச் சார்ந்த செயற்பாடு ஒன்றினையும் யாழ்.பல்கலைக்கழகம் முன்னெடுத்து வருகின்றது என்பதனைக் கவனத் தில் கொள்ள வேண்டும்.

ஆசிரிய கலாசாலைகளில் ஆங்கில மொழிப்பயிற்சி பெற்றிருந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களை விசேடமாக உள்வாங்கி, ஆங்கில மொழிப் பட்டதாரிகளாக உருவாக்குவதே அத்திட்டம். அத்திட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டதாரிக்கல்வி பெற்ற சிலரை நான் அறிந்திருந்தேன். யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டி ருக்கும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் ஒரு தினம் மாலை வேளை என்னைத் தேடிக்கொண்டு வந்தார். நான் அப்பொழுது ஓய்வாக வீட்டில் இருந்தேன். வந்தவர் தனது சட்டைப் பொக்கட்டில் இருந்து ஒரு காகிதத்தை எடுத்து விரித்து எனக்குத் தந்து, "இது எங்களுடைய பேராசிரியர் விரிவுரை வகுப்பில் எல்லோருக்கும் தந்நதவர். இதில் இருக்கும் பிழைகளைத் திருத்திக் கொண்டு நாளைக்குக் கொண்டு வரச்சொல்லியிருக்கிறார். இதில் என்ன பிழை இருக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை நீங்கள் இதை ஒருக்கால் பாருங்கோ....!" என்றார்.

நான் நீண்டகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்தவன்.பிழைகள் மலிந்த ஒரு பந்தியைக் கொடுத்து, மாணவர்களைத் திருத்தும்படி செய்து, பின்னர் பார்வையிட்டுத் திருத்திக் கொடுப்பவன். அந்த அனுபவத்துடன் அந்த ஆசிரியர் தந்த காகிதத்தைக் கையில் வாங்கி, அதில் இடம்பெற்றுள்ள பந்தியைக் கவனமாகப் படித்தேன்.

நான் திகைத்துப்போனேன். ஏனெனில் அந்தப் பந்தி பேராசிரியர் சிவத்தம்பியின் கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்டிருந்தது. நான் அதனை வெளியில் காட்டிக் கொள்ளாது திரும்பத் திரும்ப படித்துப் பாாத்தேன். அந்தப் பந்தியில் எந்தவொரு வழுவும் இருப்பதாக எனக்கு தெரிய வில்லை. ஒரு பந்தியில் இரண்டு வகையான வழுக்கள்இடம்பெறலாம்.

ஒன்று மொழி வழு. இரண்டாவது பொருள் வழு. பொருள் வழு பற்றி இன்னொருவர் பெரிதாக குற்றம் சுமத்தவியலாது. அது எழுதியவரின் கருத்து நிலை. எதுவாயினும் கொடுக்கப்பெற்ற பந்தியில் இருக்கும் வழு என்னவாக இருக்குமெனத் துருவித்துருவிப் பார்த்தேன். எந்த ஒரு வழுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எனவே, அந்த ஆசிரியரைப் பார்த்துக் கேட்டேன் ''மொழி வழுவா? அல்லது பொருள் வழுவானது? இந்தப் பந்தியில் இருப்பதாக உங்களுடைய பேராசிரியர் சொன்னார்'' என.

''அப்படி ஒன்றும் சொல்லவில்லை. இதிலுள்ள பிழைகளைத் திருத்திக் கொண்டுவாருங்கள், என்று தான் சொன்னார்'' என்றார் அந்த ஆசிரியர். அந்த ஆசிரியரிடம் இது இன்னார் எழுதிய எழுத்திலுள்ள சிறிய ஒரு பந்தி என்னும் உண்ண்மையைக் கூறாமல் ''எனக்கு இதில் ஒரு பிழையும் இருப்பதாகத் தெரியவில்லை'' எனக்கூறி திருப்பிக் கொடுத்து விட்டேன்.

இந்த சம்பவத்தைப் பேராசிரியரிடம் என்றுமே நான் எடுத்துச் சொல்லவில்லை. அந்த வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் யாராவது இந்தத் தகவலை பேராசிரியரிடம் எடுத்துச் சொன்னார்களோ என்னவோ அதுவும் நான் அறியமாட்டேன். போராசிரியர் சிவத்தம்பியைத் தவிர இன்னொருவருக்கு இவ்வாறு நடந்திருக்க முடியாது.

இத்தகைய குரோதமான ஒரு பார்வை யாழ். பல்கலைக்கழகத்துக்குள்ளே போராசிரியர் மீது இருந்து வந்திருக்கின்றது என்பதே உண்மை.

## 21

# மணிவிழா

நான் நீண்டகாலம் ஆசிரியராகப் பணிபுரிந்து அறுபது வயதில் ஓய்வு பெற்றேன். அறுபது வயது மணி விழாக் காலம் என்பார்கள். எனக்கும் மணி விழாக்கள் சில நடைபெறுவதற்கான ஒழுங்குகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. நான் பிறந்த கிராமப் பகுதி மக்கள் மணி விழாவுடன் மணி விழா மலர் ஒன்றினையும் வெளியிடுவதற்கான ஏற் பாட்டினைச் செய்திருந்தார்கள். அந்த மலரில் பேராசிரியரின் முக்கியமான கட்டுரை ஒன்றும் இடம் பெற்றிருந்தது. அந்த விழா நடை பெறுவதற்கு முன்னர் கொழும்பில் 'மல்லிகை பந்தல்' சார்பாக டொமினிக் ஜீவா ஒரு விழா செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். அத்துடன் இன் னொரு நிகழ்வும் அந்த விழாவில் இடம்பெற இருந்தது. 'கானலில் மான்' என்னும் எனது நாவல் பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங்கினால் அவரது புத்தக வெளியீட்டு நிறுவனத்துக்கூடாக அன்று வெளியிட்டு வைக்கப்பட இருந்தது.

நான் விழாவில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு சென்றேன். கொழும்பில் நடைபெறும் எனது மணி விழாவுக்கு வருகை தந்து வாழ்த்துத் தெரிவிக்க வேண்டிய மிக முக்கியமான ஒருவர் பேராசிரியர். ஆனால் அந்த சமயம் பேராசிரியர் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவருக்கு இடையிடையே வந்து கொண்டிருக்கும் நாரி உளைவு. எழுந்திருக்காது படுக்கையில் கிடந்தார்.

கொழும்பு, வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் குமாரசுவாமி விநோதன் மண்டபத்தில் (22.08.2002) மாலை நேரம் மணி விழா. பேராசிரியர் அப்பொழுது வெள்ளவத்தையில் தங்கி இருந்தார். விழா மண்டபத்துக்குச் செல்வதற்கு முன்னர் பேராசிரியரைச் சந்தித்துப் பேசிக் கொண்டு போக வேண்டும் என்னும் எண்ணம் எனக்கு மனதில் இருந்தது. விழாவுக்குத் தயாராகி மல்லிகையில் இருந்து புறப்படும் சமயம், எனது உள்ளத்தைப்

புரிந்து கொண்டவர் போல, ''போய்.. சிவத்தம்பியைக் கண்டு கொண்டு விழாவுக்கு வாருங்கோவன்'' என்றார் டொமினிக் ஜீவா.

நண்பர் மேமன் கவியும் நானும் சற்று முன்னதாகப் புறப்பட்டு பேராசிரியர் இல்லம் போய்ச் சேர்ந்தோம். வெளியே நின்று மேமன்கவி குரல் கொடுத்தார். பேராசிரியரின் மகள் தாரணி (கோதை) வந்து, மேமனைப் பார்த்து ''வாருங்கோ'' என வரவேற்றுக் கொண்டு திரும்புகின்ற சமயம், மேமனுக்குப் பின்னால் நான் வந்து கொண்டிருப்பதைக் கண்டு கொண்டார். விரைந்து வந்து என்னை அணைத்துக் கொண்டு ''என்ரை மாமா.. என்ரை மாமி.... மாமாவை நான் கண்டு எவ்வளவு காலம்...'' எனக் கூறி குழந்தையாகக் குழைந்து நின்றார். நான் என் மருமகளைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்து போனேன். ஒன்றா! இரண்டா! பத்து வருடங்களுக்குப் பிறகு நான் எனது மருமகள் கோதையைக் கண்டிருக்கிறேன். தொடர்ந்து எனக்கு முன்னே பேராசிரியர் படுத்துக் கிடந்த கட்டிலை நோக்கிப் போனார். ''டடி தெணியான் மாமா வந்திருக்கிறார்'' என மிகுந்த குதூகலத்துடன் எடுத்துக் கூறினார்.

பேராசிரியர் மெல்ல எழுந்து, அருகே போய் நின்ற என் தோளைத் தடவி, கண்டங்களைத் தடவி, என்னை வாழ்த்தி ஆசீர்வதித்துக் கூறினார் ''தெணி... நான் உங்களுடைய விழாவுக்கு வந்து பாராட்டி வாழ்த்தி இருக்கவேணும். எனக்கு இயலவில்லை. நான் எங்கே இருந்தாலும் என்னுடைய வாழ்த்துக்கள் உங்களுக்கு உண்டு''

எனது மணி விழா நடந்து முடிந்து விட்டதான மனநிறைவு அப்பொழுதே எனக்கு உள்ளத்தில் உருவானது.பேராசிரியரிடமும் கோதையிடமும் சொல்லிக் கொண்டு அவர்களிடம் விடைபெற்று மேமனுடன் புறப்பட்டுச் சென்றேன்.

### செம்மொழி மாநாடு

தமிழ் நாட்டில் செம்மொழி மாநாடு. அரசியல்வாதிகள் எடுக்கும் எந்த ஒரு விழாவுக்கும் அந்த விழாவுக்குரிய அடிப்படை நோக்கங்கள் ஒரு புறம் இருக்க, விழாவை நடத்திச் செல்லும் அரசியல் வாதிகளின் முக்கியமான அரசியல் நோக்கங்கள் சில அந்தரங்கத்தில் இல்லாது போய் விடுவதில்லை. செம்மொழி மகாநாட்டின் நிலையும் அது தான். தமிழ் நாட்டின் எதிரணி அரசியல்வாதியினால் முன்னொரு சமயம் அவமதிக்கப்பட்ட தமிழறிஞர் பேராசிரியர். அதனையும் உள்ளத்தில் வைத்து அப்பொழுது இருந்த தமிழ்நாட்டு முதலமைச்சர் தந்திரமாகக் காய் நகர்த்த முற்பட்டார்.



இலங்கையில் போர் முடிவடைந்து போய்விட்ட காலகட்டம். போரினால் விளைந்த துன்பம், கொதிப்பு, ஆறாத நிலை. இலங்கைத் தமிழ் மக்களுக்கு நிகழ்ந்த பேரழிவினைத் தடுப்பதற்குத் தமிழ்நாடு போதிய அக்கறை காட்டவில்லை என்பது இலங்கைத் தமிழ் மக்களிடம் இருந்து வந்த ஒரு பொதுவான அபிப்பிராயம். இன்றைக்கும் அந்தக் கருத்துப் பலரிடம் இருந்து வருகின்றது. இலங்கை விவகாரம் சர்வதேச நிலையில் வைத்து நோக்கப்பட வேண்டியது. சர்வதேச மட்டத்தில் நிகழ்ந்த காய் நகர்த்தல்களைச் சராசரி பொது மக்களால் கண்டு கொள்ள முடியவில்லையெனக் குற்றஞ் சுமத்த இயலாது. இலங்கையில் நடந்து முடிந்த போரினைச் சர்வதேச மட்டத்தில் வைத்து நோக்கும் போது தமிழ்நாடு ஒரு சுண்டைக்காய். தமிழ்நாட்டின் குரல் தமிழ்நாட்டில் அரசியல் நடத்துவதற்கே பயன்பட்டு வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில் பேராசிரியர் செம்மொழி மகாநாட்டு அழைப்பினை ஏற்று தமிழ் நாட்டுக்குப் போகலாமா? என்னும் வாதப்பிரதிவாதம் இங்கு எழுந்ததனை அனைவரும் அறிவார்கள்.

அது பற்றி கருத்து வெளியிட்ட அனைவரும் தங்கள் தங்கள் பக்கச் சார்புடன் கூறிக் கொண்டிருந்தார்கள். தமிழ் நாடு இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும் துரோகமிழைத்து விட்டதாகப் பெரும்பாலானவர்கள் எண்ணினார்கள். அதனால் தமிழ்நாட்டு அரசு விடுத்துள்ள அழைப்பினை ஏற்றுப் பேராசிரியர் தமிழ் நாடு சென்று செம்மொழி மகாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்னும் கருத்து வலுப்பெற்றிருந்தது.

இந்தக் கருத்துகளால் பேராசிரியர் உண்மையில் குழம்பிப் போனார். என்ன முடிவு எடுப்பதென்பதில் சில காலம் தெளிவில்லாது இருந்தார். ஒரு தினம் தொலைபேசியில் என்னுடன் பேசுகின்ற போது, எனது அபிப்பிராயம் என்னவென வினவினார்.

இதற்கு முன்னர் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பங்குகொள்வதற்காக தமிழ்நாடு சென்ற சமயம் பேராசிரியருக்கு நடந்தது எனக்கு நினைவுக்கு வந்தது. விமான நிலையத்தில் வைத்து அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி அவமதித்தது தமிழ்நாட்டு அரசு. அந்தத் தமிழ் நாட்டில் இருந்து அவரைக் கௌரவித்து செம்மொழி மகாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த அவமதிப்பைப் போக்க வேண்டுமானால் செம்மொழி மகாநாட்டுக்குச் சென்று கலந்து கொள்ள வேண்டுமென நான் விரும்பினேன்.

எனது விருப்பத்தை ஒளிவுமறைவின்றி மனந்திறந்து பேராசிரியருக்கு எடுத்துச் சொன்னேன். "சரி தெணி, நான் சென்று செம்மொழி மகாநாட்டில் கலந்து கொள்ளுகின்றேன்'' என்றார் பேராசிரியர்.

இந்த இடத்தில் நான் குறிப்பாக ஒன்றைச் சொல்லி வைக்க வேண்டும். மேலே குறிப்பிட்டது போன்ற முக்கியமான சந்தர்ப்பங்களில் பேராசிரியர் எனது கருத்துகளைக் கேட்டுத் தான் முடிவெடுப்பாரென நான் சொல்ல வில்லை. கருதவுமில்லை. என்னைப் போல் வேறு சிலருடன் பேசி இருக்கக்கூடும். பேசி இருப்பார். என்னிடத்திலும் இது பற்றிக்கேட்டு எனது கருத்தினை அறிந்து கொண்டார் என்பதனையே நான் தெரிவிக்க எண்ணினேன்.

என்னைப் போல சிலரிடத்தில் அபிப்பிராயங்களைக் கேட்டிருப்பார். ஆனால், முடிவினைப் பேராசிரியர் எப்பொழுதும் தாமாகவே எடுப்பார்.

## 22

## மாற்றுக் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் பேராசிரியர்

பேராசிரியர் தனது உடல் நிலை காரணமாக வெளி நடமாட்டத்தை முடிந்தவரை குறைத்துக் கொண்டார். கூட்டங்கள், விழாக்கள், கருத் தரங்குகள் என்பவற்றை மட்டுப்படுத்திக் கொண்டார். மாடிகளுக்கு ஏறிச் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் முற்றாக அவற்றைத் தவிர்த்துக் கொண்டார். பேராசிரியர் சக்கர நாற்காலியில் நடமாட வேண்டிய தேவை ஏற்பட்ட வேளையில் வெள்ளவத்தையில் இருந்து தெஹிவளைக்கு வசதியான ஒரு வீடு பார்த்து மாறிச் சென்றார்.

பேராசிரியர் வீட்டோடு தங்கி இருப்பதற்குத் தொடங்கிய பின்னர் வாரத்தில் ஒரு தடவையாவது தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். அந்தச் சமயங்களில் நீண்ட நேரம் இருவரும் உரையாடு வோம். நான் தொடர்பு கொள்ளும் வேளைகளில் யாராவது அவரோடு பேசிக் கொண்டிருந்தால் மாலையில் தொடர்பு கொள்ளுமாறு சொல்லு வார். பின்பு மாலையில் இருவரும் பேசிக் கொள்வோம். அவசியமான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பேராசிரியர் தானாக என்னுடன் தொடர்பு கொள்வார்.

பேராசிரியர் வீட்டோடு இருந்து விட்ட போதிலும் அவரது கருத்துகள் முடங்கிப் போய்விடவில்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. அவரது கருத்துகள் அபிப்பிராயங்கள் வெளியில் வந்து பேசப்பட்டுக் கொண்டிருந்தன. பேராசிரியர் சற்று மௌனமாக ஒதுங்கி இருப்பதற்கு வெளிஉலகம் அனுமதிக்கவில்லை. விட்டு வைக்கவில்லை. முக்கியமான சந்தர்ப் பங்களில் எல்லாம் ஊடகங்கள் அவரை அணுகி அவர் கருத்து களைக் கேட்டறிந்து வெளியிட்டுக் கொண்டிருந்தன.

எத்தகைய பெரிய ஓர் அறிஞனின் கருத்தாக இருப்பினும் அந்தக் கருத்துடன் அனைவரும் ஒரு முகமாக உடன்பாடு கொள்வதில்லை.

அதனை ஏற்காதவர்களும் மாற்றுக் கருத்தினை வெளிப்படுத்துகின்ற வர்களும் இருக்கவே செய்வார்கள்.

பேராசிரியரின் கருத்துகளோடு முரண்படும் கருத்துகளை நான் படிக்க நேர்ந்தால் தொலைபேசியில் உரையாடும் பொழுதில் அதனை அவருக்கு எடுத்துச் சொல்வேன். பேராசிரியரிடத்தில் ஓர் இயல்பிருக் கிறது. இன்னொருவர் தெரிவித்த கருத்தினை நாங்கள் எடுத்துக் கூறினால் அதனைக் கேட்டு அவர் திருப்திப்பட்டு விடுவதில்லை. குறிப்பிட்ட கருத்தினைத் தெரிவித்தவர் எந்தச் சொற்களைப் பயன்படுத்தினாரோ அதே சொற்களில் கூறுமாறு கேட்பார். நேரில் உரையாடிக் கொண்டிருக்கும் வேளைகளிலும் அவ்வாறு கேட்டு அறிந்து கொள்வது அவரிடம் இருந்து வந்த ஒரு வழக்கம். அப்பொழுது தான் திரிபின்றி முழுமையாக அதனை விளங்கிக் கொள்ளலாம் என்று கூறுவார். மாற்றுக் கருத்துகளிலும் ஏதாவது நியாயம் இருக்கக் கூடும். அதனை அறிந்து கொள்ள வேண்டுமென்பது தான் அவரது நோக்கம். அதற்குமேல் அவர் பெரிதாக எதனையும் எடுத்துக் கொள்வதில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விடயத்தைத் தவறாமல் குறிப் பிட்டாக வேண்டும். தொலைபேசியில் ஒரு தினம் பேராசிரியர் என்னோடு உரையாடிக் கொண்டிருந்த சமயம் புதிய விடயம் ஒன்றைக் கூறி விளங்கப் படுத்தினார். சில காலத்தின் பின்னர் இன்னொருவருடைய கட்டுரை ஒன்றினை நான் படித்துக் கொண்டிந்த போது அதிசயப்பட்டேன். அந்தக் கட்டுரையை எழுதி இருந்தவர் அடிக்கடி பேராசிரியரிடம் சென்று உரை யாடுகின்றவர் என்பதும் எனக்குத் தெரியும். குறிப்பிட்ட கட்டுரையைப் படித்த பின்னர் பேராசிரியருடன் உரையாடும் பொழுது, அவர் முன்னர் எனக்கு எடுத்து விளக்கிய கருத்து பின்னர் வேறொருவர் எழுதிய கட்டு ரையில் இடம்பெற்றிருப்பதைக் கூறினேன்.

''யார் எழுதி இருக்கிறார்'' என அவர் கேட்டார். எழுதியவர் பெயரை நான் தெரிவித்தேன். பேராசிரியர் பலமாகச் சிரித்தார். ''ஏன் சிரிக்கிறீர்கள்?'' எனக் கேட்ட போது ''அதை விடுங்கோ தெணி'' என்றார். திரும்பவும் ''இல்லை உண்மையைச் சொல்லுங்கோ நான் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும்'' என்றேன். ''அவன் முன்பும் இப்படித்தான் என்னோடு வந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு நான் தெரிவித்த கருத்துகளைக் கேட்டுக் கொண்டுபோய் தனது சொந்தக் கருத்துகள் போல் எழுதி விடுகிறான். அவனை விடுங்கோ'' எனக் கூறி அத்துடன் அந்த விவகாரத்தை விட்டு விட்டார்.

## 23

# சர்வதேச எழுத்தாளர் மாநாடு

கொழும்பில் சர்வதேச எழுத்தாளர் மகாநாடு நடத்துவதற்கான முன் ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கின. தனிப்பட்ட விருப்பு வெறுப் புகளுடனோ அல்லது தங்களை முதன்மைப் படுத்திக் கொள்வதற்காகவோ என்னதான் யார் சொன்னாலும் இந்த விழாவின் மூலமூர்த்தி எழுத்தாளர் முருகபூபதி. அவர் அவுஸ்திரேலியாவில் இருந்து விழா பற்றி ஆலோசிப் பதற்காகவும் தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்காகவும் கொழும்பு வந்து சேர்ந்தார். பேராசிரியர், ஏனைய இலக்கியப் பிரமுகர்கள், எழுத் தாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரைச் சந்தித்து, ஒன்று கூட்டி முதல் ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினர். அந்தக் கூட்டத்தில் மகா நாட்டு ஒழுங்குகளைச் செய்து அதனை நடத்தி முடிப்பதற்கான செயற் குழுக்கள், வேலைத் திட்டம், மகாநாட்டுப் பிரதிநிதிகள், மகாநாட்டு மலர் வெளியீடு, நிதி சேகரிப்பு என்பன பற்றிய தீர்மானங்களை எடுத் தார்கள்.

முதல் கூட்டத்தில் பேராசிரியர் கலந்து கொண்டு தனது வாழ்த் தினையும் கூறி ஆலோசனைகளை எடுத்துச் சொல்லி பங்களிப்பினை வழங்கினார்.

முருகபூபதி கொடுத்த விசையில் செயற்குழு செயற்படத் தொடங் கியது. பூபதி வட பிரதேசத்திற்கு வருகை தந்தார். சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டு வேலைகளுடன் இன்னுமொரு பணியினைக் கவனிக்க வேண் டிய பொறுப்பு அவருக்கு இருந்தது. கடந்த காலப் போரினால் பெற்றோரை இழந்து குடும்ப வருமானம் இல்லாதிருக்கும் மாணவர்களுக்கு நிதி உதவி செய்யும் 'இலங்கை மாணவர் நிதியம், அவுஸ்திரேலியா'வின் பொறுப்புகள் சிலவற்றை செய்து முடிக்க வேண்டி இருந்தது.

பூபதி எனது நீண்ட கால நண்பர். யாழ்ப்பாணம் வருகின்ற சமயங்களில் எல்லாம் எனது இல்லம் வந்து என்னையும் எனது குடும்பத்தவர்களையும் சந்திக்காது திரும்பிப் போனதில்லை. முன்னர் மனைவியோடும் இங்கு வந்திருக்கின்றார். கொழும்பில் இருந்து ஒரு நாள் ஹயஸ்வானில் எனது இல்லம் வந்து சேர்ந்தார். அந்த இரவு என்னோடு தங்கி இருந்தார். சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டுக்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் பற்றிச் சொன்னார். பேராசிரியர் அந்தக் கூட்டத்துக்கு வருகை தந்து கலந்து கொண்டமையைப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் எடுத்துக் கூறினார். மகாநாடு தொடர்பான எனது பகுதி சம்பந்தப்பட்ட பொறுப்புகள் சிலவற்றை என்னிடம் ஒப்படைத்து விட்டு காலையில் புறப்பட்டுச் சென்றார். மறுநாள் வேறு சிலரை சந்தித்து, பின்னர் வவுனியா சென்று தொடர்ந்து மட்டக்களப்புப் போய் அங்கிருந்து கொழும்பு வருவதாக அவர் திட்டமிருந்தது.

முருகபூபதி இயல்பில் எறும்பு போலச் சுறுசுறுப்பானவர். சோம் பிக் கிடக்க அறியாதவர். சூறாவளி வேகத்தில் எல்லா இடங்களுக்கும் சுற்றி, காண வேண்டியவர்களைக் கண்டு பேசிக்கொண்டு அவுஸ்திரேலியா திரும்பினார்.அதன் பின்னர் தான் சர்வதேச எழுத்தாளர் மகாநாட்டை மையமாக வைத்து எதிர்ப்புப் புயல் வீசத் தொடங்கியது.

'போர் நடந்து முடிந்துள்ள சூழ்நிலையில் இலங்கையில் ஒரு சர்வதேச எழுத்தாளர் மகாநாடு நடத்த வேண்டுமா? அந்த மகாநாட்டைக் கொழும்பில் தான் நடத்த வேண்டுமா? அப்படி நடத்த விரும்பினால் அதை யாழ்ப்பாணத்தில் ஏன் நடத்தக் கூடாது? அல்லது தமிழ் நாட்டில் நடத்தினால் என்ன?

மகாநாட்டுக்கு எதிரான பிரசாரம் இத்தகைய வினாக்களை அடிப் படையாக வைத்து முன்னெடுக்கப்பட்டது. இலங்கையிலும் இலங்கைக்கு வெளியிலும் தீவிரமான பிரசாரங்கள் இடம்பெற்றன. இந்த வகையான எதிர்ப் பிரசாரங்களைச் செய்தவர்களின் அந்தரங்க நோக்கம் வேறாக இருந்த போதிலும் வெளியே பொய்யான நியாயங்களைச் சொல்லிப் பிரசாரங்களைச் செய்தார்கள்.

இவைகளுடன் மிகவும் பாரதூரமான ஒரு குற்றச்சாட்டும் முன் வைக்கப் பெற்றது. அரசாங்கம் தான் இவர்களைத் தூண்டி விட்டு இந்த விழாவை நடத்துகின்றது அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இந்த விழா நடைபெறுகின்றது என்பது தான் அந்தக் குற்றச்சாட்டு.



இத்தகைய பொய்ப் பிரசாரத்தினால் உற்சாகமாக மகாநாட்டை வரவேற்றவர்கள் மத்தியில் ஒரு தளர்ச்சி ஏற்பட்டது. மேல்நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அதன் பாதிப்பு வெளிப்படத் தொடங்கியது. குழப்பமான சூழ்நிலை உருவானது.

பேராசிரியரையும் சிலர் குழப்பத் தொடங்கினர். ஆரம்பத்தில் மகாநாட்டை ஆதரித்து ஆலோசனைகளைத் தெரிவித்த பேராசிரியர் பொய்ப் பிரசாரங்களை நம்பி மகாநாட்டுக்கெதிரான கருத்துகளைத் தெரிவிக்கலானார்.

பேராசிரியர் தெரிவித்த கருத்தினால் மகாநாடு நடத்துவதற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டிருந்த மகாநாட்டுச் செயற்குழுவினரும் பூபதியும் திகைத்துப் போனார்கள். பேராசிரியர் இப்படியொரு திடீர் திருப்பம் ஏனெடுத்தார்? என்பது எல்லோருக்கும் வியப்பாக இருந்தது.

முருகபூபதி அவுஸ்திரேலியாவில் இருந்து தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டார். பூபதிக்கு நன்றாகத் தெரியும் பேராசிரியருக்கும் எனக்கும் இருந்து வந்த நெருக்கமான உறவு. அந்த உறவு காரணமாக அவரோடு நான் பேச முடியு மென்பதும் அறிந்திருந்தார். மகாநாட்டைப் பொறுத்த வரையில் எத்தகைய கருத்து நிலையில் நான் இருந்து வருகிறேன் என்பதும் உணர்ந்தவர் அவர். எனவே, பேராசிரியருடன் என்னைப் பேசுமாறு பூபதி கூறினார்.

நான் பேராசிரியருடன் தொடர்பு கொண்டேன். பேராசிரியர் சில வற்றை அப்பொழுது எடுத்துச் சொன்னார். இந்த இலக்கிய மாநாட்டுக்கு இந்த நாட்டு அரசு பின்புலமாக இருக்கின்றது என்னும் கருத்தினைப் பேராசிரியர் நம்புவதாக நான் உணர்ந்து கொண்டேன். அதனை அவர் நம்புவதற்கான இன்னொரு காரணம் இருந்து வந்ததனை நான் பின்பு அறிந்து கொண்டேன்.

ஆயினும் முதல் நாள் ''நாங்கள் பின்பு பேசுவோம்'' என உரையாடலை நான் முடித்துக் கொண்டேன்.

ஒரு நாள் இடைவெளியின் பின்னர் மீண்டும் பேராசிரியருடன் பேசினேன். ''சர்வதேச எழுத்தாளர் மகாநாடு கொழும்பில் நடைபெறப் போகின்றது. நீங்கள் பங்கு பற்றாது விட்டால் அந்த மகாநாடு ஒரு போதும் சிறப்படையாது. நீங்கள் கலந்து கொள்ளாது ஒதுங்கி இருப்பது உங்களுக்கும் பெருமையல்ல. மகாநாட்டை முன்நின்று ஏற்பாடு செய்து நடத்தும் பூபதியார்? நீங்கள் யார்? மகாநட்டுக்கு வருகை தந்து தவறாது

நீங்கள் கலந்து கொள்ள வேண்டும்'' என அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறினேன்.

பேராசிரியர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு "அக்காவும் போகும்படிதான் சொல்லுகிறா, தெணி. சரி, நான் வாறன். ஏறி இறங் குகிற பிரயாணந் தான் கஷ்டம். நீங்களும் வருவியள் தானே '' என்றார்.

பேராசிரியர் இறுதியாக எடுத்துள்ள முடிவினை நான் பூபதிக்குச் சொன்னேன்.இங்கு நான் இன்னொன்றைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

பேராசிரியர் மகாநாட்டுக்கு வருவதற்குச் சம்மதிக்கச் செய்தது தானே தான் என எழுத்திலும் சிலர் பதிவு செய்து வைத்திருக்கின்றார்கள். அவரை உடன்படச் செய்வதற்குப் பெரும் பாடுபட்டதாகவும் சொல்லி வைத்திருப் பதாக எனக்கொரு ஞாபகம். அது போலவே நானும் இதனைச் சொல்ல வேண்டி இருக்கிறதே என்பது மனதுக்குச் சங்கடமாக இருக்கின்றது. ஆனால், உண்மை உண்மையே தான். இந்த உண்மையை அறிந்த ஒருவர் உண்டென்றால் அவர் முருகபூபதி ஒருவர் தான்.

இங்கு இன்னுமொன்றையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இப்ப டியான விடயங்களில் அக்காவின் பெயரை ஒரு நாளும் அவர் குறிப்பிடு வதில்லை. அன்று அக்காவின் பெயரை ஏன் குறிப்பிட்டார்? பேராசி ரியரின் உடல் நிலை காரணமாக வெளியே ஊடாடித் திரிய இயலாமையை மனதில் கொண்டு அப்படி கூறி இருக்க வேண்டு மென நான் உணர்ந்து கொண்டேன்.

## 24

# பேராசிரியரின் இறுதிப் பதிவு

எனது நூல் வெளியீடு பற்றிப் பேராசிரியர் எனக்கு ஆலோசனை சொன்னார்.

சென்ற ஆண்டு வெளிவந்திருக்கும் எனது இரண்டு நூல்களுள் ஒன்று 'ஒடுக்கப்பட்டவர்கள்'. அந்த நூல் என்னைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான ஒரு நூலாக நான் கருதுகின்றேன். தனியொரு படைப் பாளியின் சாதியம் பற்றிய இருபத்தைந்து சிறுகதைகளை உள்ளடக்கிய ஒரு நூல் என்ற வகையில் தமிழுக்குத் தனித்துவமான, வித்தியாசமான ஒருதொகுப்பு என்பது எனது எண்ணம். அந்த நூலினைப் பூபாலசிங்கம் புத்தக நிலையம் தனது வெளியீடாக அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

அந்த நூலின் வெளியீட்டு விழாவைச் சிறப்பாகக் கொழும்பில் செய்து முடிக்க வேண்டுமென விரும்பினேன். இதற்கு முன்னர் எனது மூன்று நூல்களின் வெளியீட்டு விழாக்களும் ஒரு நூலின் அறிமுக விழாவும் கொழும்பில் நடைபெற்றிருக்கின்றன.

இந்த நூலுக்குரிய வெளியீட்டு விழாவைக் கொழும்பில் நடத்துவது சம்பந்தமாக வதிரி சி.ரவீந்திரன், மேமன் கவி, டொமினிக் ஜீவா ஆகிய நண்பர்களுடன் தொடர்பு கொண்டு ஆலோசித்தேன். எல்லாத் தொடர்பும் ஆலோசனையும் தொலைபேசி ஊடாகத்தான் நடைபெற்றன. அவர்கள் விழா நடத்துவதற்கான ஒழுங்குகள் யாவையும் தாங்கள் செய்து தருவதாக உடன்பட்டிருந்தார்கள்.அவர்களுடன் தொடர்புகொண்டு இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்தபோதிலும் எனக்குள்ளே ஒரு தயக்கம். நான் நீண்ட காலமாக எழுதிக் கொண்டிருப்பதனால், பலராலும் அறியப்பட்ட வனாக இருந்தபோதிலும் கொழும்பு இலக்கிய அபிமானிகளுக்குப் புதியவன். நூல் வெளியீட்டு விழாக்களுக்கு வருகை தருகின்றவர்கள் பெரும்பாலும் உறவினர்கள், நண்பர்கள், அறிமுகமானவர்கள் எனத்

தனிப்பட்ட தொடர்புள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். நான் கொழும்பில் வாழவுமில்லை, அடிக்கடி சென்று விழாக்கள், கூட்டங் கள், வெளியீடுகளில் கலந்து கொள்ளவுமில்லை. இந்த நிலையில் நூல் வெளியீட்டுவிழாவினை கொழும்பில் எப்படி நடத்துவது என எனக்குள் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

எதற்கும் பேராசிரியரிடம் இது பற்றிக் கேட்போமென ஒரு தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன். நான் எடுத்துக்கூறிய விபரங்கள் எல்லாவற்றையும் பேராசிரியர் கேட்டறிந்து கொண்டு தெளி வாகக் கூறினார். 'தெணி, நீங்கள் சொன்னதில் நியாயம் இருக்கிறது. ஆனால், இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரேயொரு வழி இருக்கிறது. உங்களுடைய புத்தகம் பூபாலசிங்கம் வெளியீடு தானே!. வெளியீட்டாளர் ஸ்ரீதர்சிங் ரெலிபோனை அடித்து நாலு பேருக்குத் தகவல் சொன்னால் முழுப்பேரும் வருவார்கள். கூட்டத்தைத் தமிழ்ச் சங்கத்தில் நடத்துங்கோ.'

பேராசிரியர் கூறிய ஆலோசனை எனக்குத் திருப்தியாக இருந்தது. பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் உதவி செய்வார் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், வேறு சிலகாரணங்களினால் நான் திட்டமிட்டபடி கொழும்பில் வெளியீட்டு விழாவை நடத்த முடியாமல் போயிற்று. வடமராட்சியில் எனது பிரதேசத்தில் அந்த வெளியீட்டு விழா நடந்து முடிந்தது.

இலக்கியக்காரர் சிலரால் பேராசிரியர் மீது ஒரு குற்றச்சாட்டு பிற்காலத்தில் வைக்கப்பெற்றது நான் அறிவேன். ஈழத்து நவீன இலக்கியம் பற்றிய மதிப்பீடு, ஆய்வு என்பவற்றை எழுதும் சமயங்களில் எல்லாம் அங்கு எனது பெயரையும் சாந்தனின் பெயரையும் தொடர்ந்து குறிப் பிட்டுக் கொண்டு வருகின்றார் என்பது தான் அந்தக் குற்றச்சாட்டு. இவ்வாறான குற்றச்சாட்டு தெரிவிக்கப் பெற்ற சமயத்தில் இதுபற்றி பேராசிரியரிடம் நான் வினவினேன்.

"அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட பின்னர் நான் திரும்பி நோக்குகையில் அவ்வாறுதான் எழுதி இருக்கின்றேன் என்பது உண்மை. ஆனால், அது குற்றமல்ல. முற்போக்கு இலக்கியத்தின் ஒரு குறிப் பிட்ட தலைமுறை என்று நோக்கும் போது அதுசரி. தெணியான் அந்தத் தலைமுறையின் சரியான வாரிசு. தெணியானை மாத்திரம் குறிப்பிட்டி ருந்தால் நட்பின் காரணமாகச் சொல்வதாகக் குற்றஞ்சாட்டலாம். சாந்த னும்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றார்" என அதற்குரிய விளக்கத்தினைப் பேராசிரியர் எடுத்துக் கூறினார்.



பேராசிரியர் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் எனக்கு மன நெருடலை யும் மனக்கசிவையும் ஏற்படுத்தியது என்பதனை தவறாமல் குறிப்பிட்டாக வேண்டும். கனடாவில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'காலம்' காலாண்டு சஞ்சிகை சிறப்புப் பகுதி தெணியான் மலர் ஒன்றினை வெளியிட்டு வைப்பதற்கான பிராரம்ப வேலைகளைத் தொடங்கியது. அதற்கான வேலைகளைக் காலம் ஆசிரியர் செல்வம், எனது தம்பி க.நவம் (க.நவரத்தினம்) ஆகிய இருவரும் கவனித்துக் கொண்டார்கள். அந்த மலரில் இடம்பெற வேண்டிய, என்னைப் பற்றிய தகவல்கள் சிலவற்றை என்னிடம் இருந்து பெற்றுக் கொண்டார்கள். அந்த மலரில் எழுத வேண் டியவர்கள் யார்யாரெனத் தீர்மானித்து அவர்களே தொடர்புகளை ஏற் படுத்திக் கொண்டார்கள்.

அவர்கள் தீர்மானித்துக் கொண்ட பெயர்களுள் பேராசிரியரின் பெயர் முதற்பெயராக இடம்பெற்றிருந்தது என்பது ஆச்சரியப் படத்தகுந்த ஒன்றல்ல. எனது தம்பி பேராசிரியரின் தொலைபேசி இலக்கம் என் னிடத்தில் கேட்டுக் குறித்தெடுத்துக் கொண்டார். பேராசிரியருடன் தொலை பேசியில் நான் உரையாடுகையில் இது பற்றி ஒரு தகவலும் அவருக்குத் தெரிவிக்கவில்லை. உரிய முறையில் கனடாவில் இருந்து தொடர்பு கொண்ட பின்னர் நான் பிரஸ்தாபிப்போமென இருந்து விட்டேன்.

இந்தச் சமயம் கொழும்பில் இருந்து நண்பர் ஒருவர் வழியாக எனக் கொரு தகவல் வந்து சேர்ந்தது. கனடா 'காலம்' சஞ்சிகை எனக்கொரு சிறப்பு மலர் வெளியிடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் செய்தி எப்படியோ கசிந்து பேராசிரியருக்குப் போய்ச் சேர்ந்திருக்கின்றது. அப்பொழுது பேராசிரியர் "காலம்' தெணியானுக்கு ஒரு மலர் போடு கிறதாமே" எனக் கேட்டிருக்கின்றார்.

அந்தச் செய்தி எனக்கு வந்து சேர்ந்தது. நான் உண்மையில் திகைத் துப் போனேன். மனம் நெகிழ்ந்து போனேன். பேராசிரியர் என்மீது கொண்டுள்ள அன்பையும் மதிப்பையும் நினைந்து இறுமாந்தேன். மல்லிகை அட்டையில் எனது உருவப் படத்தினை மார்ச் 1989இல் ஜீவா இடம்பெறச் செய்த வேளையில் என்னைப் பற்றிய அறிமுகம் எழுதியவர் பேராசிரியர். எனது மணிவிழா மலர் (2002) வெளிவந்த போது அந்த மலரில் பேராசிரியரின் கட்டுரையே முதற்கட்டுரையாக இடம் பெற்றிருந்தது. 'மரக்கொக்கு', 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' நாவல்கள் பேராசிரியரின் அணிந்துரைகளுடன் வெளி வந்திருக்கின்றன.

இவைகள் மாத்திரமல்ல, தமது நூல்களிலும், வெவ்வேறு இடங்களில் எல்லாம் பேராசிரியர் எனது பெயரைப் பதிவு செய்திருக்கின்றார்.

பேராசிரியர் யாருக்கும் யாரைப் பற்றியாவது வலிந்து கேட்டு எழுதிக்கொடுக்கும் நிலையிலா இருக்கின்றார்? தங்கள் எழுத்துகள் பற்றி பேராசிரியரின் கணிப்பினைப் பதிவு செய்ய வேண்டுமென்னும் அந்தரங்க ஆவல் எத்தனை படைப்பாளிகள் உள்ளங்களில் இருந்து வருகின்றன. இத்தகைய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பேராசிரியர் விசாரித்த செய்தி என்னை மிகவும் சங்கடப்படுத்தியது.

கனடாவுக்கு தம்பியுடன் தொடர்பு கொண்டேன். தனது அவகாச மின்மையே தாமதத்துக்குக் காரணம் எனத் தெரிவித்து விட்டு, பேராசி ரியருடன் தொடர்பு கொண்டார். பின்னர் பேராசிரியருடன் நான் பேசும் பொழுது கனடாவில் இருந்து தம்பி தன்னோடு பேசிய தகவலை அவர் தெரிவித்தார்.

இக்கால கட்டத்தில் பேராசிரியரின் கண் பார்வையில் குறைபாடு தோன்றிவிட்டது. பத்திரிகைகள், புத்தகங்கள் வாசித்துக் காட்டுவதற் கும், தான் சொல்வதனை எழுதுவதற்கும் ஓர் உதவியாளரை பேராசிரியர் நியமித்து வைத்திருக்கின்றார் என்பது எனக்குத் தெரிந்த தகவல். எனவே, உடனடியாகக் கட்டுரை ஒன்றினை எழுதித் தருவதில் அவருக்கிருக்கும் சிரமத்தை நான் விளங்கிக் கொண்டேன். நான் தொலைபேசியில் பேசிக் கொண்டிருப்பதனை விட கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் யாரா வது ஒருவர் நேரிற் சென்று சந்தித்து கட்டுரை பெற்றுக் கொள்வதே பொருத்தப்பாடுடையது எனக் கருதினேன்.

கொழும்பில் நடந்தேற வேண்டிய எனது காரியங்களைச் செய்து முடித்து உதவுவதற்குச் சில நண்பர்கள் அங்கு இருக்கின்றார்கள். அவர் களுள் குறிப்பிடத் தகுந்த ஒருவர் கவிஞர் வதிரி சி.ரவீந்திரன். விபரமாகத் தகவல்களை அவருக்கு எடுத்துக் கூறினேன். பேராசிரியர் போன்ற ஒரு பெரிய மனிதனுடன் தொலைபேசியில் இந்த விடயங்களைப் பேசக் கூடாதென அவர் கருதி, மட்டக்குளியில் இருந்து தெகிவளைக்குச் சென்று பேராசிரியரைச் சந்தித்தார். பேராசிரியர் தனது உதவியாளரின் வருகையைக் கணத்தில் கொண்டு குறித்த ஒரு தினம் வருமாறு அவருக்குக் கூறி அனுப்பினார். இவ்வாறு மூன்று தடவைகள் சென்று அலைந்து நான்காவது தடவை கட்டுரையை அவர் கையிற் பெற்றுக் கொண்டார். அந்தக் கட்டுரையின் பிரதியைக் கனடாவுக்கு அனுப்பி வைத்ததுடன்



அதன் மூலப்பிரதியைத் தபாலில் எனக்கு அனுப்பினார். அந்தக் கட்டு ரையில்,

> தெணியானின் புனைகதைகள் இல்லையெனின், நிச்சயமாக வடமராட்சி யினது சமூக வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதி தெரியாமலே போய்விடும். 'மாத்து வேட்டி','பொற்சிறையில் வாடும் புனிதர்கள்', 'மரக்கொக்கு' என வரும் எழுத்துக்கள் இல்லையெனின் நிச்சயமாக வடமராட்சி வாழ்க்கையின் முழுமையை நாம் அறிந்து கொள்ள முடியாது. அந்த வகையில் தெணியானது நாவல்கள் மிக முக்கியமானவையாகும். 'உண்மையில் தெணியான் இந்த வளர்ச்சிக் கட்டத்தினை உருவகித்து நிற்கிறாரென்றே கருதுகின்றேன். உதாரணமாக நம்மிடையே உள்ள பிராமணச் சமூகத்தின் அவலங்கள் பலவற்றை 'பொற்சிறையில் வாடும் புனிதர்கள்' என்ற நாவல் மூலம் எடுத்துப் பேசுகின்றார். இக் கண்ணோட்டத்தில் பார்க்கும் பொழுது 'மரக்கொக்கு' ஒரு மிக அற்புத மான நாவலாகும். கொக்கு மீன் பிடிக்கும். ஆனால், மரக்கொக்கு..அது கொக்கு போல இருக்குமே தவிர, கொக்கை நினைவுறுத்துமே தவிர, கொக்கின் பணியை பயன்பாட்டைத் தர முடியாது

என முக்கியமான சில கருத்துகளை பதிவு செய்து வைத்திருக்கின்றார். இந்தக் கட்டுரை 'காலம்' சிறப்புப் பகுதி - தெணியான் மலரில் (இதழ் 33 அக்டோபர் டிசம்பர் 2009) முதற் கட்டுரையாக இடம் பெற்றிருக்கின்றது.

பேராசிரியர் தனது கையெழுத்தில் எனது நூல்களுக்கெழுதித் தந்துள்ள அணிந்துரைகள் ஏனைய கட்டுரைகள் என்பவற்றை எனது பொக்கிஷம் போலப் பேணிப் பாதுகாத்து வைத்திருக்கின்றேன். 'காலம்' சஞ்சிகைக் கட்டுரை பேராசிரியரின் கையெழுத்தில் இல்லாதபோதும், உதவியாளரின் கையெழுத்தில் இருந்தபோதிலும் அவரது கட்டுரை என்ற வகையில் அந்தக் கட்டுரைகளுடன் இடம்பெற்றுள்ளது.

ஒடுக்கப்பட்டவர் நூல் பற்றிய ஒரு மதிப்பீட்டினைப் பேராசிரியரைக் கொண்டு எழுதுவிக்க வேண்டுமென விரும்பினேன். அவ்வாறான எனது விருப்பத்துக்கு அடிப்படையில் ஒரு காரணம் எனக்கு மனதில் இருந்தது. பேராசிரியர் வட பிரதேசத்தில் வாழ்ந்த காலத்தில் வெளிவந்த எனது நூல்கள் அவரது கவனத்துக்கு உட்படுவதற்கான வாய்ப்பு இருந்து வந்திருக்கின்றது. வட பிரதேசத்துக்கு வெளியே பேராசிரியர் சென்ற பின்னர், அக்கால கட்டத்தில் நூல்களை அனுப்பி வைப்பத்திலும் அவருடன் தொடர்பு கொள்வதிலும் இருந்து வந்துள்ள இடையூறுகள் காரணமாக, அது தவிர்க்கப்பட்டுப் போயிற்று. அதனால்தான் முதலில்

வெளிவந்த எனது நாவல்கள் பற்றியே பேராசிரியர் பேசும் நிலைமை உருவானது. நாவலாசிரியராக மாத்திரம் என்னை நோக்கும் ஒரு நிலை தோன்றியது. எனவே 'ஒடுக்கப்பட்டவர்கள்' சிறுகதைத் தொகுப்புக்கு ஒரு மதிப்பீடு பேராசிரியரிடம் எழுத வேண்டுமென விரும்பினேன்.

நூல்களை தாமே வாசிப்பதில் பேராசிரியருக்கு இருந்து வருகின்ற சிரமம் எனக்குத் தெரியும். ஆயினும் இடையிடையே அவரது எழுத்துக்கள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருப்பதனைக் கவனத்தில் கொண்டு எனது நூலுக்கு மதிப்பீடொன்று எழுதுமாறு கேட்டுக் கொண்டேன்.

எனது கோரிக்கையைக் கேட்டு, உடனே பேராசிரியர் உடன்பட்டார். நூற்பிரதி ஒன்றை வதிரி சி.ரவீந்திரன் மூலம் அவரிடம் சேர்ப்பித்தேன். அவரால் ஒரு மதிப்பீட்டினை உடனடியாக எழுதுவதற்கு இயலவில்லை. பிறரில் தங்கி இருக்க நேரும் பொழுது ஒரு மனிதனுக்கு வாழ்க்கையிற் சம்பவிக்கும் இயலாமைகள் பற்றி நான் உணராதவனல்ல. பேராசிரியருக்கும் அந்தச் சிரமங்கள் இருக்கவே செய்தன. சிலதினங்கள் நூல் வாசித்துக் காட்டும் உதவியாளர் வராமல் இருப்பார். சிலவேளைகளில் அவசரமான இன்னொரு வேலை வந்து முன் நிற்கும். பிறிதொரு நாள் நூல் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது பேராசிரியருடன் பேசுவதற்காக ஒருவர் வந்திருப்பார்.

இந்த நிலையில் பேராசிரியர் எழுதிமுடித்து விட்டால், பத்திரிகைக்கு எப்படிக் கொண்டு சேர்ப்பது என்பது இன்னொரு பிரச்சினை. தினக்குரல் வார மலர் ஆசிரியர் இ.பாரதிக்கு எனது நிலைமையை எடுத்துச் சொல்லி பேராசிரியரிடம் மதிப்பீட்டினைப் பெற்று பிரசுரித்து உதவுமாறு கேட்டுக் கொண்டேன். இப்படி, காலம் கடந்து போய்க் கொண்டிருந்த சமயத்தில் பேராசிரியருக்கு ஒருதினம் மீண்டும் நினைவுபடுத்தினேன்.

"தெணி நேற்று வாசிப்பதற்கு ஆரம்பித்த போது, முக்கியமான ஒருவர் வந்து தடைப்பட்டுப் போச்சு. இரண்டு நாட்களில் தினக்குரலுக்கு எழுதிக் கொடுக்கிறேன்" எனக் கூறினார். பின்னர் தினக்குரல் வாரமலரில் பேராசிரியர் எழுதிய சுருக்கமான நூல் மதிப்பீடு வெளிவந்தது. அந்த மதிப்பீட்டில்...

> 'நாவலாசிரியர் ஒருவர் என்ற வகையிலேயே நான் இதுவரை தெணியானை அறிந்துள்ளேன். ஏறத்தாழ 30 வருடகால நட்புறவு நிலையில் அவரது நாவலாசிரியர் தன்மையே எனது மனதில் வலுவாக வேரூன்றி இருந்தது.
>
> இப்பொழுது இந்தச் சிறுகதைத் தொகுதியை வாசிக்கும் போதுதான் தெணியானது படைப்பிலக்கிய ஆளுமையின் பூரணத்துவத்தை உணருகின்றேன் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும்.... தெணியானின் 25 சிறுகதைகள் இதிலே இடம்பெற்றுள்ளன. இத்தொகுதியின் மிக முக்கியமான அம்சம் இவற்றின் கால 'வெளி' 40 வருடங்கள் என்பதாகும். இந்தக்கால ஓட்டத்தின் ஊடே தெரியவரும் தெணியானின் படைப்பிலக்கிய ஆக்கத்திறமையின் தொடர்ச்சி காணப்படுகின்றதென்பதும் இலக்கிய வரலாற்று நிலையில் இவை சாதியத்தின் மாறிவந்துள்ள வெளிப்பாட்டு முறைமைகளையும் காட்டுகின்றன எனலாம்'.



பேராசிரியர் இவ்வாறு பதிவு செய்துள்ளார். நான் பேராசிரியரிடத்தில் கேட்டுக் கொண்டதன் பேரில் தனது உடல்நிலைசார்ந்த பலவீனத்துடன் இதனை அவர் எழுதினார். ஆனால், இந்த எழுத்து இன்று என்னை மிகவும் வருத்திக் கொண்டிருக்கும் ஒன்றாக அமையப் போகின்றது என்பது அப்பொழுது நான் உணர்ந்து கொள்ள முடியவில்லை. என்னைப் பற்றி எனது எழுத்துகள் பற்றி பேராசிரியர் இறுதியாகப் பதிவு செய்துள்ள எழுத்து இது என்பது என் நெஞ்சை மிகவும் உறுத்துகின்றது

# 25

# இனி யாரிடம் கேட்பேன்

கொழும்பு, வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் சர்வதேச எழுத்தாளர் மாநாடு. நான் யாழ்ப்பாணம், வடமராட்சியில் இருந்து புறப்பட்டு கொழும்பு சென்று முதல் நாள் (06.01.2011) காலை தமிழ்ச் சங்கத்துக்குப் போகின்றேன். அன்று தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற இருந்தன. நான் அங்கு சென்ற சமயம் மண்டபத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பலர் கூடி நின்றனர். நான் அங்கு போய்ச் சேருவதற்கு முன்னர் பேராசிரியர் விழா மண்டபத்துக்கு வந்து சேர்ந்து விட்டார். அவரால் விழா நடைபெறும் மேடைக்கு ஏறிச் செல்ல இயலாது. அரங்கு மேடைக்குக் கீழே ஒரு ஓரமாகக் கதிரை போட்டு பேராசிரியர் அதில் அமர்ந்திருக்கின்றார். பேராசிரியருக்கு முன்னே தமிழ் நாட்டில் இருந்து வந்திருக்கும் முனைவர் பட்டத்துக்காக ஆய்வு செய்து கொண்டிருக்கும் மாணவி அமர்ந்திருந்து அவரிடம் பல விடயங்களையும் கேட்டுக் குறித்துக் கொண்டிருக்கின்றார். பேராசிரியருக்கு அருகே இன்னொரு கதிரை வைக்கப்பட்டிருந்தது. நான் "சேர்" என அழைத்த வண்ணம் அந்தக் கதிரையில் சென்று அமர்கின்றேன். "தெணி இருங்கோ" என எனது தோளில் ஒரு தடவை தடவி விட்டுக் கொண்டு அந்த மாணவியுடன் தொடர்ந்து பேசுகின்றார்.

அப்பொழுது இருந்த சூழ்நிலையை உணர்ந்து அந்த மாணவி தனது உரையாடலை முடித்துக் கொண்டு எழுந்து செல்லுகின்றார். பேராசிரியரும் நானும் எங்கள் சுகநலன்கள் பற்றிப் பேசிக் கொள்கின்றோம். பொன்னுத்துரை அந்தச் சமயம் அங்கு வந்து எங்களைப் படம் பிடித்துக் கொள்கின்றார். 'ஜீவநதி' பிரதம ஆசிரியர் பரணீதரன், துணை ஆசிரியர் துஷ்யந்தன் இருவரும் அருகே வருகின்றார்கள். பரணீதரன் 'ஜீவநதி' பிரதி ஒன்றினைக் கையில் கொடுக்க அதனைப் பேராசிரியர் பார்த்துக் கொண்டிருந்த சமயம், புகைப்படம் எடுத்துக் கொள்கின்றார்கள். விழா ஆரம்பமாவதற்குரிய



நேரம் நெருங்கி விட்டது. நான் பேராசிரியரிடம் சொல்லிக் கொண்டு அங்கிருந்து எழுந்து சென்று சபையில் அமருகின்றேன்.

பேராசிரியரின் தொடக்க உரையைத் தொடர்ந்து விழா நடைபெற்று நடுப்பகலுடன் அன்றைய காலை நேர நிகழ்வுகள் நிறைவடைகின்றன. பேராசிரியரை வாகனத்தில் ஏற்றி அழைத்துச் செல்கின்றனர். அன்று பேராசிரியரை நேரில் நான் சந்தித்தேனேயொழிய இருவரும் மனந்திறந்து பேசிக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக அது இருக்கவில்லை.

சர்வதேச எழுத்தாளர் மாநாடு நான்கு தினங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. அந்த நான்கு தினங்களும் மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்னும் முடிவோடு தான் நான் இருந்தேன். இதேசமயம் நான் யாழ்ப்பாணம் திரும்பி வருவதற்கு முன்பு, பேராசிரியரைச் சந்தித்துப் பேசிக் கொண்டு ஊருக்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்னும் எண்ணம் மனதில் இருந்தது. விழா நிறைவடையும் நான்காவது நாளன்று மாலையில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்படுவதாக என்னோடு சேர்ந்து வந்தவர்களின் திட்டம். அவர்களுடன் அந்த வாகனத்தில் நான் ஊர் வந்து சேர்ந்து விட வேண்டும். மகாநாட்டுக் காலத்தில் ஒரு தினம் எப்படியும் பேராசிரியரைச் சென்று சந்திக்க வேண்டுமென எண்ணிக் கொண்டிருந்தேன்.

மகாநாடு நடந்து கொண்டிருக்கும் மூன்றாவது தினம் காலை நேர நிகழ்வுகள் யாவும் முடிவடைந்து, மதிய உணவும் முடிந்து, மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகிவிட்ட வேளை, நான் சற்றுக் களைப்படைந்து போய் இருந்தேன். தமிழ்ச் சங்கத்தின் பிரதான வாசலுக்கு உள்ளே சுவரோரமாக சீமெந்தினால் நீளமாக அமைக்கப் பெற்றுள்ள ஆசனத்தில் ஓய்வாக அமர்ந்திருந்தேன். நண்பர் அந்தனி ஜீவா வழமையான அவரது அவசரத்துடன் என்னை நோக்கி வந்தார். "தெணியான் சேர் வாங்கோ. பேராசிரியர் சிவத்தம்பி வீட்டுக்குப் போய் வருவோம்" என்றார். தொடர்ந்து "தமிழ் நாட்டிலே இருந்து வந்திருக்கிற ஆய்வு மாணவி அவரோடு பேச வேண்டுமாம். இப்ப சாப்பிட்டு விட்டுப்படுத்திருப்பார். நீங்கள் வந்தால் பிரச்சினை இல்லை. ஹயஸிலே போவோம்" எனக் கூறினார். நான் மறு பேச்சில்லாது புறப்பட்டு விட்டேன்.

பேராசிரியர் வீட்டில் அக்கா தான் வெளியே வந்து வரவேற்றார். நான் வந்திருக்கும் செய்தியை பேராசிரியருக்கு தெரிவித்தார். நான் பேராசிரியரின் கட்டிலருகே சென்ற போது அவர் எழுந்திருந்து வரவேற்றார். முதலில் தனது காலைக் காட்டினார். "இங்கே பாருங்கோ தெணி, மகா

நாட்டுக்கு வந்த போது காலிலே மிதித்துப் போட்டார்கள்'' என்றார். அதன் பிறகு மகாநாடு பற்றி என்னோடு பேசினார். ஆய்வுத் தேவைக்காக வந்திருக்கும் மாணவியைக் காத்திருக்க வைக்கக் கூடாது என்னும் நோக்கத் துடன் அந்த மாணவியையும் அந்தனி ஜீவாவையும் பேராசிரியருடன் இருந்து பேசுமாறு விட்டு நான் எழுந்து சென்றேன்.அக்கா வந்திருந்து என்னுடன் பேசினார்.''தெணியான், சேர் சொன்னாலும் கேட்கிறார் இல்லை. நான் டொக் டரிடம் காட்டி மருந்து வாங்கிக் கொடுக்கிறேன். கால் புண்ணுக்கு டொக்டர் வந்து மருந்து கட்டிப் போகிறார். இங்கே என்ன நடக்கிறது என்றால், வருகின்றவர்கள் மருந்தெழுதிக் கொடுத்து மருந்தும் வாங்கிக் கொடுக்கிறார்கள். மூன்று நேரம் குடிக்க வேண்டியதை ஒரு நேரம் குடித்து விட்டு இருந்து விடுகிறார். எனக்குத் தெரியாமல் விருப்பமான சில சாப்பாடுகளைத் தின்று விடுகிறார். இதனாலே அவருக்குத் தான் கஷ்டம். டொக்டரிடம் அலைய வேண்டி இருக்கு. நீங்கள் ஒருக்கால் சொல்லுங்கோ தம்பி''.அக்கா சொல்லும் வரை எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்கிறேன். பின்பு ''அக்கா நான் இப்போது சொல்ல முடியாது தானே! ஊருக்குப் போய்க் கதைக்கிறேன்'' என்று கூறுகின்றேன்.

பின்னர் பேராசிரியரிடம் சென்று சொல்லிக் கொண்டு புறப்பட்டு அவர்களோடு சேர்ந்து திரும்புகிறேன்.பேராசிரியருக்கு வாசிப்பதற்கு இயலாது, எழுதுவதற்கு இயலாது, இன்னொருவரை உதவிக்கு வைத்தே, வாசிக்கும் எழுதும் தனது செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார் என்பதனை முன்னரே அவர் எனக்குக் கூறி இருக்கின்றார். அந்த நிலை மையை அன்று நான் நேரில் அவதானித்தேன்.

நான் ஊருக்கு திரும்பிய பிறகு முன்னர் போலத் தொலைபேசியில் பேராசிரியருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் உடல் நிலையை மனதில் நினைத்துக் கொண்டு அடிக்கடி தொடர்பு கொள்வேன். சில சமயங்களில் எனது சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு அவரிடம் வினவுவேன். பேராறு பெருகி வருவது போல யாவையும் மிகத் தெளிவாக எடுத்து விளக்குவார். இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் சமயங்களில் ''தெணி எனக்கு எழுபத்தொன்பது வயதாகி விட்டது'' என இடையிடையே எனக்குக் கூறுவார்.

நான் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் வரும் கடைசி வெள்ளிக் கிழமை தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்குச் சில ஆண்டு களாக சென்று வரும் வழக்கம் உண்டு. சந்நிதியான் ஆச்சிரமம் கலைப்பண் பாட்டுப் பேரவை மாதந்தோறும் வெளியிட்டு வரும் 'ஞானச்சுடர்' சஞ்சி



கையை அதன் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மதிப்பீட்டுரை ஆற்றி வருவேன். சந்நிதியான் ஆச்சிரமம் பெரும் அரும்பணிகள், சமூக சேவைகள் பல செய்து வருவதுடன் அந்த ஆலயச் சூழலில் தங்கி இருக்கும் அநாதரவான ஏழை மக்களுக்குத் தினமும் அன்னதானம் செய்யும் தொண்டும் என்னை மிகவும் கவருகின்றது.

நான் வருடத்தில் ஒரு தடவை தொண்டமானாறு சந்நிதி முருகன் ஆலயத்துக்குச் சென்று வரும் செய்தியினைப் பேராசிரியருடன் பேசும் பொழுது தெரிவித்தேன். அப்பொழுது பேராசிரியர் உடனே, ''தெணி, சந்நிதியானின் விபூதி, சந்தனம் எடுத்து எனக்கு அனுப்புங்கோ'' என்றார். பேராசிரியர் நன்றாக நொந்து பலவீனப்பட்டு போனார் என்பதனை நான் உணர்ந்து கொண்டேன். ''சந்நிதி முருகன் ஆலயத்துக்கு மாலை நேரம் சென்று, அந்தச் சூழலில், ஆலய வீதியில் மணலில் சிறிது நேரம் அமர்ந்திருந்தால் மனதுக்கு அமைதியும் ஆனந்தமாகவும் இருக்கும்'' என முன்னர் ஒரு தடவை பேராசிரியர் எனக்குக் கூறியதை நினைவு கூர்ந்து கொண்டேன்.

அடுத்த வாரம் சந்நிதி முருகன் ஆலயத்துக்கு எனது மனைவியை அனுப்பி வைத்து விபூதி, சந்தனம் பெற்று நண்பர் ஒருவர் மூலம் பேராசிரி யருக்குக் கொடுத்து அனுப்பினேன்.பேராசிரியர் மீண்டும் ஒரு தினம் ''வயது எழுபத்தொன்பதாச்சு. நான் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது'' எனக் கூறினார். அப்பொழுது நான், ''தொண்ணூறு... நூறு வயதிலும் இளைஞர்கள் போலச் சிலர் இருக்கி றார்கள். உங்களுடைய வயது பெரிய வயதல்ல. நீங்கள் யாருக்கும் பாரமுமல்ல. குழந்தைகளைத் தகப்பன் தாய் கவனித்து வளர்த்து விட்டது போல, அவர்களுடைய முதுமைக் காலத்தில் பிள்ளைகள் கவனிப்பார்கள். நீங்கள் சுகப்பட்டு எழும்புவீர்கள்'' எனப் பேராசிரியருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினேன்.

கொழும்பு சென்ற சமயம் பேராசிரியர் இல்லம் சென்று அவரைக் கண்டு பேசிக் கொண்டு திரும்பிய கவிஞர் ஒருவர் ஒரு தினம் என்னைச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர், ''பேராசிரியர் சிவத்தம்பியின் உடல் இயங்கவில்லை. தலை எந்த வித குறைபாடும் இல்லாது இப்போதும் இயங்கிக் கொண்டிருக்கிறது'' என என்னிடம் கூறினார். நான் கேட்டு உள்ளூரத் திகைத்துப் போனேன். ஆனால், தனது சிந்தனையில் எந்த விதமான குழப்பமும் வந்து விடக்கூடாதென்னும் எண்ணம் பேராசிரியர் உள்ளத்தில் இருந்து வந்தது நான் அறிவேன். அந்த வகையில் மனதுக்கு ஆறுதலாகவும் எனக்கிருந்தது.

திரும்ப ஒரு நாள், “நாரி நல்லா உளையுது... எழுந்திருக்க முடிய வில்லை'' எனப் பேராசிரியர் கூறினார். படுக்கையில் படுத்துக்கிடந்து கொண்டே தொலைபேசியில் என்னோடு உரையாடினார்.வழமை போல அன்று நீண்ட நேரம் கதைத்தார். தன்னைப் பற்றி எதனையும் அவர் வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளவில்லை. ஆனால், தனது இறுதிக்காலம் பற்றி தீர்க்கமான எண்ணம் அல்லது முடிவு அவர் மனதில் இருக்கிறது என்பதனை நான் லேசாக உணர்ந்து கொண்டேன். அதேசமயம் பேராசிரியர் மனம் அதற்காகச் சஞ்சலப்பட்டதாக எனக்குத் தோன்ற வில்லை. பேராசிரியரின் இழப்புப் பற்றி அப்பொழுது நான் நினைத்துப் பார்த்தேன் என்று சொல்ல முடியாது. நெஞ்சுக்கு நெருக்கமானவர்களின் இழப்பினை முன்கூட்டி நினைத்துப் பார்க்கும் மனவலிமை எனக்கில்லை. பேராசிரியர் இன்னும் பல காலம் வாழவேண்டுமென விரும்பினேன். அதனால் அதற்கு மேல்...

பின்னர் ஒரு நாள் தொலைபேசியில் பேசும் பொழுது அக்கா கூறி னார். “சாப்பிடாமல் கிடக்கிறார். இப்படியே கிடந்தால் என்னாகிறது! சாப்பிடச் சொல்லி ஒருக்கால் சொல்லுங்கோ தெணியான்''

அடுத்த நாள் பேராசிரியருடன் தொடர்பு கொண்டேன். பேரா சிரியர் என்னுடன் பேசினார். ''பேசுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது தெணி'' என்றார். ''சரி பின்னர் உங்களுடன் பேசுகிறேன்'' எனக் கூறி விட்டு தொலைபேசித் தொடர்பினைத் துண்டித்துக் கொண்டேன்.

அதன் பிறகு பேராசிரியருடன் தொடர்பு கொள்வதில் மனதில் எனக் கொரு தயக்கம் இருந்தது. பேசுவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் அவருடன் தொடர்பு கொண்டு அவருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என்று மனதில் எண்ணினேன்.

பேராசிரியர் உடல் நிலை சரியில்லாது இருக்கும் இந்தத் தருணத்தில் அக்கா, பிள்ளைகள் எப்படியோ! கோதை தனது பணிக்காக வீட்டில் இருந்து வெளியே போய் வருகின்றவர். மற்றைய இருவரும் இப் பொழுது கொழும்புக்கு வந்திருக்கமாட்டார்கள். அக்கா தனித்து நிற் பார். பேராசிரியரைக் கவனிப்பதற்கு அவர்கள் வைத்துக் கொண்ட பெரும்பான்மை இனத்தவர் உதவியாக அங்கு நிற்பர்.

இத்தகைய சூழ்நிலையில் அடிக்கடி நான் தொலைபேசியில் அவர்க ளுடன் பேசுவது அவர்களுக்குத் தொல்லை எனக் கருதினேன். மூன்று தினங்கள் தொடர்பு கொள்ளாது மௌனமாக இருந்தேன். எப்படி நான் என்னைக் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள விரும்பிய போதும் மனம் கேட்பதாக இல்லை. பேராசிரியர் எப்படி இருக்கிறார் என்பதனை அறிந்து விட வேண்டுமென மனம் துடித்துக் கொண்டிருந்தது. அந்தத் துடிப்பு உண்மையில் அவர் சுகமாக இருக்கின்றார் என்னும் செய்தியாக இருக்க வேண்டும் என்பது தான் அடிமனத்தின் ஆசை.நான்காவது நாள், பேராசிரியருடன் பெரும்பாலும் நான் தொடர்பு கொள்ளும் காலை சுமார் பத்து மணி அளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

“ஐயா உறங்கிவிட்டார்'' என எனக்குத் தகவல் கிடைத்தது. பேராசிரி யருக்கு உதவியாக இருந்த பெரும்பான்மை இனத்தவர் சிங்களத்தில் அதனைக் கூறினார்.

பேராசிரியர் ஓய்வாக அமைதியாக உறங்குவது அவருக்கு நல்லது. அவரைக் குழப்பக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன். அக்கா பற்றியோ, பிள்ளைகள் பற்றியோ அவரிடத்தில் விசாரித்து அறிவதற்கு எனக்கு சிங்கள மொழியில் அத்தகைய பாண்டித்தியமில்லை. அவர் தகவல் சொல்லிக் கொண்ட முறையில் பேராசிரியர் சுகமாக உறங்கிக் கொண்டிருக்கின்றார் என்றே நான் அர்த்தம் கற்பித்துக் கொள்ளக் கூடிய தாக இருந்தது.

நான் அடிக்கடி பேசிக் கொண்டிருப்பதனால் விளையக் கூடிய நன்மை தான் என்ன? பேராசிரியரின் சுகத்தை அது அதிகரிக்குமா? என எண்ணிக் கொண்டு இரண்டு தினங்களின் பின்னர் மீண்டும் பேசுவோம் எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

நான் பேசி ஒரு நாள் கடந்த பின்னர் 06.07.2011 புதன்கிழமை இரவு ஒன்பது மணி போல எனது தொலைபேசி ஒலிக்கிறது. கையில் எடுத்துப் பேசுகின்றேன். பேராசிரியர் காலமான செய்தி சி. ரவீந்திரன் சொல்ல என் செவியில் வந்து விழுகின்றது. நான் அதிர்ந்து போகின்றேன். வீட்டில் எல்லோருக்கும் இந்த துயரமான செய்தியைச் சொல்லுகின்றேன். தொடர்ந்து அரை நேரத்துக்குள் கொழும்பில் இருந்து லெனின் மதிவானம், மேமன் கவி, தி. ஞானசேகரன் ஆகிய மூன்று நண்பர்களும் துயரமான அந்தச் செய்தியைத் தெரிவிக்கின்றார்கள்.

எனது இதயத்தை பிழிந்தெடுத்த அந்தத் துயரத்தை எல்லாம் மீறி, அந்தக்கணம் எனக்குள் எழுந்த கேள்வி:

இனி யாரிடம் கேட்பேன்?
யார் எனக்கு எடுத்துரைப்பார்!
இந்த வினாக்களுக்கு எனக்கு விடையே இல்லை.

# நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா.சிவத்தம்பி

தெணியான்



தெணியான் தான் சொல்பவற்றைச் சுவைபடச் சொல்லும் திறன் கைவரப் பெற்றவர். இவரது எழுத்துக்களிலே வடமராட்சியின் வாழ்வியல் 'வாய்திறந்து பேசுவதை'க் காணலாம். மானுடநேயம் மிக்க தெணியான் எதிர்க்கருத்தாளர்களையும் மதிக்கும் பண்புள்ளவர். ஆனால் தமது கருத்துநிலையில் இருந்து 'கிஞ்சித்தும்' மாறாதவர். சிறுமைகண்டு பொங்கும் இயல்புடையவர். அண்மையில் காலமான எமது பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பியுடன் தாம் கொண்டிருந்த நெருக்கமான உறவைத் தெணியான் 'தினக்குரல்' பத்திரிகையிலே தொடராக எழுதினார். தெணியானுடன் தொடர்புடையவர்களும் பேராசிரியரைத் தெரிந்தவர்களும் அந்தக்கட்டுரையைத் தேடித்தேடிப்படித்ததை நான் அறிவேன். பேராசிரியரைப் பற்றி அக்கட்டுரையிலே தெணியான் குறிப்பிட்டவை யாவும் உண்மையென்பதை நான் முழுமையாக அறிவேன். ஆனால் உண்மைகள் எல்லாவற்றையும் எழுதினாரோ தெரியாது. ஏனெனில் தெணியான் நயத்தக்க நாகரிகம் பேணுபவர். பேராசிரியர் சிவத்தம்பியும் தெணியானும் ஒருவரை ஒருவர் நன்கு நேசித்தவர்கள். கம்பனின் மொழியிற் கூறுவதானால் 'இருவரும் மாறிப் புக்கிதயம்' எய்தியவர்கள். தெணியான் பயிற்றப்பட்ட தமிழாசிரியர். அவரது எழுத்துக்களிலே அவர் சொல்லும் செய்தியும் மொழியும் கைகோர்த்து உலாவரும். பேராசிரியர் சிவத்தம்பியின் வாழ்வை அறிய, ஆராய விரும்புவோருக்குச் சிறந்தவோர் ஆவணமாகவும் இந்த நூலைக் கருதலாம்.

- பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

குமரன் புத்தக இல்லம்

விடயம்: வாழ்க்கை வரலாறு

ISBN 978-955-659-344-0

விலை ரூபா 400.00

# 530